தினமணி வெளியீடு: 5 பதிப்பாசிரியர்: பி. ஸ்ரீ.

சிறு கதை மஞ்சரி

'பாலையா'

எஸ். வையாபுரிப் பிள்ளை எழுதிய முன்னுரையுடன்



"இருள் அகற்றும்
கைவிளக்கே கற்ற அறிவுடைமை"

தினமணி காரியாலயம்
100, மவுண்டு ரோடு
சென்னை
1944

[விலை ரூ. 1

தினமணி வெளியீடு—4

போலந்து—பின்லந்து

போர் மூண்ட இடம் போலந்து. இன்று எதிரிகள் வசமான நாடுகளில் பின்லந்து ஒன்று தான் ஜன நாயக நாடு. இந்த இரு நாடுகளின் வரலாறுகள் இந்நூலின் விஷயம். தமிழ் நாட்டு மக்கள் அயல் நாட்டுப் பிரச்னை களில் அக்கரை கொள்ள வேண்டும் என்னும் நோக்கத் தோடு எழுதியது :

மஹா கனம் வி. எஸ். ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார் தமது அருமையான முன்னுரையில் பின் வருமாறு கூறி யுள்ளார்.

"போலந்தையும் பின்லந்தையும் பற்றிச் சரி யாகவும், படிக்கக்கூடிய முறையிலும் திரு. கிருஷ்ணமூர்த்தி எழுதியிருக்கிறார். அவ்விரு நாடுகளின் சரித்திரத்தை இந்நூலில் காணலாம். ஒரு மக்களின் குணமறிய அதன் பூர்வ சரித்திரம் தெரியவேண்டும். அப்போதே அதன் கஷ்டத்தையும் போக்கையும் மதிப்பிட முடியும். சென் றதும் இருப்பதும் தெரிந்தாலே வரப் போவதை ஒருவாறு ஊகிக்கலாம். நூலில் அதிகமாக விஷயங்கள் தரப்பட்டிருக்கின்றன."

124 பக்கங்கள் விலை அணா 12

பொருள் அடக்கம்

தினமணி வெளியீடு

இலக்கிய ஆலோசனையாளர்கள்

ஸ்ரீமதி. எஸ். அம்புஜம்மாள்,
ஆழ்வார்பேட்டை, சென்னை.

திரு. கே. சந்திரசேகரன்,
மயிலாப்பூர், சென்னை.

திரு. ஏ. என். சிவராமன்,
"தினமணி" ஆசிரியர்.

திரு. கே. சுவாமிநாதன்,
ஆங்கிலப் பேராசிரியர்,
ப்ரெஸிடென்ஸி காலேஜ், சென்னை.

திரு. டாக்டர் டி. எஸ். திருமூர்த்தி,
நுங்கம்பாக்கம், சென்னை.

திரு. கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியார்,
சரித்திரப் பேராசிரியர்,
சென்னை யூனிவெர்ஸிடி.

திரு. ஸி. என். முத்துரங்க முதலியார்,
பேட்டை, செங்கற்பட்டு ஜில்லா.

திரு. ஏ. வி. மெய்யப்ப செட்டியார்,
ஸரஸ்வதி ஸ்டோர்ஸ், பிரகதி பிக்சர்ஸ்,
சென்னை.

திரு. எஸ். வையாபுரிப் பிள்ளை,
தமிழ் ஆராய்ச்சித் துறைத் தலைவர்,
சென்னை யூனிவெர்ஸிடி.

முன்னுரை

‘எந்த ராமாயணத்திலாவது ஸீதையில்லாமல் ராமன் காட்டிற்குப் போனதாகக் கேள்விப்பட்டிருக்கிறீரா? இல்லை. ஆகையால் என்னை நீர் உடன் கூட்டிச் செல்ல வேண்டியது அவசியம்’ என்று ராமனிடம் ஸீதை கூறியதாக அத்யாத்ம ராமாயணம் தெரிவிக்கிறது. முன்னுரையில்லாமல் புஸ்தகமே வெளிவந்ததாக இதுவரை கேள்விப்பட்டதில்லை. ஆகையால் முன்னுரை அவசியம் தானே!

இந்நூலில் அடங்கிய சிறு கதைகள் பற்பல பத்திரிகைகளின் விசேஷ மலர்களுக்குப் ‘பாலையா’ எழுதியவைகள். இவைகளை மதிப்பிடுவது இம்முன்னுரையின் நோக்கமல்ல. ஆனால் சிறு கதையைப் பற்றி ஒரு சில விஷயங்களைச் சொல்லவேண்டுவது அவசியம்.

பல மொழிகளிலுமுள்ள தற்கால இலக்கியங்களில் சிறு கதைகளுக்கு ஓர் உயர்ந்த ஸ்தானம் கிடைத்திருக்கிறது. அவற்றை எழுதியவர்கள் எச். ஜி. வெல்ஸ், தாமஸ் ஹார்டி, ஸ்டீவென்ஸன், செஸ்டர்டன் முதலிய பேரறிஞர்கள். இவர்கள் ஆங்கில மொழியில் பெரும் புலமை வாய்ந்தவர்கள். தமிழில் பெரும் புலவர்கள் சிறு கதைகள் எழுதினார்களென்று நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? இல்லை. காரணம் என்ன? தமிழில் தற்காலத்திற்குரிய ஓர் இலக்கிய வகை சிறுகதை யென்பதை இத் தமிழ்ப் பேரறிஞர்கள் உணர்ந்து கொள்ளாமைதான். ‘கதை’ என்றாலே இகழ்ச்சி. இவர்கள் இப்பொழுதும் புராணங்கள், சாத்துக் கவிகள் முதலியனவும், பண்டைப் பழந்தமிழிற் கட்டுரைகளும் எழுதித் தம் காலத்தை வீண்போக்குகிறார்கள். தமிழிலக்கிய வளர்ச்சியைப் பெரும்பாலும் பேணுவதில்லை. சிறுகதை பேரிலக்கியமாகவுங்கூடும் என்ற உணர்ச்சியே இவர்களுக்கு இல்லை.

ஆனால், சிறுகதை எழுதுவது என்பது எளிதான காரியமல்ல. சுவையான நிகழ்ச்சிகளை, சுவையான

முறையில், பொருளுக்கேற்ற நடையில் அமைத்துச் சிறு கதை எழுதவேண்டும். மனோபாவனையும் உணர்ச்சி விளக்கும் ஆற்றலும் வேண்டும். இவைகள் எல்லாருக்கும் வாய்க்குமா?

சிறுகதைக்குரிய விஷயங்கள் நம்மைச் சுற்றிச் சூழப் பெருவாரியாய்க் கிடக்கின்றன. அவற்றுள் இயையும் சுவையுமுள்ள நிகழ்ச்சியைத் தெரிந்தெடுத்தல் வேண்டும். இவ்வாறு தெரிந்தெடுப்பதும் எல்லார்க்கும் முடியாது. ஓர் உதாரணம்: ஓர் இளைஞர்; நல்ல அறிவாளி; நன்றாக எழுதும் ஆற்றலுள்ளவர். அவர் தம் வாழ்நாளிற் பெரும் பகுதியை வட இங்கிலாந்திற் கழித்தார். அவ்விடத்தில் தமது ஆற்றலுக்கேற்ற நூல்-விஷயம் மிகுதியாக இல்லையே என்று அதிக வருத்தமடைந்தார். எப்படியாவது லண்டன்மா நகருக்குச் சென்றால், எத்தனையோ வகைகளில் கருத்திற்கு ஏற்ற விஷயங்கள் கிடைக்கக் கூடுமென்று நினைத்து ஏங்கிக்கொண்டிருந்தார். கடைசியாக லண்டனுக்கு வந்து சேர்ந்தார். அங்கேயுள்ள பரபரப்பும், வியாபார முயற்சிகளின் நெருக்கடியும், அரசியல் நெறியின் வக்ர கதியும், பொதுஜனங்கள் இன்பந்தேடியலையும் வாழ்வுச் சுழற்சியும் கண்டு பிரமித்துப் போய் விட்டார். கருதிய விஷயமொன்றும் அவருக்குக் கிடைக்கவில்லை; வெறுங்கையோடு வீடு திரும்பினார். அதே சமயத்தில் லண்டனிலுள்ள ஓர் இளைஞர்; எழுத்தாளனுக்கு வேண்டுந் தகுதிகளெல்லாம் வாய்ந்தவர்; கிராம வாழ்க்கையைப் பற்றி ஒரு நூல் எழுத முயன்றுகொண்டிருந்தார். முன் குறித்த இளைஞரது ஊருக்கே சென்று சிலகாலந் தங்கி அங்குள்ள வாழ்க்கை நிலையை நன்றாக நோக்கி யுணர்ந்தார். தாம் விரும்பிய விஷயங்கள் ஏராளமாகக் கிடைத்தன. அவற்றை யெல்லாம் நன்றாகப் பயன்படுத்திச் சிறந்த நூலொன்றை எழுதி வெளியிட்டுப் புகழ்பெற்றார்.

சிறு கதைகள் பல திறப்படும். காதற் கதைகள், துப்பறி கதைகள், சாஹஸக் கதைகள் என்பன இவ்

வகையுள் ஒரு சில. இவற்றை எழுதித் தன்னிகரில்லா வெற்றி பெறுவது மிகவும் அருமை. இவைகள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியான ஆற்றல் வேண்டும். இவ்வாற்றல்களைக் குறித்து விவரிப்பது இம்முன்னுரைக்குப் புறம்பானது. ஆனால் ஒன்று மாத்திரம் கூறுவேன். பல வகைப்பட்ட சிறுகதைகளும் எழுதுவதிற் பெரும் பெயர் பெற்ற ஆசிரியர்களது நூல்களை மீண்டும் மீண்டும் கற்று அவற்றின் நலங்களைக் காரணத்தோடு தெரிந்து உணர்ந்தவர்களுக்குத்தான் இத்துறையில் வெற்றி பெறுதல் இயலும். நமது நாட்டில் ரவீந்திரநாத டாகுர் என்ற பெருங் கவிஞர் சிறு கதைகள் பற்பல எழுதியிருக்கிறார். இவைகள் மனுஷ்யப் பிரயத்தனத்திற்கு அப்பாற்பட்ட அபூர்வ மேதாவிலாஸத்தால் தோன்றியன. என்றாலும், இவைகளை நன்றாகக் கற்றால் சிறு கதையின் பேரெல்லையை ஒருவாறு உணரக்கூடும்.

தமிழ் எழுத்தாளர்கள் கையாளவேண்டும் தமிழ் நடையைக் குறித்துச் சில வார்த்தைகள் சொல்ல வேண்டாமா? அலங்கார நடை அழகைக் கெடுத்துவிடும். பொருளின்றி அள்ளி வீசும் சொல்லடுக்குக் கல்லடுக்குத்தான். மிகைச் சொற்கள் நூலுக்குப் பகையே யன்றி வேறில்லை. இவைகளை யெல்லாம் அறவே ஒழித்தல் வேண்டும். சம்பாஷணைக்குரிய நடையைக் குறித்து அன்டோனி ட்ராலோப் சொல்லுவதைக் கீழே தந்திருக்கிறேன்:

'பொதுமக்களின் சாதாரணப் பேச்சு சிறிய, கூரிய, விளக்கமுள்ள வாக்கியங்களாக இருக்கும். இவை பெரும்பாலும் முற்றுப்பெறாத வாக்கியமாகவும் அமையும். கற்றவர்கள்கூட இலக்கணப் பிழையுள்ள பேச்சுக்களைப் பேசுவார்கள். கதையாசிரியன் சம்பாஷணையை அமைக்கும்பொழுது நடு நெறியிலே செல்லுதல் வேண்டும். இலக்கண நெறி சிறிதும் தவறாது திருத்தமாயமைந்த சம்பாஷணையை ஒருபுறம் ஒதுக்கவேண்டும். இவ்வழுவற்ற சம்பாஷணை 'பாண்டித்ய படாடோபமே' யாகும்.

மற்றொருபுறம் பொது ஜனங்கள் சாதாரணமாகப் பேசும் இலக்கண வழுக்கள் நிரம்பிய அருவருப்பான சம்பாஷணை வாக்கியங்களையும் ஒதுக்கவேண்டும்: இவ்வழுவான சம்பாஷணை, நிகழ்ந்தபடியே எழுதினால், பொதுஜனங்களை வலித்துக்காட்டி நகைப்பது போலாகும்.

இயற்கையில் நிகழ்ந்த பேச்சை அப்படியே பெயர்த்தெழுதுவதானால் வேடிக்கை காட்ட முயற்சிசெய்வது போல் தோன்றும். இலக்கணமாய்த் திருத்தமாய் எழுதுவதானால் இயற்கையோடு பொருந்தாமல் பொய்யாகிவிடும். இவ்விஷயத்தில் மக்களின் இயற்கைதான் எப்பொழுதும் எழுத்தாளனுக்கு வழிகாட்டியாக இருத்தல் வேண்டும். ஆனால், இவ்வாறு மக்களியற்கையைப் பின்பற்றுவதில் தன் கையிலுள்ள கருவி பேனா என்பதையும், மக்களியற்கையை உணரவல்ல வாசகர்கள் தன்னிடத்துக் கலைத்திறமையையும் எழுத்து வன்மையையும் எதிர் பார்க்கிறார்கள் என்பதையும், எழுத்தாளன் நன்றாக ஞாபகத்தில் வைத்தல் வேண்டும்.'

இவ்வாறு கூறிய ஆசிரியர் இறந்து சுமார் ஐம்பது வருஷங்களாகின்றன. ஆனால் அவர் சொல்லியது எப்பொழுதும் இறவாத உண்மை. தமிழாசிரியர்கள் இவரது கொள்கையைப் பின்பற்றி எழுதுதல் அவசியமாகும்.

இச் சிறுகதை மஞ்சரிக்கும் பெரிய முன்னுரையா?

மேலே குறித்துள்ளவைகளை மனத்திற் கொண்டு வாசகர்கள் இந்நூலை வாசிக்க வேண்டுகிறேன்.

சென்னை
4—9—1944

எஸ். வையாபுரிப் பிள்ளை

மணிமுடி மாளிகை

‘ரங்கா! ரங்கா! எனக்கு வேண்டும் உடுப்புகளெல்லாம் எடுத்தாச்சோ? போகும் இடங்களில் திண்டாடக் கூடாது. ஜாக்கிரதையாய் எடுத்துவை’ என்றார் என் அப்பா.

எனக்கு அப்பாவும் அப்பாவுக்கு நானுந்தான் உண்டு. இன ஜன பந்துக்களாக யாரும் இருப்பதாகத் தெரியாது. நாங்கள் இருப்பது திருவனந்தபுரம், தைக்காடு. என் அப்பா ராமநாதபிள்ளை ஒரு டாக்டர். வைத்தியத்தில் பேர் பெற்றவர். ஏராளமான வரும்படி. திருவனந்தபுரத்திலுள்ள செல்வமுள்ள பெருங்குடும்பங்களில் எங்கள் குடும்பமும் ஒன்று.

எனது தாயார் காலகதியாகிச் சுமார் பத்து வருஷங்கள் கழிந்துவிட்டன. இந்த நிகழ்ச்சிக்குப் பின், என் அப்பா மகிழ்வோடிருந்ததை நான் பார்த்ததே இல்லை. எப்போதும் ஆழ்ந்த சிந்தனையிலேயே இருப்பார்.

எனக்குப் பதினெட்டு வயதாகிவிட்டது. S. S. L. C. தேர்ந்து, இண்டர்மீடியட் பரீக்ஷைக்குப் போயிருக்கிறேன். எனக்கு வீட்டில் துணையாயிருந்தது ஒரு பாட்டி. அவள்தான் வீட்டு வேலையைக் கவனித்துக் கொள்வது.

விடுமுறைக் காலத்தில் டில்லி முதலான இடங்களுக்குப் போய் வரவேண்டுமென்பது எனது ஆசை. இதை ஒரு நாள் அப்பாவிடம் பேசிக்கொண்டிருக்கும் போது, தற்செயலாய்க் கூறிவிட்டேன். என் வார்த்தையைக் கேட்டதும், என் அப்பா சிறிது நேரம் ஆலோசனையில் ஆழ்ந்துவிட்டார். அவருக்கு வெறுப்பாயுள்ளதைச் சொல்லி விட்டோமோ என்று எனக்குச் சிறிது பயம் தோன்றியது. அவர் முகத்தையே ஊன்றிப் பார்த்துக் கொண்டிருந்தேன். ஒரு பெருமூச்சு விட்டு, ‘போவோம்’ என்று சம்மதித்தார்.

எதையும் முன் கூட்டி ஆலோசித்து முறைப்படச் செய்வது என் அப்பாவின் வழக்கம். பிரயாணம் போவது என்று தீர்மானித்ததும் பல இடங்களிலுமுள்ள நண்பர்களுக்கு எழுதத் தொடங்கினர். தினம் இரண்டு மூன்று கடிதங்கள் எழுதிக் கொண்டேயிருந்தார். பிரயாணத் திட்டம் ஒன்று அமைத்து என்னிடம் காட்டினர். மதுரை, திருச்சினுப்பள்ளி, பட்டணம், ஆக்ரா, டில்லி, காசி, கல்கத்தா முதலிய நகரங்களிலே சில நாள்களேனும் தங்குவதாக ஏற்பாடு. எல்லா இடங் களிலும் ஹோட்டலில் இருந்துவிட வேண்டும் என்று நினைப்பு. தாம் எழுதிய கடிதங்களுக்கு வந்த மறுபடிகளில் சிலவற்றை என்னிடம் வாசித்துக் காட்டினர். அவற்றி லெல்லாம் அவருடைய நண்பர்கள் அவரிடம் கொண்டுள்ள மதிப்பும் அன்பும் வெளியாயின.

எங்கள் பிரயாண தினம் நெருங்கியது. மன நிம்மதி எனக்கு இல்லை, என் அப்பாவுக்கும் இல்லை. ரெயில் மார்க்கத்தை 'கயிட்' மூலமாகத் தெரிவதும், ஒவ்வோரிடத் திலுமுள்ள முக்கியமான பார்வைத் தலங்களைக் குறித்து வாசிப்பதும், இன்னின்ன நண்பர்கள் இன்னின்ன இடங்களில் இருக்கிறார்கள் என்று விலாசங்களை அறிவதும்தான் வேலையாக முடிந்தது. புறப்படுந் தினத்திற்கு முந்தின இரவுதான் கடைசி முறையாக, உடுப்பு முதலியவற்றைக் குறித்து என் அப்பா கேட்டது.

ரெயில் பிரயாணம் தொடங்கியது. நான் வெகுதூரம் ரெயிலில் சென்றிராதவள். ஆதலால் மிகவும் உத்ஸாகத் தோடு இருந்தேன். வழியிற் காணும் ஊர்கள், பெரிய கட்டடங்கள் முதலியவை எல்லாம் பற்றிக் கேள்விகள் கேட்ட வண்ணமாயிருந்தேன். மேற்கு மலைத் தொடர் வழியாகச் செல்லும்போது அங்குள்ள காட்சி என்னை முற்றிலும் வசீகரித்து விட்டது. இருபக்கங்களிலும் பச்சைப் பசேலென்று கண்ணுக்கெட்டிய தூரம்வரை பசுமை பூத்துக் கிடந்தது. கண்குளிர உள்ளங்குளிர நோக்கி மகிழ்ந்தேன்.

காலை ஏழு மணிக்கு மதுரை வந்து சேர்ந்தோம். அப்பாவின் நண்பரொருவர் வந்து ஸ்டேஷனில் எங்களைச் சந்தித்தார். எங்கள் ஜாகைக்கு அழைத்துச் சென்றார். எங்களுக்கு வேண்டிய சௌகரியங்களை எல்லாம் ஏற்கெனவே செய்திருந்தார். இங்கே மூன்று நாள் தங்கியிருந்து பார்க்க வேண்டிய அனைத்தையும் பார்த்து முடித்தோம். சொக்கலிங்கர் மீனாட்சியம்மை தரிசனமும் கிடைத்தது. இப்படியே திருச்சினாப்பள்ளிக்கும் சென்று அங்கும் மூன்று நாள் தங்கி நகர் முழுதும் சுற்றிப் பார்த்தோம். தாயுமானார் கோவிலுக்கும் ரங்கநாதர் கோவிலுக்கும் போய்த் தரிசனம் செய்தோம். அப்பாவின் நண்பரொருவர் இங்கேயும் வேண்டிய வசதி செய்திருந்தார்.

திருவனந்தபுரத்திலிருந்து புறப்பட்ட எட்டாம் நாள் சென்னபட்டணம் வந்து சேர்ந்தோம். இங்கே அப்பாவுக்குத் தெரிந்தவர் யாரும் வரவில்லை. நேரே 'எவரெஸ்ட் ஹோட்டல்' போய்ச் சேர்ந்தோம். ஒரு வாரம் தங்க நேர்ந்தது. அப்பாவும் நானும் பல இடங்களுக்கும் சென்றோம். பல காட்சித் தலங்களையும் கண்டோம். சென்னையை நோக்க, திருவனந்தபுரம் ஒரு சிற்றூராகவே தோன்றியது.

இங்கிருக்கும் பொழுது ஒருநாள் காலையில் என்னை ஹோட்டலில் விட்டு, அப்பா மட்டும் வெளியே சென்றார். தனியே எங்கே போகிறார் என்று சிறிது ஆத்திரத்தோடு நான் இருந்தேன். பதினொரு மணிக்குத் திரும்பினார். நாங்கள் இருவரும் சாப்பாடு முடிந்து உட்கார்ந்து கொண்டிருந்தோம். அப்பா ஏதோ சொல்ல விரும்புகிறார் என்று தோன்றிற்று. சிறிது நேரம் கழித்து மெல்ல மெல்லச் சொன்னார். இதுவரையும் எனக்குத் தெரியாத குடும்ப விஷயமாயிருந்தது.

அப்பாவுக்கு விசாலாட்சி என்று ஒரு தங்கை இருந்தாள். அவள் நல்ல அழகும் கல்வியும் உடையவள். திருவனந்தபுரத்தில் கலாசாலையில் வாசித்து வந்தாள். அவளோடு கிருஷ்ணசுவாமி என்றொருவரும் வாசித்து

வந்தார். இவர் எங்கள் இனத்தவராயிருந்தாலும் வைஷ்ணவர்; மிகவும் ஏழை. இவரை முழுமனதுடன் இந்த அம்மாள் காதலித்து விட்டாள். இவள் நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவளாதலினாலும், அழகும் செல்வமும் வாய்ந்தவளாதலினாலும் பல செல்வர்கள் இவளை மணம் பேசி வந்தார்கள். என் அப்பாவுக்கும் அவர் பெற்றோருக்கும் ஒரு செல்வக் குடும்பத்தில் இவளை வாழ்க்கைப் படுத்த வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. ஆனால் இவள் அதற்குச் சிறிதும் இணங்கவில்லை. தன் தாயாரிடத்தில் 'மணப்பதானால் கிருஷ்ண சுவாமியை மணப்பேன். வேறொருவரைக் குறிப்பிடுவதானால் நான் தற்கொலை செய்து கொள்வேன்' என்று உறுதி கூறிவிட்டாள். இது வெளிப்பரவு முன் இவள் அன்பு பூண்டவர்க்கே மணம் செய்து கொடுத்து விடுவதென்று என் அப்பா வாதாடினார். ஆனால், கலியாணம் ஆனதற்கப்புறம், தங்கள் முகத்திலே விழிக்க வேண்டியதில்லை; எல்லாவிதமான பற்றும் அற்றுப் போய் விட்டதென்று வைத்துக்கொள்ள வேண்டும் என்று விசாலாட்சி அம்மாளிடம் என் அப்பாவும் அவர் பெற்றோரும் சொல்லிவிட்டார்கள். விசாலாட்சியம்மாள் சிறிது தயங்கினாள். முடிவில் 'அப்படியே' என்றுஒத்துக் கொண்டாள். கலியாணம் நடந்தது. மணப் பெண்ணுக்கு ஏராளமாகப் பணங் கொடுக்கப்பட்டது. நாலாம் நாள் தம்பதிகள் சென்னபட்டணத்திற்கு வந்து விட்டார்கள். எனது பாட்டி மட்டும் தன் மகளை நினைத்து அடிக்கடி வருந்துவதுண்டாம்; வேறொருவரும் நினைப்பதேயில்லை.

இரண்டு குடும்பமும் முற்றும் பிரிவுபட்டு 25 வருஷம் ஆகிவிட்டது. நன்மை தின்மை விசாரணை கூடக் கிடையாது. எனது அப்பாவின் கலியாணம், எனது பாட்டனார் பாட்டி மரணம் முதலியவற்றிற்குக் கடிதம் கிடையாது. அப்படியே கிருஷ்ணசுவாமிப் பிள்ளையின் மரணம் முதலியவற்றிற்கும் கடிதம் கிடையாது.

25 ஆண்டுகளுக்குப் பின் இன்று காலையில்தான் விலாசத்தை வெகுசிரமப் பட்டுக் கண்டு பிடித்துத் தம்

தங்கையைப் போய்ப் பார்த்து வந்தார். நீண்ட காலமாக மனத்திலேயிருந்த வேதனை இன்று சிறிது நீங்கியவர் போல் என் அப்பா எனக்குப் புலப்பட்டார். ஒருவரை யொருவர் கண்டதும் தங்கை ஓடிவந்து 'அண்ணு' என்று அலறிப் பாதங்களில் விழுந்து புலம்பினுளாம். அப்பாவும் மிக்வும் வருந்தினுர் என்பதை அவர் கண்கலக்கமே எனக்குத் தெரிவித்தது.

தங்கைக்கு ஸ்ரீநிவாசன் என்ற ஒரேயொரு மகன உண்டென்றும், அவன் சென்னை ஸர்வ கலாசாலையில் பீ. ஏ-ல் மிக்க சிறப்புடன் தேர்ச்சி பெற்று இங்கிலாந்துக்கு மேற்படிப்பின் பொருட்டுச் சென்று மூன்று ஆண்டுகள் தங்கிக் கற்று, திரும்ப வந்து, ஆசிரியனுக வேண்டும் என்ற நோக்கத்தோடு பெனரஸ் விசுவ வித்யாலயத்திற்குச் சென்றிருக்கின்றுனென்றும் சொல்லி முடித்தார். அன்று மாலை 4-மணிக்குத் தம் தங்கை என்னைப் பார்க்க ஹோட்டலுக்கு வரப்போவதாகவும் சொன்னுர்.

எனக்கும் அத்தையைப் பார்க்க வேண்டும் என்ற ஆராமை உதித்தது.

நாலு மணிக்கு ஒரு குதிரை வண்டி வந்து நின்றது. வண்டிக்காரன் வந்து அப்பா பெயரைச் சொல்லி அவர் இருக்கும் அறையை விசாரித்தது எங்கள் காதிற்பட்டது. உடனே அப்பா வண்டியருகில் சென்று தம் தங்கையை அழைத்து வந்தார். அறைக்குள் வந்ததும் என்னைப பார்த்து அருகில் வந்து என்னைப் பிடித்துக்கொண்டு பேசமுடியாமல் பொருமினுள்.

பின் 'உன் தாயாரைப் பார்க்கக் கூடிய பாக்கியம் எனக்கு இல்லாமற் போய்விட்டது, உன்னையாவது பார்க்கக் கொடுத்து வைத்ததே' என்று சொல்லி என்னை நெருக்கி அணைத்துக் கொண்டாள். மிக்க அன்போடு என்னைப்பற்றி விசாரித்துக் கொண்டிருந்தாள். வெகு நேரமாய்ப் பேசிக் கொண்டிருந்தோம். என்னையும் அப்பா

ளையும் உடனே அழைத்துப் போக வந்திருப்பதற்கவும் அவள் வீட்டிலேயே தங்கவேண்டுமென்றும் கூறினாள். நான் அப்பாவைப் பார்த்தேன். அவர் முகத்தில் திருப்தி காணப்பட்டது. அவர் தங்கையைத் தம்மோடு கூட ஹோட்டலில் அன்றிரவு தங்கும்படியாகச் செய்து மறுநாள் அவள் வீட்டுக்குச் செல்வதாகக் கூறினார்.

மறுநாள், அத்தை வீட்டுக்குச் சென்றோம். ராயப் பேட்டையில் மிகப் பெரிய வீடு. எங்களுக்குச் செய்த உபசாரத்திற்குக் கணக்கில்லை. மாலையில், அப்பா ஒரு நண்பரைப் பார்த்து வருவதாகச் சொல்லி வெளியே போனார். அத்தையும் நானும் தனித்தோம். சிறிது நேரம் மௌனமாயிருந்து பின் 'உன் மாமா முதலானவர்களின் படங்களையெல்லாம் நீ பார்க்க வேண்டாமா?' என்று சொல்லி என்னை ஓர் அறைக்கு அழைத்துச் சென்றாள். அங்கே பெரிய படங்களாக மூன்று படங்கள் இருந்தன. மத்தியில் ஒரு பெரியவருடைய படம். பக்கத்தில் அத்தையினுடைய படம்; மறுபக்கத்தில் ஓர் இளைஞருடைய படம். பெரியவரும் இளைஞரும் இன்னாரென்று சொல்ல வேண்டிய அவசியமில்லை. பெரியவரையும் அத்தையையும் ஊன்றிக் கவனித்தேன். இளைஞருடைய படத்தைப் பார்க்க மிகவும் ஆசை இருந்தது; ஆனால் கடைக்கண்ணால் இரண்டு மூன்று முறை மட்டும் பார்க்கத்தான் முடிந்தது. வசீகரமான முகம்; சிரிக்கும் கண்கள்; குறும்பும் புன்னகையும் தாண்டவமாடும் இதழ்கள். இம்முகம் என் மனதில் நன்றாய்ப் பதிந்து விட்டது. அறையை விட்டு இருவரும் திரும்பினோம். 'இரண்டு பொக்கிஷத்தில் ஒன்றை இழந்து விட்டேன்; இருக்கிற பொக்கிஷத்தை உடைமைக்காரியிடம் ஒப்புவித்து விட்டு இந்தக் கட்டையை விட்டு ஆவி பிரியவேணும். அந்தக் கவலைதான் இப்போது' என்று பெருமூச்சு விட்டுக் கூறினாள். கேட்டுங் கேளாததுமாகக் கனவு மயக்கத்தில் இருந்தேன்.

நாங்கள் சென்னையை விட்டுப் போகும் தினம் நெருங்கியது. அத்தையின் அன்பிலே ஈடுபட்டு

விட்டேன். தாயின் அன்பைப் பூரணமாய் அனுபவித்தறியாத எனக்கு இவ் அன்பு அளவற்ற இன்பத்தைத் தந்தது. அவளை விட்டுப் பிரிந்து செல்வது கஷ்டமாய்த் தான் இருந்தது.

மீண்டும் பிரயாணம் தொடங்கினோம். நேராக நியூ டில்லிக்கு வந்து சேர்ந்தோம். தந்தி கொடுத்திருந்தபடியால் அப்பாவின் நண்பர் ஒருவர் ஸ்டேஷனுக்கு வந்திருந்தார். அவர் ஒரு பெரிய பிரபு. எங்களுக்கு வேண்டும் வசதிகளெல்லாம் செய்து, வேறிடங்களுக்குப் போய் ஜாகை வைத்துக் கொள்ளக் கூடாது என்று தடுத்து விட்டார். அவருடைய மகள் ஜலஜா என்ற பெயருள்ள எட்டு வயதுச் சிறுமி, என்னை ‘அக்கா’ ‘அக்கா’ என்று அன்பு-உபசாரம் செய்யத் தொடங்கி விட்டாள். வீட்டுப் பெரிய அம்மாவும் மிக்க அன்பாக இருந்தார்கள். எங்களுக்கு என்று விசாலமான ஓர் அறை. வெளியே போகும் நேரம் தவிர மற்றக் காலங்களில் அந்த அறையில் ஒரே கும்மாளந்தான். ஜலஜாவின் பாட்டும் சிரிப்பும்; இடையிடையே இந்துஸ்தானிப் பேச்சு; வீட்டு அம்மாவின் பேச்சு, உபசரணைக் கேள்விகள்; அப்பாவும் நண்பரும் பேசிக் கொண்டிருந்த தமாஷ் பேச்சுக்கள்.

இவ்வாறாக நான்கு நாட்கள் கழிந்தன. ஐந்தாவது நாள் காலை 9 மணிக்கு ஒரு ‘டோங்கா’ வந்து வீட்டு வாசலில் நின்றது. அதிலிருந்து ஓர் இளைஞர் இறங்கி வந்தார். சுமார் 25 வயது இருக்கும். நான் என் அறையிலிருந்தே அவரைக் கவனித்துவிட்டேன். என்னால் நம்ப முடியவில்லை. நான் அத்தை வீட்டில் படத்தில் பார்த்த அவரேதான். எங்களைக் கண்டதும் அவரும் தயங்கி நின்றார். வேறு வீட்டுக்கு வந்துவிட்டதாக அவர் நினைத்திருக்க வேண்டும்.

ஜலஜா அவரிடம் ஓடிப்போய், ‘அத்தான்! அக்கா, பெரியப்பா எல்லாரும் வந்திருக்கிறார்கள். அப்பாவும் பெரியப்பாவும் வெளியே போயிருக்கிறார்கள். வாங்க,

உள்ளே' என்று கூச்சலிட்டு அழைத்தாள். ஜலஜா உள்ளே சென்று தன் தாயாரிடம் சொல்லிக் காப்பி கொண்டுவந்து கொடுத்தாள். அவர் காப்பியை வாங்கிக் குடித்துவிட்டு, சிறிது நேரம் அறையின் வெளியே இடப்பட்டிருந்த நாற்காலியில் இருந்து பின், 'நான் வந்திருக்கிறேன் என்று அப்பாவிடம் தெரிவி, ஜலஜா, கொஞ்சம் வெளியே போய் வருகிறேன்', என்று சொல்லி விட்டு வெளியே சென்றார். அவர் போனதற்கப்புறம் அவரை யாரென்று ஜலஜாவிடம் விசாரித்தேன். 'அவரைத் தெரியாதா? அவர் சீனு அத்தான்; அவரைத் தான் நான் கலியாணஞ் செய்யப் போகிறேன். பட்டணத்திலிருந்து வந்திருக்கிறார்' என்ற விளக்கமான பதிலைச் சொன்னாள். நானும் எல்லாம் தெரிந்துவிட்டவள் போலச் சும்மா இருந்து விட்டேன். என் மனம் பறை யடித்துக் கொண்டே யிருந்தது.

அப்பாவும் அவர் நண்பரும் வந்து சேர்ந்ததும், ஜலஜா, 'சீனு அத்தான்' வந்து சென்றதைத் தெரிவித்தாள். வந்தவர் யாரென்று அப்பா கேட்க 'எனது நண்பர் ஒருவருடைய பிள்ளை, ஸ்ரீநிவாசன் என்று பெயர். சென்னையிலுள்ளவர், நல்ல குணம், நல்ல அறிவாளி; சீமைக்குப் போய்க் கல்வி பயின்று வந்தவர். பெனாரஸ் விசுவ வித்யா நிலையத்தில் வேலைக்குச் சென்று திரும்பி வந்திருக்கிறார்' என்று சிலாகித்துக் கூறினார். அப்பா இவ்வளவையும் கேட்டதும் சிறிது ஆலோசனையில் அமர்ந்தார். ஆனால் ஒன்றும் சொல்லவில்லை. முதலில் நான் நினைத்தது உறுதியாயிற்று.

சீனு திரும்பி வந்தார். அப்பாவிடம் அவர் நண்பர் சீனுவை அறிமுகப்படுத்தினார். அப்பாவைப் பற்றி யாதும் அவர் தெரிந்திருப்பதாகத் தோன்றவேயில்லை. இரண்டொரு முறை வேண்டுமென்றே அவர்களிருக்கு மிடத்திற்குச் சென்றேன். ஒரு முறை சீனு என்னை உற்று நோக்கினது போல் புலப்பட்டது. அவர் தமக்கு விசுவ வித்யாலயத்தில் வேலையாய் விட்டதென்றும், ஸர் எஸ். ராதா கிருஷ்ணன் தம்மை இங்கிலாந்தில் அறிந்

திருந்தபடியால் லகுவில் தமது முயற்சி கைகூடியது என்றும் ஆங்கிலத்தில் கூறி, மறுநாள் தாம் ஆக்ரா செல்ல உத்தேசிப்பதாகவும் அங்கிருந்து சென்னைக்குத் திரும்புவதாகவும் சொன்னார். எங்கள் பிரயாணத் திட்டத்திற்கு இது ஒத்திருந்தது. அப்பாவும் மறுநாள் ஆக்ராவுக்குப் புறப்படுவதாகக் கூறினார். அன்றிரவு நான் கண்ட கனவுகள் எனது வாழ்க்கைச் சித்திரமாயிருந்தன.

மறுநாள் காலை சீனுவும் அப்பாவும் நானும் ஆக்ராவுக்குப் பிரயாணமானோம். ஜலஜாவையும் உடன் கூட்டிச் சென்றோம். இரண்டாம் வகுப்பு வண்டியிலும் ஏக்க கூட்டம். எங்களுக்கு இடம் கிடைப்பது மிகவும் சிரமமாயிருந்தது. வாசலிலே சீனு நின்றுகொண்டு என்னை உள்ளே போகச் செய்தார். பின் அப்பா வந்தார். பின்னால் அவர், ஜலஜாவைத் தூக்கிக் கொண்டு. நானும் அப்பாவும் ஒருவாறாகச் சமாளித்து உட்கார்ந்து கொண்டோம். ஜலஜாவை மடியில் வைத்துக் கொண்டேன். சீனு நிற்க வேண்டியதாயிற்று. எனக்கு இது மிக வருத்தமாயிருந்தது. மூன்றாவது ஸ்டேஷனில் என் பக்கத்திலிருந்த ஒருவர் இறங்கினார். அந்த இடத்தில் சீனுவை உட்காரச் சொல்லி அப்பா எவ்வளவோ வற்புறுத்தியும் அவர் மறுத்துவிட்டார். புதிதாக ஒருவர் வந்து உட்கார முயல்வதைக் கண்ட பின்புதான் அவர் வந்து உட்கார்ந்தார். என் மனத்திலிருந்த குதூகலத்தையும் நாணத்தையும் மறைப்பது மிகக் கஷ்டமாயிருந்தது. ஜலஜா அவர் சட்டையைப் பிடித்துச் சேஷ்டை செய்து கொண்டிருந்தாள். அவரது சட்டையின் நுனி என்மேல் படும்படி நேரிட்ட போதெல்லாம் என் மேனி புளகிதமாயிற்று.

சுமார் 4 மணி நேரம் சென்றதற்கப்புறம் ஆக்ரா வந்து சேர்ந்தோம். உடனே ஆகாரத்தை ஒருவாறு முடித்துக் கொண்டோம். பின் ஒரு டாக்ஸி அமர்த்திக் கொண்டு டாஜ்மஹால் பார்க்கச் சென்றோம். டாஜின் முன்பாக வண்டி நின்றது. ஜலஜாவும் நானும் ஒன்றாகக்

கைகோர்த்து நடக்கலானோம். எங்களுக்கு முன்னாக அப்பாவும் சீனுவும் சென்றுகொண்டிருந்தனர். முகப்பு மாளிகையைக் கடந்து அதினின்று டாஜ்வரை அமைந்திருந்த சலவை ஓடைத் தொட்டியருகில் வந்ததும் சீனு எங்கள் பக்கத்தில் நெருங்கிவிட்டார். அப்பா டாஜின் அழகில் ஈடுபட்டு முன் கூட்டி நடந்து சென்றனர். ஜலஜாவை நோக்கி 'உன் அக்காவின் பெயரை நீ எனக்குச் சொல்லவில்லையே! அவள் பெயர் என்ன? சொல்லு' என்று சீனு கேட்டார். எத்தனையோ முறை என் பெயரால் என்னை ஜலஜா அழைப்பதைக் கேட்டிருக்கிறார். என் பெயரைத் தெரியாதவரல்ல. என்னோடு பேசுவதற்கு இது ஓர் உபாயம் என்று எண்ணிக்கொண்டேன்.

ஜலஜா 'தெரியாதா? சொல்லுகிறேன். ரங்கநாயகி அம்மாள் அவர்கள். அழகான பெயரல்லவா? உங்களுக்கு இந்தப் பெயர் பிடித்திருக்கிறதல்லவா? இனி நீங்கள் மறக்க மாட்டீர்களே?' என்று சொல்லிச் சிரித்தாள். எனக்கு ஒருபுறம் வெட்கம், ஒருபுறம் என்ன சொல்லப் போகிறாரென்று கேட்க ஆசை. 'அழகான பெயர்தான், ஆளுக்கு ஏற்றாற்போல' என்று சொல்லி என் முகத்தை நோக்கினார். நான் வேறு புறமாகத் திரும்பிக் கொண்டேன். எங்கள் எதிரே கண்ணையும் மனத்தையும் ஒருங்கே கொள்ளை கொண்டு நின்ற டாஜ்மஹாலைச் சுட்டிக் காட்டி, 'இதன் சரித்திரம் தெரியுமா? ஜலஜா' என்று கேட்டார். ஜலஜா தெரியாதென்று தலையை ஆட்டவே, அவர் சொல்லத் தொடங்கினார்:

'300 வருஷங்களுக்கு முன், ஷாஜஹான் என்று ஒரு முகலாயச் சக்கிரவர்த்தி இருந்தார். அவருக்குப் பிரிய பத்தினியாக இருந்தவள் மும்டாஜ் மஹால் என்ற ஒரு ஸ்திரீரத்னம். சக்கிரவர்த்தி அலங்கார ஆடம்பரங்களில் பற்றுள்ளவர். வாழ்க்கையிலே அழகும் அன்பும் நிரம்பியிருத்தலையே விரும்பியவர். அவருடைய பத்தினியின் விருப்பமும் அவ்வாறே. இருவரும் இகவாழ்வின் பின்

தங்கள் பூத உடம்பு சமாதி பெறும் மாளிகையொன்றை இயற்ற எண்ணினார்கள்; இருவரது காதலின் அழிகிற்கும் தூய தன்மைக்கும் இன்ப வுணர்ச்சிக்கும் தகுதியாக இம்மாளிகை அமைய வேண்டுமென்று நெடுநாளாகக் கருதி வந்தார்கள். ஒரு நாளிரவு மும்டாஜ் ஒரு கனவு கண்டாள் — சமாதி மாளிகையின் அமைப்பைப் பற்றி. இந்தத் தனது நாயகருக்குச் சொல்ல, அவரும் பல தேசத்துச் சிற்பிகளையும் வரவழைத்துக் கனவிற் கண்ட மாளிகையின் அமைப்பைக் கூறினார். அவர்களால் அக்கனவு-மாளிகையை உருப்படுத்த முடியவில்லை. இம்முயற்சியில் சில காலம் சென்றபின், ஒருநாள் ஒரு கிழவன் சக்கிரவர்த்தியின் முன்பு வந்து மாளிகையின் அமைப்பை உருப்பெறச் செய்வது தன்னால் கூடும் என்று தெரிவித்தான். அவரும் ஒரு சிறந்த சிற்பியிடம் அந்தக் கிழவனை அனுப்பினார். கிழவன் அமிர்தம் போன்ற ஒரு பானத்தை அச்சிற்பியிடம் கொடுத்துக் குடிக்கச் செய்தான். குடித்ததும் அவன் மனக்கண் முன்னே கனவு-மாளிகை பேரழகுடன் உருப்பெற்று நின்றது. சிற்பி வெகு விரைவாகக் கட்டட வேலையில் முனைந்தான். மாளிகை முற்றுப்பெற்றது; பானத்தின் வேகம் தணிந்தது; சிற்பி கீழே மயங்கி விழுந்துவிட்டான்.

'இந்த மாளிகை தூய வெண்சலவைக் கல்லினால் அமைந்தது. எட்டு முகப்புக் கொண்டது. 130 அடி நீளமும் 130 அடி அகலமும் உடையது; உயரம் ஸ்தூபி உள்பட 200 அடி. மேன்மையும் அழகும் உள்ள இரண்டு சிறு சிகர மாளிகைகள் இரு பக்கத்திலும் இருக்கின்றன. மாளிகை முழுவதும் அமைதியுற்று விளங்கி யமுனை நதியை நோக்கி நிற்கிறது. மாளிகையைச் சூழப் பூ மரங்கள் நிரம்பிய தோட்டம்.

'ஸ்தூபியை அடுத்துக் கீழே வெற்றுச் சமாதிகள் இரண்டு இருக்கின்றன. தங்கள் மரணத்தின் பின் இன்ன முறையில் தங்களை அடக்கஞ் செய்யவேண்டும் என்பதைக் காட்டுவதற்காக இவ் வெற்றுச் சமாதிகள்

அமைக்கப்பட்டுள்ளன. சலவைக் கல்லினால் இழைத்த மெல்லிய திரைகளினூடே வெயிலொளி நுழைந்து சென்று வெற்றுச் சமாதிகள்மீது உலவி விளையாடு கின்றன. உட்பக்கத்துள்ள சலவைச் சுவர்களில் பல வகையான மணிக்கற்களால் பூ வேலைகள் செய்யப்பட் டுள்ளன. இவற்றிற்குக் கீழாக நிலவறையொன்று உள்ளது. அதற்குச் செல்லுமிடமும் அழகாக அமைந் துள்ளது. அங்கேதான் உண்மையான சமாதி இருக்கிறது. ஷாஜகானும் மும்டாஜ் மஹாலும் நித்திய நித்திரையில் அமர்ந்திருக்கிறார்கள்.

'இங்கு வந்து அடையுமுன் ஷாஜகான் பெரும்பாடு பட்டு விட்டார். முதலில் தனது காதற்குரிய இராணியை இழந்தார். இந்தத் துக்கத்தினால் மனமுடைந்திருக்கும் பொழுது தமது மக்களால் பெருந் துன்பம் விளைந்தது. இவரை ஆக்ராவிலுள்ள கோட்டையில் சிறைவைத்து விட்டார்கள். சிறையிலிருந்து டாஜ்மஹாலைப் பார்ப் பதற்குரிய வசதி இருந்தது. அதைப் பார்த்துக் கொண்டு ஏழு வருஷம் உயிர் தாங்கியிருந்தார். முடிவில் இறந்து இங்கே நித்யவாசம் பண்ணுகிறார்.

'காதலில் தோன்றி, காதலில் வளர்ந்து, காதல் ஒளியிலே திகழ்வது இந்த டாஜ்மஹால். அழகு குடிகொண்டுள்ளது. உண்மை அன்பு ஒளிவிட்டு விளங்குகிறது. இதைத் தெய்வக் காதலின் திருக் கோயில் என்று சொல்லலாம். டாஜ்மஹால் என்றால் மாளிகைகளின் மணிமுடி என்று பொருள். ஒவ் வொருவன் உள்ளத்திலும் விளங்கும் காதற் கோயிலின் வெளித்தோற்றமே இம் மணிமுடி மாளிகை. இந்தப் புண்ணிய ஸ்தலத்தை மிதித்ததும் என்றுமில்லாத ஓர் இன்ப உணர்ச்சி தோன்றுகிறது!'' என்று முடித்தார்.

கடைசி வாக்கியங்கள் மட்டும் சிறிது நிதானமாக மெல்ல வெளிவந்தன. என் இதயத் துடிப்பு நின்று விடும் போலிருந்தது. ஏறிட்டுப் பார்த்தேன். அவர் கூரிய கண்கள் என்னையே நோக்கிக் கொண்டிருந்தன.

அவர் முகத்தில் ஒரு சோக உணர்ச்சி. 'அப்பா அதோ போகிறார். நாமும் போக வேண்டாமா?' என்று ஜலஜா கேட்டதற்கப்புறந்தான் நகரத் தொடங்கினோம். அவள் அப்பாவின் கையைப் பிடிக்க ஓடினாள்.

சீனு மறுபடியும் 'ரங்கா, உன் மறுமொழியில்தான் என் உயிர் இருக்கிறது. நீ இன்னாரென்று எனக்குத் தெரியும். திருவனந்தபுரத்திற்கு ஒருமுறை உன்னைப் பார்ப்பதற்கென்றே வந்தேன். என் தகப்பனார் அப்போது உயிரோடிருந்தார். உங்கள் வீட்டுக்குப் போகக் கூடாது என்பது அவருடைய கடுமையான உத்தரவு. அவ்வுத்தரவுக்குப் பங்கம் வராமல் உன்னைப் பார்த்துத் திரும்பினேன். நான்கு வருஷம் ஆய்விட்டது.

'நான் பார்த்தது முதல் உன் முகத்தை என் மனத்திலே பிரதிஷ்டை செய்துவிட்டேன். என்னை உனக்குத் தெரியக் காரணமில்லை. உன் அப்பாவோடு உடன் பிறந்த அத்தை யொருத்தி உண்டென்று கேள்விப்பட்டிருப்பாயோ என்னவோ தெரியாது. நான் அவளுடைய ஏகபுத்திரன்தான்' என்று கூறி என்னை நோக்கிக்கொண்டே நடந்தார். 'மறுமொழி இல்லையா?' என்று மீண்டும் தீனமான குரலில் கேள்வி எழுந்தது. எனக்குப் பொறுக்க முடியவில்லை. சிறிது தயங்கி நின்று 'மணிமுடி மாளிகையின் சரித்திரம் என்னையும் உருக்கி விட்டது. என் மனத்திலும் இன்று வரையில்லாத ஒரு புத்துணர்ச்சி அரும்பிவிட்டது' என்று மட்டும் சொல்லி அன்புடன் அவரைப் பார்த்தேன்.

கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல

என்று அழுத்தமாகக் கூறினார். எனக்குச் சிரிப்பு வந்து விட்டது.

மறுநாள் சென்னைக்குப் புறப்படுவதாகவும் தன் தாயாரிடம் எல்லா விவரங்களையும் தெரிவிக்கப் போவதாகவும் சொன்னார். நான் தலையை அசைத்துவிட்டு,

'என் அப்பாவிடம் இரண்டு மூன்று வருஷங்கள் கழிந்து தான் கலியாணம் என்று சொல்லப் போகிறேன்' என்றேன். சிறிது கலவரப்பட்டு நோக்கினார். 'உங்கள் படிப்பு முடிந்துவிட்டது; என் படிப்பு முடியவேண்டாமா?' என்றேன். 'இஷ்டம்: என்னை ஏற்றுக்கொண்டால் என் வாழ்நாள் முழுதும் காத்திருக்கத் தயார்' என்றார்.

இருவரும் அப்பாவிடம் வந்து சேர்ந்தோம். அவர் 'டாஜ்மஹால் உலகத்திலே பேரழகு படைத்த கட்டடங்களுள் ஒன்று. அதன் சரித்திரம் அதியற்புதமானது. கனவு நனவாகப் பரிணமித்து எல்லையற்ற அன்பும் அழகும் உருவெடுத்ததுபோல் விளங்குகிறது' என்று ஆழ்ந்த சோகத்தோடு கூறினார்.

சீனு மறுநாள் புறப்பட்டார். என் மனம் வெறிச் சோடிப் போயிற்று.

நாங்களும் ஆலஹாபாதோடு டில்லி வந்து, பின், காசி முதலிய இடங்களுக்குச் சென்று சென்னைக்குத் திரும்பினோம். காசியில் இருக்கும்போது அதை என் வாசஸ்தலமாக எண்ணி உரிமையோடு பார்த்து மகிழ்ந்தேன். சென்னையிலே சேரும் காலத்தை அத்தைக்கு அப்பா தெரிவித்திருந்தார். ஸ்டேஷனில் அத்தையும் சீனுவும் வந்திருந்தார்கள். அப்பா சீனுவைப் பார்த்ததும் 'நீ இன்னாரென்று எனக்கு டில்லியில் வந்தே தெரியும். என்றாலும் உன் மனத்தில் யாதொரு குழப்பமும் இருக்கக் கூடாதென்று தான் சொல்லவில்லை. பெனாரஸுக்கு எப்பொழுது போகிறாய்?' என்றார். 'விடுமுறைக் காலம் கழிந்து போவதாக எண்ணியிருக்கிறேன்' என்று பதிலுரைத்தார். என் அத்தை என்னை அன்போடு அணைத்து உச்சிமோர்ந்தாள். வந்த சிரமந்தீர இரண்டு நாள் அங்கே தங்கினோம். சீனு என்னைத் தனியாகப் பார்க்கும் சமயங்களில் 'பிரிந்திருக்க ஒருநாள் கூட முடியாது போலிருக்கிறது' என்று சொல்லுவார். 'இந்தப் பொய் வேஷம் வேண்டாம். இதுவரை இருந்ததுபோல் இன்னும் இரண்டு வருஷமாவது இருக்க வேண்டியது தான்' என்று சொல்லி ஓடிப்போய் விடுவேன்.

நாங்கள் திருவனந்தபுரத்திற்குத் திரும்புவதற்கு முந்திய மாலை அப்பா காஸ்மபாலிட்டன் க்ளப்பிற்கு மருமானுடு போய்விட்டார். மருமானுக்குப் போக இஷ்டமில்லை; என்றாலும் மறுக்க முடியவில்லை. என் அத்தை வழக்கப் பிரகாரம் எனக்குத் தலைபின்னிப் பூச் சூட்டிக் கொண்டிருந்தாள். திடீரென்று என்னை அருகி லணைத்துக் கொண்டு 'எங்கள் பேரிலெல்லாம் உனக்குப் பிரியந்தானே?' என்றாள். நான் 'அதற்குச் சந்தேகம் என்ன?' என்றேன். 'உன் அத்தான் சந்தேகப் படுகிறான். இரண்டு வருஷம் கழிய வேண்டுமென்று சொன்னாயாமே? எதற்கு?'

எனக்கு அழுகை வந்துவிட்டது. ஒருவாறாக அடக்கிக் கொண்டேன். 'ஒரு சந்தேகமும் வேண்டாம். அவருடைய படத்தைப் பார்த்ததிலிருந்து அவரோடு ஜன்ம ஜன்மாந்தரங்களாய்ப் பழகியது போலுள்ள அன்பு எனக்கு உண்டாய்விட்டது. அவர் என்னை நிராகரித்தால், நான் கன்னியாகவே இருந்து தேச சேவைசெய்ய இறங்கிவிடுவேன். அவரிடம் இரண்டு வருஷங்கள் நான் யாசித்தது, கல்வியை அபிவிருத்தி செய்து அவருக்குத் தக்க வாழ்க்கைத் துணைவியாக ஆவதற்கே. இதை நீங்கள் என் விண்ணப்பமாக அவரிடம் தெரியப்படுத்த வேண்டும்' என்றேன். என் அத்தை இன்னும் நெருக்கமாய் அணைத்துக் கண்ணீர் விடுவது கண்டேன். அவள் உள்ளத்தில் என்னென்ன நினைவு தோன்றின என்று யாரால் சொல்லமுடியும்?

அன்றிரவு தன் மகனோடு மிக அந்தரங்கமாக நெடு நேரம் பேசிக்கொண்டிருந்தாள்.

மறுநாள் இரவு புறப்பட்டோம். வழியனுப்பத் தாயும் மகனும் வந்திருந்தார்கள். ஒவ்வொருவரும் அவரவர்கள் கருத்தை நன்றாய் அடக்கி வைத்துக் கொண்டு நடித்தோம்.

அடிக்கடி அத்தையிடமிருந்து அப்பாவுக்குக் கடிதம் வரும். மேல் விலாஸம் அத்தான் கைப்பட இருக்கும்.

அதைக் கண்டு திருப்தியடைந்து வந்தேன். கடிதங்களெல்லாம் பெனாரஸிலிருந்துதான்.

நான் என் படிப்பிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்தேன். என் முயற்சியும் பலிதமாயிற்று. பீ. ஏ. பரீட்சையில் முதல் வகுப்பில் தேறினேன். மூன்று நாள் கழித்து என் வெற்றியைக் குறித்து அத்தானிடமிருந்து ஒரு தந்தி வந்தது. பின் அத்தையிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதை என் அப்பா என் கையில் கொடுத்தார். அக்கடிதத்திற்கு அவர் எழுதிய பதில் இது:

என் அருமைத் தங்கைக்கு,

உனது கடிதம் கிடைத்து மகிழ்ந்தேன். ரங்கா தனது அத்தையைப் போலவே பிடிவாதமுள்ளவளாய் இருக்கிறாள். உன் வீட்டிலிருக்கும் பொழுது யாரோ ஒருவருடைய படத்தைப் பார்த்தாளாம். அது முதல் அவரையே தனது உயிர்த் துணைவராகக் கருதிவிட்டாளாம். என்னைப் பொருட்படுத்துபவளாகத் தோன்றவில்லை.

எல்லாம் ஈசன் செயல். என் பாடுதான் திண்டாட்டம். நான் தன்னந்தனியாக இங்கே இருக்க வேண்டுமே என்ற கவலை இப்போதே என்னை அரிக்கத் தொடங்கிவிட்டது.

எப்பொழுது என் மருமானுக்கு லீவ் கிடைக்குமென்று உடனே எழுது.

உன் அன்புள்ள,

ராமநாதன்.

* * *

வருஷத்திற்கொருமுறை நானும் சீனுவும் மணிமுடி மாளிகையைப் போய்ப் பார்க்கத் தவறுவதே இல்லை.

[குறிப்பு:—எனக்கு நட்பாளராயுள்ள ஒரு குடும்பத்தினரின் சரித்திரம் இது. குடும்பத் தலைவி தன் கூற்றாக எழுதியதனை அவ்வாறே பதிப்பித்திருக்கிறேன்.]

*சுசீலை

சுசீலை தன் தந்தையின் தூரபந்துவாகிய அம்மணியம்மாள் கூட வசிக்கத் தொடங்கி ஒரு வருஷத்திற்குப் பிற்பாடுதான் இராமநாதனை முதன்முறை சந்தித்தாள். இராமநாதன் அம்மணியம்மாளுடைய தங்கையின் குமாரன்.

சுசீலை சிறு குழந்தையா யிருக்கையிலேயே அவள் தாய் இறந்துவிட்டாள். அவள் தகப்பனர் பெருஞ் செல்வவானயிருந்தார். அவருடைய பண முழுவதையும் போட்டிருந்த அர்ப்பத்நட் பாங்கு திடீரென்று முறிந்து விட்டது. தமது ஏக புத்திரியை வறுமை வாழ்விற்கு இரையாக்கி விட்டோமே என்ற ஏக்கம் பிடித்து அதுவே நோயாக விரைவில் மரணமடைந்து விட்டார்.

சுசீலைக்கு வயது பதின்மூன்று. நிரம்ப அழகு வாய்ந்தவள். ஆதரவு செய்வாரொருவரு மின்றித் தவித்துக்கொண்டிருந்தாள். சுசீலையின் பிதா இறந்து விட்டதைக் கேள்வியுற்றதும் அம்மணியம்மாள் துக்கம் விசாரிக்கச் சென்றாள். சென்ற இடத்திலே சுசீலையின் நிலையை யுணர்ந்து அவளைத் தனது இல்லத்திற்கு அழைத்து வந்து தனது குழந்தைபோல் பாவித்து மிக்க ஆதரவோடு வளர்த்து வந்தாள். அம்மணியம்மாள் ஒரு விதவை. அவளுடைய அகமுடையான் பொருட் செல்வத்தை நிரம்பத் தேடிவைத்து விட்டு இறந்தார். குழந்தைச் செல்வம் இல்லை.

அம்மணியம்மாள் இல்லாவிடில் தன் கதி என்னவா யிருக்கும் என்று சுசீலை அடிக்கடி நினைத்து வருந்துவாள். தன்மீது தாயினும் மேலாக அன்பு பூண்டு போற்றிவந்த அம்மணியம்மாளிடம் மிகுந்த பக்தி விசுவாசத்துடன் அவள் ஒழுகி வந்தாள்.

இராமநாதனைச் சுசீலை பார்த்ததே இல்லை; ஆனால் அவன் சென்னையில் கிறிஸ்தவ கலாசாலையில் படித்துக்

*ஓர் ஆங்கிலக் கதையைத் தழுவி யெழுதியது.

கொண்டிருந்த போது எடுத்த படமொன்றை அம்மணியம்மாள் தன் வீட்டு மாடி 'ஹாலி'ல் தூக்கியிருந்தாள். அவன் பேரில் அம்மணியம்மாளுக்கு மிகுந்த பிரியம். தன் பெரிய தாயாரது அன்பு நிறைந்த கண்களுக்கு அவன் எவ்வளவோ அழகுள்ளவனாகவும் எவ்வளவோ சிறந்த குணங்களுள்ளவனாகவும் தோன்றியது ஓர் ஆச்சரியமாகுமா? இப்போது அவன் ஞான சாஸ்திரத்தில் மகா நிபுணனாய்ச் சென்னைச் சர்வகலாசங்கத்தின் ஆராய்ச்சிச் சாலையில் ஒரு தலைமை யாசிரியனாக் விளங்கினான்.

விடுமுறைக் காலத்திலே அவன் தனது பெரிய தாயார் வீட்டிற்கு வருவதாக எழுதியிருந்தான். தான் எழுதிவருகிற ககோள சாஸ்திரத்தை முடித்தற்கு, சந்தடியில்லாத அமைதியான கிராம வாசந்தான் தக்கதாகுமென்று அவன் கருதினான். அவன் வருகிறானென்று கேள்விப்பட்டதும் சுசீலை அடைந்த வருத்தத்தைச் சொல்லி முடியாது. தான் இதுவரை அனுபவித்து வந்த சௌக்கிய வாழ்விற்கு இடையூறு ஏற்பட்டுத்தான் வேறெங்கேனுஞ் செல்ல வேண்டியதாயிருக்குமோ என்று மிகவும் பயப்பட்டாள்.

இராமநாதன் வந்துவிட்டான். அவனைச் சுசீலை எதிர்பாராத விதமாக நேருக்குநேர் பார்த்துவிடும்படி வாய்த்தது. அவன் கடிதத்திலிருந்து மத்தியானத்திற்கு மேல்தான் அவன் வீடு வந்து சேருவதாயிருக்குமென்று அம்மணியம்மாள் எதிர்பார்த்திருந்தாள். வீட்டை அதிகாலையிலே மெழுகிக் கோலமிட்டு, பூச்செடிகளுக்கெல்லாம் நீர்வார்த்து, பார்ப்பதற்கு ரம்மியமாயிருக்க வேண்டும் ஏற்பாடுகளை அந்த அம்மாள் செய்துகொண்டிருந்தாள். சுசீலை தெருவாசலில் நின்று வீட்டினழகைப் பார்த்த வண்ணமாக இருந்தாள். திடீரென்று ஒரு 'கார்' வந்து நின்றது. இராமநாதன் ஒரு நண்பனின் உதவியால் காலையிலேயே வீடு வந்து சேர முடிந்தது. சுசீலை திரும்பிப் பார்த்ததும் இராமநாதன் வண்டியிலிருந்து இறங்கி நின்றதும் ஒரே சமயமாயிருந்தது.

இராமநாதன் அழகு வாய்ந்தவன் என்று அவன் பெரிய தாயார் சொல்லிக்கொண்டிருந்தது உண்மை தான். கம்பீரமான முகம்; பளபளப்புடன் கறுத்து விளங்கிய தலைமுடி 'கிராப்பு' செய்யப்பட்டிருந்தது. நல்ல தேகக்கட்டு; புயங்கள் சிலம்ப வித்தையிற் பழக்கமடைந்தனபோல் வலுத்துத் திரண்டிருந்தன; கண்களில் அசாதாரணமான ஒளி; ஆனால் சாந்தமும் ஆழ்ந்த சிந்தனையும் அங்கே குடிகொண்டிருந்தன.

* * * *

அம்மணியம்மாள் சுசீலையின் சரித்திரத்தைச் சுருக்கமாகக் கூறி முடித்தாள். இராமநாதனுடைய கண்கள் சிறிது கலங்கின. இத்தனை இளவயதில் அவள் பெற்றோரை இழந்துவிட்டது பெருந் துர்ப்பாக்கியந்தானென்று வருந்திக் கூறினான்.

சுசீலையின் மெல்லிய அழகிய சரீரம் எல்லாவகையிலும் லக்ஷணம் நிரம்பியதாக இருந்தது. அவளது அழகு இராமநாதனது கனவுலகில் அபூர்வமாகக் காட்சியளிப்பது போலத் தோன்றிற்று. அவளது பொன்போன்ற மேனியும், கறுத்து நெய்த்துச் சுருண்ட கூந்தலும் அவனைப் பரவசமாக்கி விட்டன என்றே கூறவேண்டும். அவள் தன் மருண்ட கண்களை நிமிர்த்துப் பார்க்குந்தோறும் அவனுடைய உள்ளம் கலக்கமடைந்தது.

அவளும் தன்னைக் கண்டு அவன் கலக்கமுறுவதை ஒருவாறு உணர்ந்தாள். இதுவரை அமைதியோடிருந்த வாழ்க்கை இனிச் சஞ்சலப்படுமோ என்று பயமுங் கொண்டாள்.

இராமநாதன் வந்து ஒரு வாரமாயிற்று. அதன் பின்தான் ஓர் ஆண்மகனது வாழ்க்கைநலத்தில் தனது கருத்துச் சஞ்சரிக்கக் கூடுமென்பதைச் சுசீலை உணர்ந்தாள். இராமநாதனோ எப்பொழுதும் ஆழ்ந்த சிந்தனையோடேயே இருந்தான். புஸ்தகம் எழுதுவதில் முழு நோக்கங்கொண்டுள்ள ஒருவன் இப்படி யிருந்தது ஆச்சரியமல்ல. என்றாலும், ஏதேனும் சுசீலைக்கு ஆக

வேண்டியது இருக்குமானால் அதை எப்படியோ உணர்ந்து முன்கூட்டியே செய்து விடுவான்.

ஒரு நாள் இரவு வான மண்டலத்தில் நக்ஷத்திரங்கள் தெளிவாகவும் அழகாகவும் விளங்கிக் கொண்டிருந்தன. தனது தூரதிருஷ்டிக் கண்ணாடியை எடுத்துக்கொண்டு மூன்றாம் மாடிக்கு இராமநாதன் போய்க் கொண்டிருந்தான். மாடிப்படிக்கருகில் தனது பெரிய தாயாரும் சுசீலையும் நிற்பதைக் கண்டான். அவர்களை நோக்கி "நக்ஷத்திரங்களைப் பார்க்க வருகிறீர்களா? நான் மூன்றாம் மாடிக்குப் போகிறேன்" என்று சொன்னான். அம்மணி அம்மாள் தனக்கு மாடி ஏறி இறங்குவது முடியாதென்றும், வேண்டுமானால் சுசீலை போய்ப் பார்க்கலாமென்றும் சொன்னாள். சுசீலைக்கோ அரைமனதாக இருந்தது. முடிவில் "சும்மா போய்ப் பார்" என்று அம்மணியம்மாள் கூறவே, அவளும் பின் சென்றாள். அவளுடைய இருதயமானது சிறிது வேகமாகவே துடித்துக் கொண்டிருந்தது.

இருவரும் மூன்றாம் மாடியிற் போய்ச் சேர்ந்தார்கள். சுசீலை சிறிதுநடுக்கத்துடனேயே நின்றுகொண்டிருந்தாள். இராமநாதன் அவளை அருகில் வரச் செய்து ஆகாயத்தை உற்று நோக்கச் சொல்லி அங்கே காணப்பட்ட நக்ஷத்திரங்களை ஒவ்வொன்றாகக் காட்டினான். ஒரு சிறு நக்ஷத்திரத்தைக் காட்டி அதைக் கவனித்து நோக்கும்படியாகச் சொன்னான். அவளுக்கு அந்நக்ஷத்திரம் அவ்வளவு தெளிவாகத் தெரியவில்லை. எந்த நக்ஷத்திரத்தை என்று தயங்கிக் கேட்கவே, அவன் அவளது மெல்லிய விரலின் நுனியைப் பிடித்துத் தன் விரலோடு சேர்த்து உயர்த்தி நக்ஷத்திரத்தைக் காட்டினான். பின் கிரகங்களுடைய பெயர்களை ஒவ்வொன்றாகச் சுட்டிச் சொல்லிக் கொண்டிருந்தான். அப்பெயர்களெல்லாம் இவள் காதில் தெளிவாகப் பட்டன என்று சொல்லமுடியாது. தான் சொல்லுவதைக் கவனிக்கவில்லையென்பதைத் தெரிந்துகொண்டு "நான் சொன்னதை நீ முழுவதும் கவனிக்கவில்லை போல் தோன்றுகிறதே" என்றான். சுசீலை சிறிது

வெட்கமடைந்தாள். "நக்ஷத்திரங்களின் பெயர்களைப் பற்றித் தானே கூறுகிறீர்கள். என்றாலும் எத்தனையோ லக்ஷக்கணக்கான மைல்களுக்கு அப்பாலுள்ளவைகளைப் பற்றி இத்தனை உற்சாகம் காட்டுவதற்குக் காரணம் தெரியவில்லை. இவற்றின் முன் நான் எவ்வளவோ அற்பமென்று எனக்குத் தோன்றுகிறது" என்று சொல்லிச் சிறிது நடுங்கினாள். "மக்கள் எல்லாருமே இவைகளை நோக்கும்போது மிக மிக அற்பந்தான்" என்று இராமநாதன் பதிலளித்தான். பழையபடி சுசீலைக்கு ஒரு சிறு நடுக்கம் உண்டாயிற்று. "உனக்குக் குளிருகிறதென்று நினைக்கிறேன்" என்று சொல்லி அவளைக் கீழே இட்டு வந்தான்.

அன்றிரவு சுசீலை கனவு கண்டாள்: இருவரும் மாடிக்குச் சென்று வானத்தை நோக்கிக் கொண்டிருந்தார்கள். பிறைச்சந்திரன் தாழ்ந்து தாழ்ந்து தங்களை நோக்கி வந்து கொண்டிருந்தது. தங்கள் கைக்கு எட்டக் கூடிய தூரத்தில் ஒரு பெரிய ஊஞ்சல் போல அது தொங்கிக் கொண்டிருந்தது. இராமநாதன் தன்னை ஜாக்கிரதையாக எடுத்து அவ்வூஞ்சலின் மீது வைத்தான்; தானும் ஏறிக்கொண்டான்; ஊஞ்சல் மிகவேகமாக ஆடத் தொடங்கிற்று. "என்னுடன் இவ்வூஞ்சலில் ஆடிச் சந்திரமண்டலம் போவதில் உனக்கு அச்சமில்லையா?" என்று கேட்டான். "நீ அருகிலிருக்கும்போது எனக்குப் பயமென்பது தோன்றவில்லை" என்று மறுமொழி கூறினாள். அப்போது இராமநாதனுடைய முகத்திலே இதுவரையிலும் இல்லாத ஒரு புதிய புன்னகை தவழ்ந்தது. தாங்கள் ஏறியிருக்கும் பிறைச்சந்திரனது ஒளி கூட இப் புன்னகையொளியின் முன் மங்கிப் போயிற்றென்றே நினைத்தாள். அந்த ஒளியிலேயே மனம் ஊன்றி நின்று கண்ணயர்ந்து உறங்கி விட்டாள். காலையில் விழித்தெழுந்துங் கூட அந்தக் கனவு அவள் கண் முன்னே நின்று கொண்டிருந்தது. தன்னைச் சந்திர மண்டலத்திற்கு அழைத்துச் சென்ற இராமநாதன் மீது சுசீலைக்குக் காதல் அரும்பத் தொடங்கிற்று.

ஆனால் இராமநாதன் தன்னைப்பற்றி நினைப்பதாகவே அவளுக்குத் தோன்றவில்லை. அவளுடைய அழகு சாதாரணமானதன்று என்பதைத் அவன் தெரியாதவனல்ல. அதைப்பற்றி அவன் மகிழ்ச்சிகொண்டு பெரிய தாயாருடன் வேடிக்கையாகப் பேசுவதையும் அவள் கேட்டிருக்கிறாள். என்றாலும், அவன் மனத்தில் அது சிறிதும் பதிந்திருப்பதாக மாத்திரம் தெரியவில்லை. சுசீலைக்கு இது மிகவும் வருத்தத்தை உண்டு பண்ணிற்று. இவ்வாறு வருத்தம் நேரிடுங் காலங்களில் இவள் அவ் வீட்டிலுள்ள புஸ்தக அறைக்குச் சென்று புஸ்தகங்களை எடுத்து வாசித்துக்கொண்டிருப்பாள். காவியச் சுவையிலே அவள் மிக்வும் ஈடுபட்டிருந்தாள்.

ஒருநாள் அம்மணியம்மாள் தனது தோழியொருத்தி வீட்டிற்குச் சென்றிருந்தாள். மழை பெய்துகொண்டிருந்தது. இராமநாதன் தான் எழுதிக்கொண்டிருந்த புஸ்தகத்தில் மனம் அழுந்தியிருந்தான். சுசீலை புஸ்தக அறையிலுள்ள ஒரு நாற்காலியில் சாய்ந்திருந்து புஸ்தகம் ஒன்றைக் கையில் வைத்துக்கொண்டு வாசிக்க முயன்றாள். ஆனால் அவள் மனம் படிப்பில் செல்லவில்லை; மேல்மாடியில் எழுதிக்கொண்டிருக்கும் இராமநாதனைப் பற்றியே அவள் சிந்தனை செல்லலாயிற்று. அப்போது திடீரென்று ஆளரவம் கேட்டது.

வந்தவர் தனது தந்தையினுடைய பழைய நண்பரில் ஒருவரான சோமநாதர். அவர் புஸ்தகங்கள் பிரசுரித்து வெளியிடும் தொழிலை மேற்கொண்டிருந்தவர். அவரைக் கண்டதும் சுசீலையின் முகம் சந்தோஷத்தால் மலர்ந்தது. அவர் "சௌக்கியந்தானா?" என்று கேட்டுக்கொண்டு உள்ளே வந்து சுசீலையின் பக்கத்திலிருந்த ஒரு நாற்காலியில் உட்கார்ந்தார். "என்ன வாசிக்கிறாய்? கண்ணன் பாட்டுத்தானா?" என்று கேட்டார். "பாரதியை நான் அடிக்கடி வாசித்து வருகிறேனென்று உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டதும், அவர், "நீ என்ன தான் வாசித்துக்கொண்டிருப்பாய் என்பதைக்கூட நான் சொல்லிவிடுவேனே" என்று கூறினார்.

"ஆமாம், நீங்கள் சொல்லியது சரிதான்."

"சரி, பாடு பார்ப்போம். எனக்கும் பாரதி பாட்டுக்களில் மிகப் பிரியம். நானும் சொல்லிப் பார்க்கிறேன்."

காற்று வெளியிடைக் கண்ணம்மா !-நின்றன்
காதலை யெண்ணிக் களிக்கின்றேன்

என்ற பாட்டைச் சுசீலை பாடத்தொடங்கினாள்.

"மிக அழகான பாட்டைப் பொறுக்கியிருக்கிறாய். அம்மணியம்மாள் இன்னும் திரும்பவில்லை. இராமநாதன் அந்தப் பாழாய்ப் போன ககோள சாஸ்திரத்தை ஓயாமலெழுதிக் கொண்டிருக்கிறான். நான்தான் அதைப் பிரசுரிப்பதாக ஒத்துக் கொண்டிருக்கிறேன். இருந்தாலும் இப்படியா செய்கிறது? எப்பொழுதும் எழுத்து வேலைதானா? உன்னைப் போல ஒரு யுவதி எத்தனை அழகாய்ப் பாடினாலும் அவனுக்குக் காதும் இல்லை, கண்ணும் இல்லை! அதை அனுபவிப்பது என் அதிருஷ்டம் என்றுதான் கூற வேண்டும்."

இப்படிச் சோமநாதர் சொன்னதும் சுசீலை தன்னருகில் கிடந்த சிறு திண்டை அவர் மீது எறிந்து சிரித்து விட்டு முன் போலவே சௌகரியமாக உட்கார்ந்து கொண்டாள். சோமநாதருக்குச் சுமார் 55 வயது இருக்கலாம். பெரிய குடும்பி. சுசீலை சிறு குழந்தையாயிருக்கும்போது அவர் இவளை மடிமீதெடுத்து வைத்துச் சீராட்டியவர். தன் தந்தையிடத்தில் கூச்சமின்றி விளையாடுவது போலவே சுசீலை அவரிடத்தில் விளையாடுவாள்.

இருவரும் பாடினார்கள். இருவரது குரலும் ஒத்து இசைந்து சென்று, கேட்பதற்கு மிக இனிமையாயிருந்தது. கடிகாரம் 'டிக்டிக்' என்று அடித்துக் கொண்டிருந்தது. திடீரென்று ஆளரவம் கேட்டது. சுசீலை திரும்பிப் பார்த்ததும் இராமநாதனைக் கண்டாள். "ஏதாவது வேண்டுமா?" என்று சிறிது கலக்கத்துடன் கேட்டாள்.

"விசேஷமா யொன்றுமில்லை. நீங்கள் இரண்டு பேரும் சேர்ந்து பாடுவது மிக நன்றாயிருக்கிறது. எவ்வளவு நேரமாகப் பாடுகிறீர்களோ?"

பதில் கூறாது இருவருஞ் சிரித்தார்கள்.

"வானுலகத்திலுள்ள தாரகையைக் கண்டு மகிழ்ச்சி கொள்வதைக் காட்டிலும் தன் அருகிலுள்ள ஒரு சிறுமியின் அழகொளியைக் கண்டு மகிழ்வது நல்ல தல்லவா?" என்று கூறிக் கொண்டே சோமநாதர் எழுந்திருந்தார். "உன் பெரிய தாயார் வந்து விட்டாளோ?"

"ஆமாம், வந்தாயிற்று. உங்களிருவரையும் காப்பி சாப்பிடுவதற்கு அழைத்தாள்," என்றான் இராமநாதன்.

* * * *

"கேட்டியோ அம்மா! இரண்டு பேரும் சேர்ந்து ஒரு காதற் பாட்டைப் பாடிக் கொண்டிருந்தார்கள். இவர்களைப் பார்த்தால் அப்படிக் காதற் பாட்டைப் பாடுவார்களென்று உனக்குத் தோன்றுகிறதா?" என்று தன் பெரிய தாயாரைப் பார்த்து இராமநாதன் கேட்டான்.

சுசீலையைத் தவிர எல்லாரும் சிரித்தார்கள். அவள் மட்டும், "எனக்குப் போது போகவில்லை. படித்துக் கொண்டிருந்தேன். அப்போது அவர் வந்தார். இரு வரும் பாடிக் கொண்டிருந்தோம்" என்று கூறினாள்.

"சேர்ந்து பாடுவதற்கு நானும் வந்திருப்பேனே; என்னை ஏன் கூப்பிடவில்லை?" என்றான் இராமநாதன்.

சுசீலைக்குத் தூக்கிவாரிப் போட்டுவிட்டது இராமநாதன் மனம் காதற் கொந்தளிப்பினால் சுழன்று மறுகுகிறதோ என்று நினைத்தாள். எல்லையற்ற வேதனையின் அடையாளமல்லவா இவ்வார்த்தைகள்? ஏன் இந்த வேதனை!

* * * *

மறுநாள் காலையில் தபால் மூலமாக ஒரு கடிதம் வந்தது. அதன் முத்திரையை அம்மணியம்மாள் கண்டதும் பெருமகிழ்ச்சியடைந்து "எனக்குத் தெரியுமே! சுந்தரியின் பெற்றோர்கள் வெகுகாலம் தங்கியிருக்க மாட்டார்களே! வந்துவிட்டார்களென்று தோன்றுகிறது."

சுசீலை :—யார் ?

அம்மணியம்மாள் :—சுந்தரியின் பெற்றோர்கள். மேலே மாடியில் ஓர் அழகான பெண்ணின் படத்தை நீ பார்த்திருக்கிறாயல்லவோ? அதுதான் சுந்தரி. அவள் பெற்றோர்களும் அவளும் பம்பாய்க்குப் போய் ஒரு வருஷமாகிறது. அங்கே சுந்தரியின் தகப்பனாருக்கு உத்தியோகம். அவர்களெல்லாரும் வர வேண்டிய காலம் ஆகிவிட்டது. ஒருத்தன் எத்தனை காலமாகத்தான் சுந்தரிக்காகக் காத்திருப்பது?

சுசீலை:—யார் காத்திருக்கிறார்கள்?

அம்மணியம்மாள் :—யார்! இராமநாதன்.

சுசீலையின் அடிவயிற்றில் நெருப்பைக் கொட்டினது போல் இருந்தது.

அம்மணியம்மாள் :—சுந்தரி என் அண்ணாவின் குழந்தை. இராமநாதனும் சுந்தரியும் சிறு குழந்தைகளாயிருக்கும் பொழுதே இணைபிரியாத தோழர்களாயிருந்தார்கள். ஒருவருக்கொருவர் மிகுந்த அன்பு பாராட்டி வந்தார்கள். இதைக் கண்டு இருவருடைய பெற்றோர்களும் இருவரையும் மணமுடித்துவிட வேண்டுமென்று தீர்மானித்துவிட்டார்கள். ஆனால் சௌகரியம் வாய்க்கவில்லை; என் அண்ணா தூரதேசங்களிலே வேலையாயிருந்தார். இப்போதுதான் வருகிறார்.

சுசீலை :—என்றைக்கு வருகிறார்கள்?

அம்மணியம்மாள் :—கடிதம் வந்திருப்பதால் சீக்கிரம் வருவதாயிருக்கும். வந்தவுடன் கலியாணம் நடக்கும்.

சுசீலைக்கு உடம்பு என்னவோ ஒரு மாதிரியாக இருந்தது. சிறிது வாட்டத்துடன் அறைக்குச் சென்றாள். இராமநாதன் கர்தலுணர்ச்சி யற்றவனா யிருப்பதன் காரணம் இப்போதுதான் தெரிந்தது. அவன் மன அடக்கத்தைக் குறித்து ஒருவாறு மகிழ்ச்சியும் அடைந்தாள். சுந்தரியை முன் ஒரு முறையும் பாராதவளா யிருந்தும் அவள் மீது வெறுப்புக் கொண்டாள்.

அறைக்குச் சென்றபோதிலும் அங்கே அவளால் இருக்க முடியவில்லை. தனியேயிருந்தால் தன் மனத்தி லிருக்கும் பாரம் அதிகப்படுவது போலத் தோன்றிற்று. உடனே அம்மணியம்மாள் இருக்குமிடத்திற்கு வந்தாள்.

"ஏனம்மா! உனக்கு உடம்பு என்ன செய்கிறது? ஒருமாதிரியாக இருக்கிறாயே! முகத்தைப் பார்க்க முடிய வில்லையே! நான் வெளியே போகிறேன். டாக்டரை வரச் சொல்லட்டுமா?"

"வேண்டாம், கொஞ்சநேரத்தில் எல்லாம் சரியாய்ப் போய்விடும். நான் இங்கேயே இருக்கிறேன்."

அம்மணியம்மாள் புறப்பட்டுப் போய்விட்டாள். சுசீலை தன்னை யறியாமலே புஸ்தக அறைக்குச் சென்று உட்கார்ந்தாள். துக்கம் மேலிட்டது; கண்ணீர் வடிந்தது. தனக்கு இனி வாழ்வென்பதே கிடையாது என்று எண்ணலானாள்.

அன்று மாலையில் புதிதாக ஓர் அம்மாள் அம்மணி யம்மாளைத் தேடிவந்தாள். அவள் அவ்வூர்ப் பெண் பள்ளிக்கூடத் தலைமை உபாத்தியாயினி. பள்ளிக் கூடத்தில் மறுநாள் ஒரு விசேஷம் நடக்கப்போகிற படியால் அதில் சுசீலை ஏதாவது ஒரு பாட்டுப் பாட வேண்டுமென்று ஏற்பாடு செய்வதற்கு வந்தாள். சுசீலை முதலில் மறுத்துப் பார்த்தாள். சோமநாதர் அவளது பாட்டுத் திறமையைப்பற்றிக் கூறியிருப்பதால் அவள் அவசியமாக வந்துதான் தீரவேண்டுமென்று உபாத்தி யாயினி வற்புறுத்தினாள். தான் போய்ப் பாடுவது

அம்மணியம்மாளுக்கும் திருப்தியா யிருக்குமென்று உணரவே சுசீலை உடன்பட்டாள். உபாத்தியாயினி திருப்தியுடன் விடைபெற்றுச் சென்றாள்.

"எதைப் பாடப் போகிறாய்?" என்று அம்மணியம்மாள் கேட்டாள்.

சுசீலை :—எனக்கு ஒன்றுந் தோன்றவில்லை.

அம்மணியம்மாள்:—'கண்ணன் பாட்டு'ப் புஸ்தகத்திலிருந்து ஏதாவது பாடினால் போகிறது. நேற்றுப் பாடினதையே பாடு. ராமு இன்று காலை முதல் எரிந்து விழுந்து கொண்டிருக்கிறான். பைத்தியம் பிடித்தது போலிருக்கிறான். அவன் தன் அறையிலுள்ள புஸ்தகங்களைக் கண்டபடி விட்டெறிகிற சத்தமும் அடிக்கடி கேட்கிறது. இந்தப்படியானால் அவன் எழுதி வருகிற புஸ்தகம் எப்போ முடியும்? அதனால் வரும் பணத்தைக் கொண்டு சுந்தரிக்கு ஏதாவது நகைகள் வாங்கிக் கொடுப்பான் என்றல்லவோ நினைத்திருந்தேன்.

சுசீலை :—எதற்காகக் கோபமாயிருக்கிறார்? அவருக்குக் கோபம் வந்ததைப் பார்த்ததே யில்லையே!

அம்மணியம்மாள் :—அப்படிச் சாந்தமா யிருக்கிறவர்களுக்குத்தான் மிகுந்த கோபம் வரும். இன்றைக்குத் தபால் வருவதற்குமுன்னாலேயே அவன் கீழே வந்து விட்டானே.

சுசீலை :—ஒருவேளை சுந்தரியம்மாளின் பெற்றோரிடமிருந்து காகிதம் வந்ததோ?

அம்மணியம்மாள் :—அப்படி யிராது. அவர்களிடமிருந்து கடிதம் வந்தால் மிகுந்த உத்ஸாகமாயல்லவா இருப்பான்? சுந்தரிக்கும் அவனுக்கும் கலியாணமாகிவிட்டதானால், அப்புறம் இவ்வளவு கோபதாபங்களுக்கு இடமே யிராது.

அம்மணியம்மாள் கடைக்குப் போகவேண்டியதா யிருந்தது. சுசீலை மறுநாள் பாடவேண்டிய கண்ணன்

பாட்டைத் தயார்செய்ய வேண்டியதாயிருந்ததால் கூடச் செல்லவில்லை. ‘கண்ணன் பாட்டு’ப் புஸ்தகத்தை யெடுக்கப் போனாள். அப்பொழுதுதான் சோமநாதர் அதைக் கொண்டு போயிருப்பது அவளுக்கு ஞாபகம் வந்தது. என்ன செய்வது? தான் முந்திப் பாடின பாட்டை மனத்துக்குள் சொல்லிப் பார்த்தாள். முதற் செய்யுளில் அங்கங்கே ஞாபக மறதியா யிருந்தது. எவ்வளவோ முயன்றும் அந்தச் செய்யுள் முழுமையும் நன்றாக ஞாபகத்திற்கு வரவில்லை. சோமநாதருக்கு ஓராள் அனுப்பவேண்டும் என்று நினைத்தாள். அந்தச் சமயம் சோமநாதரிடமிருந்தே ஒரு கடிதத்தை இராமநாதன் கையில் கொடுப்பதற்கு ஓராள் வந்தான். அவனிடம் தனக்கு அம்முதற் செய்யுளை எழுதியனுப்பும்படி ஒரு கடிதம் எழுதிக் கொடுத்துவிட்டு, அவன் கொண்டுவந்த கடிதத்தை யெடுத்துக்கொண்டு இராமநாதன் அறைக்கு வந்தாள்.

கதவைத் திறந்தாள். உள்ளேயிருந்த இராமநாதனைப் பார்க்கவே பயமாயிருந்தது. அவன் முகத்திலே வெறுப்பும் கோபமும் போராடிக் கொண்டிருந்தன. அவனிடம் சென்று கடிதத்தைக் கொடுத்துவிட்டுச் சரேலெனச் சுசீலை திரும்பி வந்துவிட்டாள். சில நிமிஷங்களில் இராமநாதனும் வெளியே புறப்பட்டுச் சென்றான்.

ராமு திரும்பி வரும்போது அவனை அம்மணியம்மாளும் சுசீலையும் கண்டார்கள். முன்னிருந்த வெறுப்பும் கோபமும் இப்போது சுவரை விட்டெரியத் தொடங்கிவிட்டன. இருவரும் ஸ்தம்பித்துப் போய்விட்டார்கள். “என்ன விசேஷம்? சோமநாதர் நீ எழுதிய புஸ்தகத்தை ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டாரா?” என்று அம்மணியம்மாள் கேட்டாள்.

“இல்லை, அந்த நாசமாய்ப் போன புஸ்தகத்தை அந்தக் கிழட்டுத் திருடன் எடுத்துக் கொண்டான்” என்று கடுத்த குரலில் இராமநாதன் பதில் சொன்னான். சுசீலையைப் பார்த்து, “இந்தா, உனக்கொரு கடிதம்.

உனக்கு நிரம்பத் திருப்தியா யிருக்குமென்று நினைக்கிறேன்" என்று சொல்லிவிட்டு, ஒரு கடிதத்தை அவளிருந்த இடத்தை நோக்கி எறிந்துவிட்டு முகத்தைத் திருப்பிக்கொண்டு போய்விட்டான். அம்மணியம்மாள் அந்தக் கடிதத்தை எடுத்துப் படித்துவிட்டுச் சுசீலையைக் குறிப்பாகப் பார்த்தாள். உடனே சுசீலை, "நாளைக்குப் பாட வேண்டிய கண்ணன் பாட்டில் ஒரு செய்யுள் இது. எனக்கு ஞாபகத்துக்கு வராததால் எழுதியனுப்பும்படி ராமநாதருக்குக் கடிதம் கொடுத்திருந்தேன். இது என் கடிதத்திற்குப் பதில்" என்று விவரமாய்க் கூறினாள்.

"உன்னைப் பார்க்கவே, பிடிக்காதபடி முகத்தைத் திருப்பிக் கொண்டானே! என்ன காரணம்? இதற்கு முன் இப்படியிருந்ததைக் கண்டதேயில்லையே?"

இராமநாதன் உணவுகொள்ளக் கீழே இறங்கி வரவில்லை. அவனைப் போய்ப் பார்த்துவர அம்மணியம்மாள் மேலே சென்றாள்.

"ராமு, ஏன் இப்படியிருக்கிறாய்? ஏதாவது விசேஷமுண்டா? எங்களுக்கெல்லாம் பயமாயிருக்கிறதே!" என்று அம்மணியம்மாள் கேட்டாள்.

"'எங்களுக்கு' என்று யாரைச் சொல்லுகிறாய்?"

"என்னைப் போலொத்த பெண்டுகளுக்குத்தான்."

"பெண்டுகளென்றால் எனக்கு எரிகிறது. அவர்களைப் பற்றிப் பேசாதே. அவர்கள் எல்லாரும் கள்ளிகள். உன்னையும் என் அம்மாவையும் தவிர—"

"சுசீலையோ?"

"அவளும் கள்ளிதான்; ஒன்றும் வித்தியாசமில்லை."

"சுந்தரியோ?"

"இந்தக் கடிதத்தைப் படித்துப்பார். விஷயம் விளங்கும்."

"அன்புள்ள ராமுவுக்கு,

இந்த வருஷம் கலியாணம் நடத்திவிட வேண்டுமென்று உறுதியாயிருந்தேன். ஆனால் உனது மாமி தன் அண்ணா கோபுவுக்கு இரண்டாந் தாரமாகச் சுந்தரியைக் கொடுக்க வேண்டுமென்று பிடிவாதம் பண்ணிவிட்டாள். அவன் பணக்காரனல்லவா! பல காரியங்களைக் கட்டியளந்து சுந்தரியையும் தனக்குச் சகாயமாகச் சேர்த்துக் கொண்டாள். அவர்கள் கருத்துப் படியே கலியாணத்தை நடத்தி விடுவதென்று தீர்மானித்துவிட்டேன். எனக்கு வருத்தம்தான். உனக்கும் அளவில்லாத வருத்தம் இருக்கக் கூடியது இயல்பே. ஆனாலும் என்ன செய்வது? என் பேரிலே மனஸ்தாபங் கொள்ளமாட்டா யென்று நினைக்கிறேன்.

இப்படிக்கு,
சந்திரசேகரன்."

அம்மணியம்மாள் வருத்தம் சகிக்கமுடியாமல், சிறிது நேரம் ஒன்றும் பேசாமல், அப்படியே இருந்துவிட்டாள். கடைசியில் ஒருவாறாகத் தெளிந்து, "போனால் போகிறது. இதற்காக நீ சாப்பிடாமல் இருப்பானேன். வா, கீழே போவோம்" என்று அழைத்தாள்.

"சுந்தரி எக்கேடு கெட்டாலுஞ் சரியே. எனக்கு அதைப்பற்றி அக்கறையே யில்லை. ஆனால் பெண்களையே வெறுக்கிறேன். எல்லாரும் கள்ளிகள்."

அம்மணியம்மாள் மட்டும் கீழே வந்தாள். விஷயத்தைச் சசிலைக்குத் தெரிவித்தாள். பிறகு இவ்வொன்று "சரி, சுந்தரியை மணஞ்செய்ய முடியாததால் அவனுக்கு மனம் இடிந்துதானிருக்கிறது. ஆனால் உன்னைப்பற்றி அவ்வாறு சொன்னது கொஞ்சமும் சரியல்ல. நான் போய் அவனிடம் பேசி வருகிறேன்."

"என்னைப்பற்றி என்ன சொன்னார்?"

"நீயும் எல்லாப் பெண்களையும்போல் கள்ளிதான் என்றான். பெண்களை இப்படி இழிவாய்ப் பேசுகிறவனை எனக்குப் பிடிக்காது."

சுசீலை தன் அறையில் தனியாக உட்கார்ந்திருந்தாள். அவளை அரித்துத் தின்றுகொண்டிருந்த மனவருத்தம் எங்கேயோ பறந்துவிட்டது.

தான் பாடவேண்டிய பாட்டைத் தனக்குத்தானே சொல்லிக் கொண்டிருந்தாள். அப்போது சார்த்தியிருந்த கதவு மெல்லத் திறந்தது. ராமு வாடித் தொங்கிய முகத்துடன் உள்ளே வந்தான்.

"பெண்களெல்லாம் கள்ளிகள்; நம்பத்தகாதவர்கள்; கள்ளத்தனமாகக் காதல் செய்வதுதான் அவர்களுக்கு இயல்பு போலிருக்கிறது! அப்படித்தானே?" என்று கேட்டான்.

சுசீலை ஆச்சரியத்தோடு, "நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்? எனக்குத் தெரியவில்லையே" என்றாள்.

"சுந்தரி அப்படிச் செய்திருக்கிறாள் என்று நினைக்க வேண்டியதாயிருக்கிறது. நீயும் அப்படித்தானே?"

"நான் அப்படியொன்றுஞ் செய்ததாகத் தெரியவில்லையே?"

"கிழப்பிணங்கள் காதற் பாட்டுகளைப் பாடிக் கள்ளத்தனமாக எழுதி அனுப்பினால், அவைகளைக் கள்ளியல்லாமல் வேறு யார் ஏற்றுக்கொள்வார்கள்?"

சுசீலைக்கு முகம் சுண்டிவிட்டது. "கள்ளிதான் அவ்வாறு செய்வாள். என்னிடம் ஏன் அதைச் சொல்ல வேண்டும்?"

"ஏன் சொல்லவேண்டுமென்று கேட்கிறாய்? அந்தக் கிழட்டுச் சோமநாதன் கள்ளத்தனமாக உனக்குக் காதற் பாட்டு எழுதியனுப்பினான். நீ அதை அன்போடு வாங்கி வைத்துக் கொண்டாயே?"

சுசீலைக்கு அப்போதுதான் விளங்கிற்று. "நீங்கள் அதைப் படித்துப் பார்த்தீர்களா?"

ராமுவுக்கு மிகுந்த வருத்தமுண்டாயிற்று. தனக்குத் தகாத ஒரு காரியத்தைச் செய்து விட்டதாகச் சட்டென்று உணர்ந்தான். இப்படி யுணருகிறானென்று சுசீலை கண்டதும் அவளும் வருத்தங் கொண்டாள்.

"நான் பார்க்கவேண்டுமென்று நினைத்துச் செய்த தல்ல. அந்தக் கிழவன் கடிதத்தின் உறையை ஒட்டாமற் கொடுத்துவிட்டான். சுந்தரி விஷயத்தில் மனம் ஊன்றியிருந்த நான் கடிதத்தைக் கைசோர விட்டேன். அது கீழே விழும்போது உறையிலிருந்து கடிதம் வெளிவந்துவிட்டது. அப்போது அது என் கண்ணைக் கவர்ந்ததேயன்றி, நானாகப் பார்க்கவில்லை. நீ அனுப்பிய கடிதத்திற்குப் பதில் என்று சொன்னானே. நீ அப்படிச் செய்யலாமா?"

"தாங்கள் என்னைப்பற்றிக் கனவிலேனும் சிந்தித்தது உண்டோ?"

"ஓயாத சிந்தனையுங் கவலையுந்தான். இல்லாமற் போனால், நான் அந்தக்கடிதத்தைத் திரும்பிக்கூடப் பார்த்திருக்கமாட்டேன். அதிலெழுதி யிருந்ததைக் கண்டதும் என் வருத்தம் சகிக்க முடியவில்லை. சுந்தரி வேறொருவனைக் கலியாணம் பண்ணிக்கொள்வதில் எனக்குச் சிறிதும் வருத்தமேயில்லை."

சுசீலையின் மனத்தில் தைரியம் பிறந்தது. ராமுவை அன்பு கனிந்த கண்களால் ஏறிட்டு நோக்கினாள். "நாளையதினம் இவ்வூர்ப் பெண்பள்ளிக்கூடத்தில் ஒரு விசேஷம். அதில் பாரதியின் கண்ணன் பாட்டிலிருந்து ஒரு பாட்டு நான் பாடுவதாக ஒப்புக்கொண்டிருக்கிறேன். அதை நானும் சோமநாதரும் பாடியபொழுது நீங்கள் கேட்டிருக்கிறீர்கள். அந்தப் புஸ்தகத்தை அவர் ஏதோ பார்க்கவேண்டுமென்று சொல்லி வாங்கிப் போனார். எனக்கு அரைகுறையாய் ஞாபகத்திலிருந்ததால், முழு

வதையும் எழுதியனுப்பும்படி அவருக்குக் கடிதம் அனுப்பி யிருக்கேன். அதற்குப் பதில்தான் நீங்கள் கொண்டுவந்தது. பாட்டை முழுவதுங் கேட்கிறீர்களா?' என்று கூறிவிட்டு,

காற்று வெளியிடைக் கண்ணம்மா - நின்தன்
  காதலை எண்ணிக் களிக்கின்றேன் - அமு
தூற்றினை யொத்த இதழ்களும் - நில
  வூறித் ததும்பும் விழிகளும் - பத்து
மாற்றுப்பொன் னொத்தநின் மேனியும் - இந்த
  வையத்தில் யானுள்ள மட்டிலும் - எனை
வேற்று நினைவின்றித் தேற்றியே - இங்கோர்
  விண்ணவனாகப் புரியுமே!

நீயென நின்னுயிர் கண்ணம்மா - எந்த
  நேரமும் உன்தனைப் போற்றுவேன் - துயர்
போயின போயின துன்பங்கள் - நினைப்
  பொன்னெனக் கொண்ட பொழுதிலே - என்தன்
வாயினிலேயமு தூறுதே - கண்ணம்
  மாவென்ற பேர்சொலும் போதிலே - உயிர்த்
தீயினிலேவளர் சோதியே! - என்தன்
  சிந்தனையே! என்தன் சித்தமே!

என்ற செய்யுட்களைக் கந்தர்வ கானமோ என்று சொல்லும்படி இனிய உருக்கமான குரலிலே பாடினாள். அவள் அழகிய கண்களிலே காதல் கனிந்து விளங்கிற்று. ராமு அவளை அணுகித் திரும்பவும் அச்செய்யுள்களைக் கூறும்படி வேண்டினான். அவள் திரும்பவும் பாட, ராமுவும் அவளைப் பின்தொடர்ந்து சொல்லத் தொடங்கினான்:

காற்று வெளியிடைக் கண்ணம்மா - நின்தன்
  காதலை யெண்ணிக் களிக்கின்றேன் . அமு
தூற்றினை யொத்த இதழ்களும் - நில
  வூறித் ததும்பும் விழிகளும்

என்றதுவரை பாடல் சென்றது. இருவருடைய கண்களும் சந்தித்தன.

ராமுவின் சுய சரிதம்

[குறிப்பு :—'ராமு' ஒருவரது புனை பெயர். இவர் எனது பாலிய நண்பர்; பள்ளித் தோழர்; இப்போது டில்லியில் ஓர் உயர்ந்த உத்தியோகத்தில் இருக்கிறார். அங்கே போகுமுன், தாம் எழுதி வைத்திருந்த சுய சரிதப் பிரதி யொன்றை, 'இதை உன் இஷ்டம்போல் திருத்தி வெளியிடு' என்று சொல்லி, என் கையில் தந்தனர். நான் ஒரு திருத்தமும் செய்யவில்லை. இவர் எழுதியபடியே பதிப்பித்திருக்கிறேன்.]

பல இடங்களிற் பிரிந்து வசிக்கும் ஒரு குடும்பத்தினர் ஓரிடத்தில் ஒரே சமயத்தில் கூடித் தமாஷா யிருப்பது வாழ்விற்கு எத்தனை உகப்பான காரியம்!

தீபாவளிக்கு இன்னும் இரண்டே நாட்கள். நான் சென்னையில் கிறிஸ்தவ கலாசாலையில் பீ. ஏ. வகுப்பில் வாசித்து வருகிறேன். என் அண்ணா சோமு கலாசாலை படிப்பை முடித்து விட்டு, மனை வாழ்க்கையிற் புகுந்து கடினமான பாடங்களைப் படித்து, வேலையில்லாத் திண்டாட்டத்தில் அகப்பட்டு, கடைசியில் மதுரையிலே பள்ளிக்கூட வாத்தியாராக ஏதோ சம்பாதித்து வருகிறான். அவன் சம்பாதிப்பது என் மன்னிக்குப் புடவைக்குக் கூடக் காணவில்லை யென்று அடிக்கடி புகார் வந்துகொண்டிருக்கும். என் தங்கை புக்ககம் போய் இரண்டு வருஷங்கள் ஆச்சு. என் கடைக்குட்டித் தம்பிக்கு வயசு எட்டு. வயசு அதிகரித்து வருவது போலவே, அவனுடைய விஷமமும் அதிகரித்துக் கொண்டு வருகிறது. அவனை மேய்த்து அடைப்பது தான் என் பெற்றோர்களுடைய வேலை.

தீபாவளிக்கு நான், என் அண்ணா; மன்னி, என் தங்கை, அவள் அகமுடையான் இத்தனை பேரும் தாம் இருக்கும் திருநெல்வேலிக்கு வந்து சேரவேண்டுமென்று என் தகப்பனார் கட்டளை. நாங்கள் எல்லாரும் கர்நாடகம். என் தகப்பனாரைக் கண்டால் ஒரே நடுக்கம்.

அண்ணு என் மன்னிக்கு அதிகம் பயப்படுகிருனு அல்லது அப்பாவுக்கு அதிகம் பயப்படுகிருனு என்று திட்டமாய்ச் சொல்ல முடியாது. அவள் தடையுத்தரவு போட்டு விட்டால், அவன் தீபாவளிக்கு வரமாட்டான். ஆனல் என் அம்மா ஏதாவது தந்திரஞ் செய்திருப்பாள். மன்னிக்கு அழகான பட்டுப் புடவை எடுத்து வைத்திருப்பதாக அப்பாவைத் தெரிவிக்கச் சொல்லியிருப்பாள். இதற்கு வசப்படாத மாட்டுப் பெண்கள் கிடையாதல்லவா?

தீபாவளிக்காக ஊருக்குச் செல்லும் பெருங் கூட்டம். எழும்பூர் ஸ்டேஷனில் ஜனத்திரள் சகிக்க முடியவில்லை.

படாத பாடுபட்டு, டிக்கெட் வாங்கினேன். பின், ப்ளாட்பாரத்தில் போய் இடம் இருக்கிறதா என்று வண்டிதோறும் பார்த்துக் கடைசியில் ஒரு வண்டியில் கஷ்டப்பட்டு ஏறி ஓரிடம் பிடித்துக்கொண்டேன். மூச்சு விடுவதற்கு அடிக்கடி தலையை வெளியே நீட்ட வேண்டியதாயிருந்தது.

வண்டி புறப்படுவதற்கு முதல் மணி அடித்தாய் விட்டது. ஒரு பெட்டியுடன் ஒரு போர்ட்டர் தலை தெறிக்க ஓடி வந்தான்; அவனைத் தொடர்ந்து ஒரு பெண் விரைவாய் வந்தாள். நான் இருக்கும் வண்டியில் பெட்டியை வைத்துவிட்டு, 'அம்மா ஏறுங்கோ; வேறே வண்டிக்குப் போறதுக்கு நேரமில்லிங்க. ஒரே கூட்டமாய் இருக்குதுங்க' என்றான் போர்ட்டர். அந்தப் பெண்ணும் ஏறித் தயங்கி இடம் பார்த்த வண்ணமாய் நின்ருள். இடமோ இல்லை; இருக்கிறவர்களும் நகர்ந்துகொடுக்கிற வழியைக் காணும். நான் எழுந்து 'இங்கே உட்காரலாம்; நான் நிற்பதில் பரவாயில்லை' என்றேன். அவள் தன் நன்றியைப் புன்னகையாற் காட்டி, என் இடத்தில் உட்கார்ந்து கொண்டாள். நான் பக்கத்தில் நின்று கொண்டேன்.

வண்டி நகர்ந்தது. புதிதாய் வந்த பெண்ணை அப்பொழுதுதான் பார்க்க முடிந்தது. 16 அல்லது 17

வயசிருக்கலாம்; மாநிறம்; கறுப்புக் கரையுள்ள பழுப்பு நிறப் புட்டவை; புஜத்தில் சிறிதளவே மூடியிருந்த மெல்லிய மேல் சட்டை; கழுத்தில் சுற்றித் தழுவிக்கிடந்த பொன் சங்கிலி; காதில் சிறிய வயிரத் தோடு; ஒவ்வொரு கையிலும் ஒவ்வொரு பொன் வளை; இரண்டு அழகிய பாதங்களையும் பற்றிப் பிடித்து அணைத்துக் கொண்டிருந்த இரண்டு ஜோடுகள்; அழகாகப் பின்னிவிட்டப் பட்ட கருங்கூந்தல்; அதில் அழுத்திய ரோஜாப்பூ; அழகிய முகம்; கன்னங்களில் அழகு சுழியிடுவது போன்ற குழிவு; அழகிய கண்கள். இவள் எங்கே போகிறுளென்று தெரிந்து கொள்ள என் மனம் துடித்தது.

பணப்பையில் வைப்பதற்காக அதைத் திறந்தவள் தன் கையிலிருந்த டிக்கெட்டை நழுவ விட்டு விட்டாள். நான் குனிந்து எடுத்து, அதை ஒரு பார்வை பார்த்து விட்டு அவள் கையிற் கொடுத்தேன். அவள் திரும்பவும் என்னை நோக்கிப் புன்னகை புரிந்து, அதை வாங்கிப் பணப் பையிற் பத்திரமாக வைத்துக் கொண்டாள்.

டிக்கெட் திருநெல்வேலிக்குத்தான். நெடுந்தூரம் அவளோடு பிரயாணம் பண்ணப் போகிறோம் என்ற நினைவு என் உள்ளத்தைக் கூத்தாடச் செய்தது. செங்கற்பட்டு ஸ்டேஷன் வந்ததும் நான் நின்று கொண்டிருந்த வரிசையிலிருந்து ஒருவர் இறங்கினுர். ஒவ்வொருவரும் சிறிது சிறிது நகர்ந்தார்கள். எனக்கு இருப்பதற்கு இடம் கிடைத்தது. ஆனால் அவளருகில் இருப்பதற்கு வெட்கமுற்று நின்று கொண்டே யிருந்தேன். நான் உட்காருவேன் என்று அவள் எதிர் பார்த்திருக்க வேண்டும். உட்காராமல் நிற்பதைக் கண்டு, ‘உட்கார்ந்து கொள்ளலாமே’ என்றுள்.

என்ன மதுரமான சொற்கள்! இவை என் காதிற் பட்டதும், எனக்கிருந்த மகிழ்ச்சி சொல்லி முடியாது. உட்கார்ந்து கொண்டேன். ‘இன்று இரவும் நாளை 2 மணி வரையும் ரயிலில் தானே கழிக்க வேண்டியிருக்கிறது. ரொம்பத் தொல்லையான பிரயாணம்’ என்றேன். அவள்

திரும்பி என்னைப் பார்த்து 'நீங்களும் திருநெல்வேலிக்கா?' என்று கேட்டாள். 'ஆம்' என்று தலையசைத்தேன். சிறிது நேரம் கழித்து 'எனக்கு வண்ணார்பேட்டை; எங்கள் அப்பாவைத் தெரிந்திருக்கலாம்; வக்கீல் விசுவநாதையர்; நான் இங்கே க்வீன் மேரிஸ் காலேஜில் இண்டரில் வாசித்துக் கொண்டிருக்கிறேன்; என் பெயர் பத்மா' என்றாள். 'அப்படியா?' என்று கேட்டு, 'எனக்குப் புதுக் கிராமம்; என் பெயர் ராமஸ்வாமி; எங்கள் அப்பா ஒரு பாங்கர்; இங்கே கிறிஸ்தவ கலாசாலையில் பீ. ஏ. யில் வாசிக்கிறேன்' என்றேன். இதைக் கேட்டதும் எதையோ ஞாபகப்படுத்துவது போல் உன்னிப்பாய்ப் பார்த்தாள்.

என் சட்டைப் பையிலிருந்து ஒரு சிறு 'நாவல்' புஸ்தகத்தை எடுத்து வாசிக்க முயற்சி பண்ணினேன். ஆனால் என் கண்கள் புஸ்தகத்தின் வாக்கியங்களில் உயிரில்லையென்று படிக்க மறுத்துவிட்டன; அடிக்கடி பத்மாவின் உருண்டு திரண்ட கோமளமான கைகளையும், அவள் அழகிய மெல்லிய பாதங்களையும் கவிழ் பார்வையாய்க் கவனிக்கத் தலைப்பட்டன. சில சமயங்களில் வண்டியின் அசைவினால் அவள் ஆடை என் மேற்படும்; சில சமயங்களில் அவளுடைய மெல்லிய இனிய மூச்சு என் மேல் குளிர்ந்து வீசும். அப்பொழுதெல்லாம் நான் சுவர்க்கத்திலிருப்பது போலவே எண்ணி விடுவேன். புஸ்தகத்தை மூடி வைத்து விட்டு உறங்க எண்ணினேன். உறக்கம் வந்தால்தானே ?

பத்மா சிறிது உறங்கத் தொடங்கினாள். என் பக்கத்திலிருந்தவர்களும் ஒவ்வொருவராய் உறங்கினார்கள். எனக்கு நல்ல சந்தர்ப்பம் வாய்த்தது. அவளை நன்றாக உற்றுக் கவனித்தேன். என்ன களங்கமற்ற முகம்! என்ன அழகு! என்ன அமைதி! என் கண்களுக்குப் பசி எங்கிருந்து வந்ததோ தெரியாது. அவை மலர விழித்து அவள் அழகைப் பருகிக் கொண்டிருந்தன. அவள் கையிலிருந்த கைக்குட்டை நழுவி விழுந்தது. அதை யெடுத்து வைத்துக்கொள் என்று என் மனம்

சொல்லிக்கொண்டே யிருந்தது. ஆனால் பெருந்தியாக புத்தியுடன் அதை அவள் அருகில் வைத்துவிட்டேன்.

விழுப்புரம் வந்தது. அவ்வளவு நேரமும் விழித்துக் கொண்டுதானிருந்தேன். தாகமோ சகிக்க முடியவில்லை. ஒரு 'ஆரஞ்ச் க்ரஷ்' வாங்கிச் சாப்பிட எண்ணினேன். வெளியில் ப்ளாட்பாரத்தில் கூவிக் கொண்டிருந்தவனிடத்து ஆரஞ்ச் வாங்கிக் குடிக்கப் போனேன். அப்பொழுது பத்மா விழித்துக் கொண்டு 'என்ன தாகம்!' என்று சொல்லிவிட்டு என்னைப் பார்த்தாள். நான் என் கையிலிருந்த 'க்ரஷ்' டம்ளரை அவளிடம் கொடுத்து விட்டு வேறொன்று வாங்கிக் குடித்தேன். அவள் பையிலிருந்து காசு எடுத்தாள்; அதற்குள் நான் விலை கொடுத்து விட்டேன். 'இதோ காசு இருக்கிறது. எடுத்துக் கொள்ளுங்கள்' என்றாள். என் மனம் சம்மதிக்குமா? 'பரவாயில்லை. நான் காசு கொடுத்து விட்டேன்' என்றேன். அவள் என்னைப் பார்த்துப் புன்சிரிப்புடன் 'உங்களுக்கு உறக்கம் வரவில்லையா? எனக்குத் தூக்கம் கண் நிறைந்திருக்கிறது' என்று சொல்லிப் பழையபடி உறங்கத் தொடங்கினாள்.

விழுப்புரம் தாண்டினவுடன் மழையும் புயற்காற்றும். என் பக்கத்திலிருந்த ஜன்னல்கள் இரண்டையும் அடைத்தேன். மற்றவர்களும் ஜன்னல்களை யெல்லாம் அடைத்தனர். வெளியிலே காற்றும் மழையுங் கலந்து ஊளையிடும் சத்தம் காதுகளைத் துளைத்தது. ஜன்னலின் இடுக்கு வழியாக மழைநீர் வண்டிக்குள்ளே மெதுவாய் வந்து கொண்டிருந்தது. வண்டியோ மிக வேகமாய்ச் சென்றது. திருச்சி ஜங்ஷன் வந்து சேர்ந்தது. அந்த மழையிலும் அங்கே பெருங் கூட்டம். வண்டியிலிருந்து இறங்க வேண்டியவர்களின் பாதையை அடைத்துக் கொண்டு ஜனங்கள் நின்றார்கள். புது வண்டிகள் சேர்க்கப் போவதாகத் தெரிந்ததும், ஆட்களெல்லாம் அங்கே ஓடினார்கள். அலை மேல் அலையாய் வந்து வண்டிகளைத் தாக்கிக் கொண்டிருந்த ஜனத் திரள் சிறிது

தூறையத் தொடங்கிற்று. பத்மா சிறிது கண்ணைத் திறந்து "திருச்சியா?" என்றாள். "ஆமாம், திருச்சிதான்" என்று சொல்லி வெளியில் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

வண்டி புறப்பட்டது. மழையும் புயற் காற்றும் கொஞ்சமும் குறையவில்லை; அடித்த வண்ணமாகவே யிருந்தது. அதிகாலை; 5-45 இருக்கும். மலை புரண்டு விழுவது போல் ஒரு சத்தம். வண்டிகள் தடம் தப்பி முறிந்து விழுந்தன. நாங்கள் வண்டித் தொடரின் கடைசியிலிருந்தோம். விளக்குப் போய் விட்டது. சாமான்கள் தட தடவென்று ஒன்றன் மேலொன்றாக விழுந்தன. ஜனங்களும் அப்படியே விழுந்தார்கள். அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்த பத்மா என் மேல் மோதி விழுந்தாள். எங்கும் 'ஓ' என்ற அலறு சத்தம். வண்டி நின்றுவிட்டது.

என் வண்டியி லிருந்தவர்கள் ஒவ்வொருவராய் எழுந்து இறங்கத் தொடங்கினார்கள். நானும் பத்மாவோடு கீழே இறங்கினேன்.

கோரமான காட்சி. ஒரே கூச்சல். தொடரில் முன்னிருந்த மூன்று வண்டிகள் ஒன்றோடொன்று தாக்கி, ஒரேமுகமாய்ப் பள்ளத்தில் விழுந்து, நொறுங்கி, ஆட்களின் உருப்படியே யில்லாமற் செய்துவிட்டன. இஞ்சினும் அப்படியே. பின்னிருந்த வண்டிகளின் அடியில் நசுக்குண்டு கிடந்தவர்களும், தலையுடைந்தவர்களும், கையொடிந்தவர்களும், காலொடிந்தவர்களுமாக எத்தனையோ பேர்! எங்களைப் பிடித்த நல்ல வேளை, எங்கள் வண்டியிற் சேதமில்லை. ஆனால் ஊமையடி வாங்கியவர்கள் மிகப் பலர். இந்தக் கோரத்தைக் கண்டு தலைசுற்றி மயங்கிப் பத்மா கீழே விழப்போனாள். நான் அவளைத் தாங்கிக்கொள்ளாமற் போனால் கீழே விழுந்து தலையிற் பலத்த காயம் ஏற்பட்டிருக்கும். அவளைத் தாங்கும்படியாக எனக்கு நேர்ந்தது எனக்கு மகிழ்ச்சி தந்தது. சுற்றுமுற்றிலும் துக்கமயமா யிருந்த இந்தச் சமயத்தில், என்

மனத்தில் மாத்திரம் ஓர் ஓரத்தில் ஓர் இன்ப வுணர்ச்சி! உலக இன்பமே இப்படித்தானோ?

பொழுது புலர்ந்துவிட்டது. ரயில்வேக்காரர்கள் வண்டியில் அகப்பட்டுக் கொண்டவர்களை எடுப்பதில் ஈடுபட்டிருந்தார்கள். தந்திகள் பறந்தன. அக்கம் பக்கங்களிலுள்ள டாக்டர்கள் கார்களில் வந்திறங்கி ரண சிகிச்சை செய்யத் தொடங்கினார்கள். யார் யாருக்கு என்னென்ன உதவி செய்யக் கூடுமோ அவற்றைச் செய்வதில் அவர்கள் சிறிதும் தளரவில்லை. பக்கத்துக் கிராமத்திலிருந்து ஒரு பெரிய மிராசுதார் காலையில் வந்து பிரயாணிகட்குப் பலகார முதலியன தயார் செய்து கொடுப்பதற்குத் தம்முடைய சிப்பந்திகளை ஏவித் தாமும் மேற்பார்வை செய்து வந்தனர். காங்கிரஸ் ஸேவா சங்கத்தினர் படை படையாக வந்து பேருதவி செய்தார்கள். அரசாங்க அதிகாரிகள் வந்து அனைவரையும் விசாரித்து, வேண்டும் உதவிகளை அளித்து வந்தனர். பேராபத்தில் நம்முடைய ஜனங்கள் ஒருவருக்கொருவர் உதவுவதைப் பார்த்தால், 'எல்லோரும் ஓர் குலம்' என்ற பாரதி வாக்கு உண்மைதானென்று புலப்பட்டுவிடும்.

பத்மாவைத் தாங்கிப் பிடித்து ஓரிடத்தில் இருத்தி அவளுக்குக் காப்பியும் பலகாரமுங் கொண்டுவந்து கொடுத்தேன். 'ராமு! நீங்கள் ஒன்றும் சாப்பிடவில்லையே' என நடுக்குற்ற குரலோடு என்னைக் கேட்டாள். என் பெயரை ஞாபகத்தில் வைத்திருந்து என்னை அழைத்தது எனக்குத் தேவாமிர்தம் கிடைத்தது போல் இருந்தது. 'நான் சாப்பிடுகிறேன்; முதலில் நீ சாப்பிடு, பத்மா!' என்றேன். நான் பெயர் சொல்லி அழைத்தது அவளுக்கு எப்படியிருந்ததோ தெரியாது. அவள் இதழில் மெல்லிய இள நகை அரும்பிற்று. நானுஞ் சென்று காப்பி குடித்துவிட்டுத் திரும்பினேன்.

ஊருக்குத் தந்தி கொடுக்க வேண்டும் என்ற ஞாபகம் வந்தது. உடனே 'நாம் இருவரும் ஸ்டேஷனுக்குச் சென்று தந்தி கொடுத்தால் நல்லது; ஊரில் எல்லாரும்

கவலைப்பட்டுக் கொண்டிருப்பார்களே' என்றேன். அதை உடனே செய்ய வேண்டுமென்று அவளும் ஒப்புக்கொண்டாள். ஒரு பையனைக் கூப்பிட்டு, எங்கள் இருவர் பெட்டிகளையும் எடுத்துவரச் செய்து, ஸ்டேஷனுக்குச் சென்று, 'க்ஷேமம். கவலை வேண்டாம். அடுத்த வண்டியிற் புறப்படுகிறேன்' என்று பத்மாவின் தகப்பனாருக்கும் என் தகப்பனாருக்கும் தந்தி கொடுத்தோம்.

மத்தியானம் ஆயிற்று. விபத்து நடந்த இடத்திற்கருகில் வேறு ரயில் வண்டித்தொடர் வருமென்றும், அதில் பிரயாணிகள் ஏறிச் செல்ல வேண்டுமென்றும் தெரியவந்தது. எங்களுக்கோ பசி தாங்க முடியவில்லை; வெயிலுங் கடுமையாக இருந்தது. பத்மா தன் பெட்டியைத் திறந்து அதிலிருந்த பிஸ்கட் பெட்டியை எடுத்து என் கையில் கொடுத்தாள். நான் அதைக் கத்தியால் திறந்து அவளிடம் நீட்டினேன்.

பத்மா :—நீங்கள் ஒன்றும் எடுத்துக் கொள்ளவில்லையே?

நான் :—பின்னால் எடுத்துக் கொள்கிறேன்; அல்லது எடுத்துத் தந்தால் பேச்சு.

பத்மா என் குறிப்பை உணர்ந்து கொண்டாள் என்பதில் சந்தேக மில்லை. அவளே பிஸ்கட்டுகளை எடுத்து என் கையில் தந்தாள். நான் அவற்றை வாங்கிக் கொண்டு 'இவைகள் மாத்திரம் தானா? இந்த விரல்கள் பிஸ்கட்டுகளைக் காட்டிலும் நன்றாயிருக்கும் போலிருக்கிறதே!' என்றேன். எனக்கு இந்த அசட்டுத்தனம் எப்படி அன்று வந்ததென்று தெரியவில்லை. என் மனம் ஒரு நூதன வுலகிற் சஞ்சரிப்பது மட்டுந்தான் தெரிந்தது.

பத்மா :—(சிறிது கடுமையாக முகத்தை வைத்துக் கொண்டு) தன்னந்தனியாக ஒரு பெண் அகப்பட்டுக் கொண்டால், இப்படி யெல்லாந்தான் பேசுகிறதோ?

நான் :—நாம் தனிமையாயில்லை. நம்மைச் சுற்றிலும் எத்தனையோ பேர்கள். நாம் இரண்டு குழந்தைகள் இங்கே அகப்பட்டுக் கொண்டோம்; விளையாட்டாய்ப் பொழுது போக்குவோமே?

பத்மா :—நல்ல குழந்தைகள் ! நல்ல விளையாட்டு ! இப்போ பிஸ்கட் சாப்பிட்டாகட்டும். அப்புறம் விரல்களைப் பற்றிப் பார்த்துக் கொள்வோம்.

நான் பேசி யிருப்பதெல்லாம் என் தங்கையோடு தான். வேறு பெண்களோடு பேசியதேயில்லை. பெண்களைக் கண்டால் நான் ஓடிவிடுவேன் ; என்னைக் கண்டால் அவர்கள் ஓடிவிடுவார்கள் என்று என் நினைப்பு. அவர்கள் ஓர் ஆண்பிள்ளையோடு கேலி பண்ணிப் பேசக்கூடுமென்று நினைக்கவில்லை.

பத்மா பேசியது எனக்கு அதிசயமாயிருந்தது. 'விரல்களைப்பற்றி எப்போது பார்த்துக் கொள்வதென்று தெரிந்தால், கொஞ்சம் அமைதியாயிருக்கும்' என்று மெதுவாகச் சொல்லிவிட்டு, பிஸ்கட் வேலையில் முனைந்தேன். அவைகளைச் சிறிது சிறிதாகப் பிட்டு வைத்தேன். பத்மா என்னைக் கவனித்துக் கொண்டிருந்தாளே யொழிய, பிஸ்கட் சாப்பிடவில்லை. அவள் முகத்தில் ஓர் ஆச்சரியக் குறி தோன்றிற்று. அதன் காரணம் எனக்குத் தெரியவில்லை. 'இத்துண்டுகளைச் சாப்பிடலாமே' என்றேன். 'சாப்பிடலாம் ; ஆனால் எனக்கு விரல்கள் தேவையில்லை' என்றாள் பத்மா.

நான் :—தேவை எல்லாருக்கும் ஒன்றுபோலிருக்க முடியுமா ? ஆளுக்கு ஆள் வித்தியாசப்படக் கூடியது தானே !

பத்மா :—(சிரித்து) எனக்கு விரல்களும் வேண்டாம் ; தத்துவ-உபதேசமும் வேண்டாம்.

நான் :—இப்போது பிஸ்கட் சாப்பிட்டாகட்டும். பிற்பாடு தேவை எது என்பதைத் தெரிந்து கொள்ளுகிறேன்.

இருவரும் பிஸ்கட்டை முடித்தோம். 'நம் இருவருக்கும் தேவையானது ஒன்று இருக்கிறது. அது கொண்டு வருகிறேன்' என்று பக்கத்திலிருந்த கிணற்றுக்குச் சென்றேன். பத்மா திரும்பவும் என்னை நன்றாய் உற்றுக் கவனித்துவிட்டுத் தனது பெட்டியில் கடித உறையிலிருந்த ஏதோ ஒன்றை எடுத்துப் பார்த்து

விட்டு, அதைப் பெட்டிக்குள் வைத்துவிட்டாள். நான் தீர்த்தங் குடித்துவிட்டு, அவளுக்கு ஓலைப் பட்டையோடு தீர்த்தங் கொண்டு வந்தேன். அவளுடைய முகம் வியர்த்திருந்தது; மகிழ்ச்சிக் குறியும் கொஞ்சம் புலப்பட்டது. நான் கவனியாதவன்போல் நின்றேன். பாத்திரம் ஒன்றும் அகப்படாததால், அவள் கையை விரித்து வாயருகில் வைத்துக்கொள்ள, நான் தீர்த்தம் விட்டுக் கொடுத்தேன். சிறிது விஷமமாகவே, அதிகத் தீர்த்தங் கொட்டினேன்; அவள் சட்டை கொஞ்சம் நனைந்துவிட்டது. தன் அழகிய கண்களால் என்னை நோக்கிப் புன்முறுவல் செய்து 'ஆண்களெல்லாம் விஷமக் குடுக்கைகள்' என்றாள்.

நான் :—என்னளவில் நான் விஷமியல்ல, அங்கே அனுபவத்தில் எப்படியெல்லாம் நேர்ந்திருக்குமோ?

பத்மாவின் முகம் சுண்டி விட்டது. அவள் குளிர்ந்த கண்களில் கோபம் அனல் வீசிற்று. ஓலைப் பட்டையை என் கையிலிருந்து வெடுக்கென்று பிடுங்கித் தீர்த்தங் குடித்து முகத்தை அலம்பிக் கொண்டு 'போதும், போகலாம்' என்றாள்.

கோபத்தாற் சிவந்த முகத்தில் ஒரு தனி வசீகரம் இருந்தது. ஆனால் அவளிடம் விளையாடுவது நெருப்போடு விளையாடுவதுபோல் என்று தெரிந்து கொண்டேன். என் மனம் மிகவும் வருத்தம் அடைந்தது. கொஞ்ச நேரம் நின்றுகொண்டிருந்தேன். அவள் மனம் சிறிதும் இளகாததைக் கண்டு, கொஞ்சம் தூரத்திற் சென்று நானும் உட்கார்ந்து ரயில் வண்டி வருவதை எதிர்பார்த்திருந்தேன்.

ரயில் வண்டி கடசியாய் வந்து சேர்ந்தது.

இருவரும் சென்று ஒரு வண்டியில் ஏறி உட்கார்ந்தோம். உடனே சிலர் எங்களை மொய்த்துக் கொண்டார்கள். 'வண்டியில் என்ன நடந்தது? வண்டி மேற் போவதில் ஆபத்து இருக்கிறதென்று ஒருவரும் அடையாளங் காட்டவில்லையா? ட்ரைவர் உறங்கிக் கொண்

டிருந்தானா ? கார்டு என்ன பண்ணிக்கொண்டிருந்தான் ? எத்தனை பேர் இறந்திருப்பார்கள் ? எத்தனை பேருக்குப் படுகாயம் உண்டாயிருக்கும் ? எத்தனை பேர் இறந்து போகக்கூடிய நிலைமையில் இருக்கிறார்கள் ? எத்தனை ஆண்கள், எத்தனை பெண்கள், எத்தனை குழந்தைகள் வண்டியில் இருந்தார்கள் ?' என்றெல்லாம் சரமாரியாய்க் கேள்விகளைப் பொழிந்தார்கள். என்னைக் கேட்டது போதாதென்று பத்மாவையும் துன்புறுத்தத் தொடங்கினார்கள். நான் அவர்களிடம் 'நேற்றிரவு 4 மணியிலிருந்து இந்த நேரம் வரை சாப்பாடு கூட இல்லாதபடி அந்த அம்மா கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறாள். அவளைப் போய் இன்னும் துன்பப்படுத்தாதீர்கள். வேறு யாரிடமாவது கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்' என்று சொல்லிப் போகச் செய்தேன். கூட்டங் கலைந்ததும், பத்மா கோபந் தணிந்து என்னைக் குளிர்ந்து பார்த்தாள். ஆனால் நான் மனச் சோர்வோடு படுத்துக்கொண்டேன். அவள் என்னை நோக்கிய வண்ணமா யிருந்தாள்.

திண்டுக்கல் வந்து சேர்ந்தோம். எனக்கு ஒரு தந்தியும், பத்மாவுக்கு ஒரு தந்தியும் வந்திருந்தது. 'தந்தி கிடைத்தது. வண்ணார்பேட்டை விசுவநாதையர் பெண் பத்மா அங்கிருந்து ரயிலில் வருகிறாள். விசாரித்துத் தெரிந்து ஜாக்கிரதையாய் அழைத்து வா. கோபால கிருஷ்ணன்' என்று எனக்குத் தந்தி. இதை அவளிடம் விட்டெறிந்தேன். அவள் தனக்கு வந்ததை என் பக்கத்தில் விட்டெறிந்தாள். 'புதுக் கிராமம் பாங்க் கோபால கிருஷ்ணையர் பிள்ளை ராமு அங்கிருந்து வருகிறான். அவன்கூட ஜாக்கிரதையாய் வா. விசுவநாதன்' என்று எழுதி யிருந்தது. ஒருவரை யொருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டோம்.

பத்மா :—உங்கள் விஷமத்தைத் தெரிந்துதான் 'ஜாக்கிரதையாய் வா' என்று எழுதி யிருக்கிறது.

நான் :— அவ்விடத்தோடு பேசும்போது நான் ஸர்வே ஜாக்கிரதையாய் இருக்க வேண்டுமென்று நினைத்துத்

தான் 'ஜாக்கிரதையாய் அழைத்து வா' என்று எழுதி யிருக்கிறது.

பத்மா :—எட்டிக்குப் போட்டி; சரியாய்ப் போச்சு.

எனக்குப் பசி அதிகமாயிருந்தது. கீழே இறங்கிப் பிராமணாள் விடுதியில் இரண்டு சாம்பார்ச் சாதமும் இரண்டு தயிர்ச் சாதமும் வாங்கி வந்தேன். பத்மாவுக்கு ஒவ்வொன்று கொடுத்து, 'சாப்பிடலாமே' என்றேன்.

'நீங்கள் சாப்பிட்டதற்குப் பின் சாப்பிடுகிறேன்' என்றாள். 'பிணங்க நேரமில்லை; ஜாக்கிரதையாய்க் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டிய பொறுப்பு என்னுடையது. ஜலம் வேண்டாமா?' என்று சிரித்துச் சொல்லி, பக்கத்து வண்டியிலிருந்த ஒருவரிடம் பாத்திரம் வாங்கி, ஜலம் எடுத்து வந்தேன். பத்மா சாப்பிட்டுக் கொண்டிருந்தாள். நான் பக்கத்திலிருந்து கவனித்து வந்தேன். இடையிடையே என்னை நோக்கிச் சிரித்துக் கொண்டு சாதத்தைக் காலி செய்தாள். நான் பழையபடி பாத்திரத்தை யெடுத்து ஜலத்திற்காகக் கீழே இறங்கிச் சிறிது தூரம் சென்றேன். மணி யடித்துவிட்டது. 'ராமு, ராமு, வண்டியில் ஏறுங்கள்' என்ற சத்தம் கேட்டதும் திரும்பிப் பார்த்தேன். பத்மாவின் கலவரத்தையும் வியர்த்தொழுகும் அவள் முகத்தையுங் கண்டேன். உடன் சட்டென்று திரும்பி வண்டியில் ஏறிக்கொண்டேன். அந்த வண்டியில் நானும் அவளும்தான். வேறு யாரும் இல்லை.

என் இடத்தில் வந்து உட்கார்ந்து கொண்டதும், எனக்கிருந்த திருப்திக்கும் மகிழ்ச்சிக்கும் அளவில்லை. பத்மாவின் மீது அதிகாரஞ் செலுத்தினல், என்னோடு கோபித்துக் கொள்ள மாட்டாள் என்று உறுதியாய் விட்டது. 'நீங்கள் சாப்பிடவில்லையே?' என்று வருந்திக் கேட்டாள்.

நான் :—(மெதுவாய்) உன் கோபம் ஆறியதும், என் பசி ஆறிவிட்டது!

பத்மா :—(சிரித்து) அப்படியானால்; சாப்பாடு வேண்டாமே?

நான் :— எத்தனை நாள் வேண்டுமானாலும் விரதமிருக்கிறேன்—நான் விரும்புவது மட்டும் கிடைக்குமானால்.

பத்மா :—விரும்புவது எதுவோ?

நான் :—இன்று எனக்குக் கிடைத்திருக்கும் பொறுப்பு எப்போதும் எனக்கு இருக்க வேண்டுமென்பதுதான்.

பத்மா சிரித்து விட்டு மௌனம் மேற்கொண்டாள். கோடைக்கானல் ரோட் வந்தது. நான் ஜலம் கொண்டு வந்து விரைவில் சாப்பாட்டை முடித்தேன். பத்மாவின் கண்கள் என்னை விட்டு நீங்கவில்லை. கொஞ்ச நேரம் கழித்துத் தன் பெட்டியைத் திறந்து ஒரு புஸ்தகத்தை எடுத்தாள்.

நான் :—பெட்டியில் என்னென்னவோ சாமான்கள் இருக்கலாம். எனக்கு ஏதாவது இருக்கிறதோ?

பத்மா :—பிஸ்கட் இருக்கிறது; விரல் இருக்கிறது; பக்ஷணம் இருக்கிறது; படம் இருக்கிறது; புஸ்தகம் இருக்கிறது. என்ன வேண்டும்?

நான் :—விரல்கள் வேண்டும்.

பத்மா :—(சிரித்து) தனியாகப் பிரித்துத் தர முடியாதே.

நான் :—ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லுவதில் ரொம்ப சமர்த்து. இருக்கட்டும். படம், புஸ்தகம் இவைகளைத் தந்தால் பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

படங்கள் வைத்திருந்த 'ஆல்பம்' ஒன்றும் சில புஸ்தகங்களும் கொடுத்தாள். படங்களை ஒவ்வொன்றாகப் பார்த்துக் கொண்டிருந்தேன். ஒவ்வொன்றின் அடியிலும் இன்னார் என்று எழுதியிருந்ததால் எனக்குப் பத்மாவைச் சிரமப்படுத்த வேண்டிய அவசியம் நேரிடவில்லை. விசுவ

நாதையர், அவர் ஸம்ஸாரம், அவர் மூத்த மகள் ஸரோஜா, ஸரோஜாவின் அகமுடையான், இவர்கள் படங்களெல்லாம் பார்த்தேன். கடைசியில் பத்மாவின் படங்கள், பல வயதிலும் எடுத்தவை, இருந்தன. அப்படங்களில் ஒன்றைக் காட்டி, 'இந்த அம்மாவைத் தெரியவில்லையே, இவள் யார்?' என்று கேட்டேன்.

பத்மா:—(சிரித்துக் கொண்டு) தெரியாமற் போனால் போகிறது. உங்களுக்கும் நஷ்டமில்லை; அவளுக்கும் நஷ்டமில்லை.

நான்:—அவளுக்கு நஷ்டமில்லாமல் இருக்கலாம். எனக்கு நஷ்டமென்று தான் தோன்றுகிறது.

பத்மா:—அந்த அம்மா மூன்று வருஷங்களுக்கு முன்பு இருந்தாள். இப்போது இல்லை.

நான்:—அந்த அம்மாவை அவ்விடத்திலே தேடுவதாயிராதே.

பத்மா:—இராது.

நான்:—அப்போ, நான் எடுத்துக் கொள்ளுகிறேன். என்னிடம் இருக்கட்டும்.

பத்மா:—அவளுக்கு உரியவர்கள் கேட்டால், நான் என்ன பண்ணுகிறது?

நான்:—உரியவர்கள் இன்னாரென்று தெரிந்தாலொழியத் தருவதாயில்லை.

பத்மா:—என் அண்ணா இருக்கிறார்.

நான்:—ஆமாம், விசுவநாதையரவர்கள்.

பத்மா:—அவருக்குச் சொந்தம்.

நான்:—அவருடைய இரண்டாவது புத்திரிதானே? வேறு யாருக்கும் சொந்தம் இல்லையே?

பத்மா:—(தலை குனிந்து) இல்லை.

நான்:—அப்போ, நானே வைத்துக் கொள்ளுகிறேன், எனக்கு வேண்டும்.

பத்மா :—யாராவது பார்த்து விட்டால் —

நான் :—ஒருவர் கண்ணிலும் படாது. இப்படியானால், நீயே உன் கைப்படத் தருவாயா ?

பத்மா :—படத்தை வாங்கி அதன் கீழ்த் தேதி மட்டும் போட்டுக்கொடுத்தாள்.

நான் :—ஒன்றையும் இனமாக வாங்கிக் கொள்ள மாட்டேன். இதைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

ஷெல்லியின் கவிதைப் புஸ்தகம் ஒன்று உயர்ந்த கட்டடம் செய்து தங்க எழுத்துப் பொறிக்கப் பெற்று இருந்தது. அதில் 'ராமு அன்புடன் அளித்தது' என்று எழுதிக் கொடுத்தேன். பத்மா புன்னகை ததும்பிய முக விலாசத்துடன் 'புஸ்தகம் மட்டுந்தான் தந்திருப்பது; அதனுடன் ஒன்றுமில்லை; ஞாபகம் இருக்கவேண்டும்' என்று சொல்லி அங்கீகரித்துக் கொண்டாள்.

விருதுநகருக்கு மாலை 6-30-க்குப் போய்ச் சேர்ந்தோம். எங்கள் இரண்டு பேர் பெட்டிகளையும் திருநெல்வேலிக்குப் போகும் வண்டியில் மாற்றிக் கொண்டோம். என் அதிர்ஷ்டம், மாற்றிய வண்டியிலும் நாங்கள் இருவர் மட்டிலுந்தான். நான் காப்பி வரவழைத்தேன். பத்மா பிஸ்கட் எடுத்துக் கொடுத்தாள்.

நான் :—விரல்களும் சேர்ந்து தானே தருகிறது ?

பத்மா :—விரல்களில்லாமல் பின் எப்படிக் கொடுப்பது ?

என் மனத்தில் சுரந்தெழுந்த காதலையும் மகிழ்ச்சியையும் தடுக்க முடியவில்லை. அவள் விரல்களைப் பற்றிப் பிடித்துக் கொண்டேன். வெறி பிடித்தவன்போல் ஆய்விட்டேன். என் சரீர முழுவதும் மின்சாரம் பரவுவது போன்ற ஓர் உணர்ச்சி. கை விரல்களை விடவே மனமில்லை. அவள் முகம் சிவந்துவிட்டது. மெதுவாக, 'விடுங்கள், யாராவது பார்த்து விடப் போகிறார்கள்'

என்றாள். நானும் கையை விட்டுவிட நேர்ந்தது. பிஸ்கட்டில் கவனஞ் செலுத்தலானேன். ஒரு பிஸ்கட்டில் பாதியை அடித்துச் சாப்பிட்டுவிட்டு, மற்றொரு பாதியை அகஸ்மாத்தாய் வைப்பதுபோல் கீழே வைத்தேன். அவளும் அதைப் பராக்காயெடுப்பது போல் எடுத்து வாயிலிட்டுக்கொண்டாள். எனது மனத்தில் மகிழ்ச்சி ததும்பி வழிந்தது.

பத்மா தன் பெட்டியைத் திறந்தாள். அதிலிருந்து கடித உறையில் அடங்கிய ஒரு படத்தையும் ஒரு கடிதத்தையும் எடுத்து என் முன் வைத்தாள். படத்தைப் பார்த்தேன். அது என்னுடையது. ஆச்சரியப்பட்டு, கடிதத்தைப் பார்த்தேன்.

வண்ணார்பேட்டை,
15—9—40.

என் அருமைத் தங்கை பத்மிக்கு,

இங்கே யாவரும் க்ஷேமம். அங்கே உன் க்ஷேமத்திற்கும், உனது தோழியர்களின் க்ஷேமத்திற்கும் அடிக்கடி எழுது. உன் அத்திம்பேர் எனக்குக் கடிதம் எழுதிக்கொண்டே இருக்கிறார். சாப்பாட்டுக்குச் சிரமமாக இருக்கிறதாம். கூடிய விரைவில் நான் போய்ச் சேர வேண்டுமாம்.

சில நாட்களாக அப்பாவுக்கு ஒரு வேலை அமர்ந்து விட்டது. விடிந்தால் பொழுதானால் உனக்குத் தக்க வரன் பார்த்துக் கொண்டேயிருக்கிறார். எத்தனையோ ஜாதகங்களும் போட்டோக்களும் வந்து சேர்ந்தன. ஜோஸியர் இன்னின்ன ஜாதகங்களைக் கவனிக்கலாமென்று எட்டு ஜாதகங்களைப் பொறுக்கிக் கொடுத்திருந்தார். நேற்றுக் காலையில் நானும், அப்பாவும், அம்மாவும் எட்டு ஜாதகங்களையும் போட்டோக்களுடன் பார்வையிட்டு, எது எல்லா வகையிலும் பொருத்தமாயிருக்கிறது என்று தீர்மானித்தோம். எங்களுக்கு உத்தமமென்று தோன்றிய ஜாதகனின் படத்தை இக்கடிதத்துடன் அனுப்பியிருக்கிறேன். நீ நன்றாகப் பார்த்து உன்

மனம் எப்படியென்பதைக் கூசாமல் எழுத வேண்டும்.

ஜாதகன் பெயர் ராமஸ்வாமி. ராமு என்று அழைப்பார்களாம். தகப்பனார் நம்மைப் போலவே பெரும் பணக்காரர்; பாங்கர்; கோபால கிருஷ்ணய்யர் என்று பெயர். அவர் இருப்பது வீரராகவபுரத்தில் புதுக் கிராமத்தில். அவருடைய ஸம்ஸாரம் ரொம்ப நல்ல மாதிரியென்று எல்லாரும் சொல்லுகிறார்கள். ஜாதகனுக்கு ஒரு தமையன், ஒரு தங்கை, ஒரு தம்பி. தமையன் மதுரையில் வேலை பார்த்துக் கொண்டு குடும்பத்தோடு இருக்கிறாராம். தங்கை கல்யாணமாகிப் புக்ககத்தில் இருக்கிறாளாம். தம்பி சிறு குழந்தை.

ராமு பட்டணத்தில் கிறிஸ்தவ கலாசாலையில் பி. ஏ - யில் வாசித்து வருகிறானாம். நல்ல ஒழுக்கம். பார்ப்பதற்கு மிக நன்றாயிருப்பானாம். இது உண்மையென்பது இந்தப் படமே சொல்லுகிறது. நான் கல்யாணமாகாதவளா யிருந்தால், இவனை உனக்குக் கொடுப்பேனோ என்பது சந்தேகம்தான். அத்திம்பேர் கோபித்துக் கொள்வார்; பரவாயில்லை. அவருக்கும் இன்று இந்த சம்பந்தத்தைக் குறித்து எழுதியிருக்கிறேன்.

உன் பதில் வந்ததற்கப்புறம் தான் மற்ற ஆலோசனையெல்லாம். அப்பாவுக்கும் அம்மாவுக்கும் ரொம்பத் திருப்தி. நேற்றுச் சாயங்காலம் கோபால கிருஷ்ணய்யர் வந்திருந்தார். அவருக்கும் திருப்தி என்று தான் தோன்றுகிறது. இன்னுமொரு பாங்க் வைத்துவிடலாமல்லவா? பிள்ளையாண்டான் அபிப்பிராயம் தீபாவளிக்கு அவன் வரும்போது தெரிந்து கொள்ளலாம் என்றார். உன் பதிலை மறு தபாலில் எதிர்பார்க்கும்,

உன் அன்புள்ள

ஸரோஜி.

கடிதத்தை வாசித்ததும், 'என் பாக்யமே பாக்கியம்' என்று குதித்துக் கூத்தாடினேன். என் இதயத்திலிருந்து மகிழ்ச்சி பொங்கிப் பெருக்கெடுத்தது. 'பத்மி, பதில் எழுதிவிட்டாயல்லவா?' என்றேன்.

பத்மா :—'உடனே எழுதிவிட்டேன், எனக்குப் பிடி—' என்று இழுத்துச் சொல்லி என் முகத்தை நோக்கி விஷமமாகச் சிரித்தாள்.

நான் :—பெண்கள் விஷமக் குடுக்கைகளே அல்ல; ரொம்ப நல்லவாள். இருக்கட்டும். பேய் பிடித்திருக்கிறது என்றுதானே எழுதினாய்?

பத்மா :—ஆமாம், அது விரலைப் பிடித்திருக்கிறது என்று எழுதினேன்.

இருவரும் கொல்லென்று சிரித்தோம்.

நான் :—எனக்குப் பிடிக்கவில்லையென்று சொல்லிவிடப் போகிறேன்.

பத்மா :—இஷ்டப்படி செய்யுங்கள்.

நான் :—இஷ்டப்படி செய்யலாம், இல்லையா?

இப்படிச் சொல்லி அன்பு ததும்பும் அவள் முகத்தைக் கூர்ந்து நோக்கினேன். அவள் அழகிய விரல்களில் ஒரு முத்தம் இட்டேன்.

பத்மா :—(என் வலது கையைப்பிடித்து அதைத் தன் கையால் அழுத்தி) இனிமேல் நாம் ஒன்றுயிருந்தால் சேஷ்டைகள்தான். மணியாச்சியில் நீங்கள் அடுத்த வண்டியில் ஏறிக்கொள்ளுங்கள். தீபாவளிக்கு மறுநாள், காலை 8 அல்லது 9 மணிக்கு உங்களை என் வீட்டில் எதிர்பார்த்துக் கொண்டிருப்பேன். நான் பட்டணம் திரும்புவது தீபாவளி கழிந்த மூன்றும் நாள் சனிக்கிழமை 1 மணி ரயில் வண்டியில். அதுவரை—

நான் அவள் கைய்ப் பிடித்து அழுத்தி மௌனமாயிருந்தேன். மணியாச்சி வந்து சேர்ந்தது. அவள்

கட்டளைப்படி நடந்து கொண்டேன். அவள் வண்டியில் பிரயாணிகள் சிலர் ஏறிக்கொண்டனர்.

இரவு சுமார் 9 மணிக்குத் திருநெல்வேலிப் பாலம் போய்ச் சேர்ந்தோம். என் தகப்பனார் மிகுந்த ஆராமை யுடன் என்னைக் கட்டிப் பிடித்துக்கொண்டு, 'அந்தப் பெண் எங்கே?' என்றார். 'மூன்றாவது வண்டியில் இருக்க வேண்டும்' என்றேன். 'முட்டாள்' என்று என்னைக் கடிந்து கொண்டார். அதே சமயத்தில் பத்மாவின் தகப்பனார் என் தகப்பனாரையும் என்னையும் சுட்டிக் காட்டி ஏதோ சொல்லிக் கொண்டிருந்தார். பத்மாவின் கனிந்த பார்வை என் காதற் கனலை ஜொலிக்கச் செய்தது. அவள் புன்னகை தவழ்ந்த முகம் என் உள்ளத்தில் ஒரு தூண்டாமணி விளக்காக் ஒளிர்ந்தது.

உதிர்ந்த மலர்*

சுரைதா, ஸலீம் என்ற வைர வியாபாரியின் ஏக புத்திரி. சிரிக்கும் ரோஜா மலரைப் போன்ற அழகுடையவள். சந்திரபிம்பம் போன்ற முகம். பிரகாசம் பொருந்திய கண்கள். அவற்றின் மருண்ட பார்வை பார்ப்போர் மனத்தில் காதல் ஊற்றுப் பெருகும்படியான வசீகர சக்தி பெற்றிருந்தது. மிக்வும் உருக்கமாகப் பாடும் வல்லமை அவளுக்கு இயற்கையிலேயே அமைந் திருந்தது. 'குர்ஆன்' வேதத்தை மனப்பாடம் செய் திருந்தாள். தையல் வேலை, பூ வேலை செய்வதில் அந்தப் பிரதேசத்தில் அவளுக்கு இணையில்லை யென்று எல் லாரும் சொல்லுவார்கள்.

சுரைதாவுக்குப் பதினான்கு வயது ஆயிற்று. தனது குலாசாரப்படி முகத் திரை அணிய ஆரம்பித்து விட்டாள். அவளைப் பெண் பேசிப் பலரும் பல இடங்களி

* ஓர் ஆங்கிலக் கதையைத் தழுவி எழுதியது.

விருந்தும் வந்தார்கள். ஸலீமுக்குக் கர்வம் ஓங்கிவிட்டது. எல்லாரிடமும் அதிகப் பொருள் வேண்டுமென்று பிடிவாதமாகச் சொல்லிவந்தான். கடைசியாக, ஸதக் அலி என்பவன் எப்படியாவது சுரைதாவை மணக்க விரும்பினான்; ஸலீம் எவ்வளவு பணம் கேட்டாலும் கொடுத்து விடுவதென்று தீர்மானித்தான்.

ஸதக் அலிக்கு வயது அறுபது. தேகக்கட்டு விட வில்லையென்றாலும் முதுமைப் பருவத்தின் அடையாளங்கள் காணப்பட்டன. அவன் தன் தந்தையுடன் பேசிக் கொண்டிருப்பதைச் சுரைதா சிறு வயதில் பார்த்திருக்கிறாள். நாணமும் பயமும் இல்லாமல் அவன் முன்னால் விளையாடியிருக்கிறாள். சில சமயங்களில் கண்ணாடி தம்ளரில் காப்பி ஊற்றி அவனுக்குக் கொடுத்திருக்கிறாள். அவன் 'ஹுக்காவை'ப் பற்ற வைக்க நெருப்பு எடுத்துக் கொண்டு ஓடிவருவாள். சில சமயங்களில் அவன் முன்னால் ஜரிகைப் பூ வேலை செய்துகொண்டு உட்கார்ந் திருப்பாள். அக்காலத்தில் ஸதக் அலி அவளையே இமை கொட்டாமல் பார்த்து மகிழ்வான். அவனுடைய இருண்ட மனத்தில் என்ன தோன்றியதோ யாருக்குத் தெரியும்?

ஒருநாள் இரவு, வெகு நேரம் கழித்து ஸலீம் தன் மகளிடம் சென்று கலியாண விஷயத்தைப்பற்றிப் பிரஸ்தாபித்தான். சுரைதா நெஞ்சம் திடுக்கிட்டது; கீழே விழாதபடி சுவரில் சாய்ந்து கொண்டாள். கைகள் தாமாகவே அவளுடைய பிதாவின் மன்னிப்பைக் கோரிக் குவிந்தன; கனவில்கூட நினைத்திராத கிழட்டு ஸதக் அலியை மணம் செய்துகொள்ள சுரைதா சம்மதிப்பாளா?

“அப்பா, என்னிடம் என்ன காரியம் பேசுகிறீர்கள்? ஸதக் அலி பெரிய தனவந்தராகவும், புத்திசாலியாயும் இருக்கலாம். ஆனால் அவர் எனக்குத் தாத்தா அல்லவா? கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்! குழந்தையாகிய நான் எப்படி அறுபது வயதுக் கிழவரைக் கலியாணம் செய்து கொள்வது?” என்று எதிர்த்துப் பேசித் தான் ஒரு அராபியப் பெண் என்பதை ஞாபகப்படுத்தினாள்.

கோபத்தினால் ஸலீமின் கண்கள் சிவந்தன. மிகவும் நிதானமாக, "ஹதக் அலி ஏராளமான பணம் தருவதாக வாக்களித்திருக்கிறான். உன்னைப் பத்திரமாகப் பார்த்துக் காப்பான். நீ சந்தோஷமாக வாழலாம். நிழலும் கணக்கற்ற செல்வத்துக்கு நீ அதிகாரியாவதைப் பார்க்க ஆசைப்படுகிறேன்" என்றான்.

"நான் எப்படி அவரைக் காதலிக்க முடியும்? அப்பா, இன்னும் கொஞ்சகாலம் இந்த வீட்டிலேயே தங்கி, என் கிளிப்பிள்ளையுடனும், தோழிகளுடனும் நான் காலங் கழிக்கலாகாதா? இளமைப் பருவந்தான் சந்தோஷத்தை அநுபவிப்பதற்குத் தகுந்த காலம்" என்று கல்லும் உருகும் இரக்கக் குரலில் வேண்டினாள்.

ஸலீமா இதற்கு அசைகிறவன்! மேலே தொங்கிக் கொண்டிருந்த சாலாந்தரின் மங்கிய ஒளி அவன் முகத்திற் குடிகொண்ட கோபத்தைப் பன்மடங்கு எடுத்துக் காட்டிற்று. தன் மகளைக் கடுமையாகப் பார்த்தான். அவளுடைய கண்கள் அவன் பிதாவின் கண்களைச் சந்தித்தன; பயத்தினால் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

"கரைதார், யாரிடம் பேசுகிறாய் என்று கவனித்துப் பேசு. என் புத்திரியானால் நீ எனக்குக் கீழ்ப்படிந்து தான் நடக்கவேண்டும். உன்னுடைய தாய் இறந்த பிறகு உன்னை எவ்வளவோ அன்புடனும் ஆதரவுடனும் வளர்த்து வந்தேன். இதுதானா நீ எனக்குச் செய்யும் கைம்மாறு! மற்றவர்களைப்போல் உன்னை அடக்கி வளர்த்திருந்தால் இப்படிப் பேசமாட்டாய்" என்று அதட்டிப் பேசினான்.

இவ்வார்த்தைகள் கரைதாரின் நெஞ்சில் சுருக்கென்று பாய்ந்தன. தன் பிதா தன்னைச் செல்வமாக வளர்த்ததை நினைத்துப் பார்த்தாள். தனக்காக அளவற்ற பொருள்களை வாங்கிக் குவித்ததை உன்னினாள். தன் தந்தையின் பிடிவாதத்தைத் தட்டியெறிய அவளுக்குத் தைரியம் வரவில்லை.

"தந்தையே, என்னை மன்னியுங்கள்" என்று ஈன ஸ்வரத்தில் கூறினாள். ஆனால், ஸதக் அலியை மணந்து கொள்வதாக ஒருபோதும் அவள் வாய்விட்டுச் சொல்லவில்லை.

"கண்ணே, நீ சம்மதித்து விட்டதாக நாளைக் காலை ஸதக் அலிக்கு ஆள் அனுப்புகிறேன். இன்னும் ஒரு மாதத்தில், கலியாணத்திற்கு வேண்டிய ஏற்பாடு செய்கிறேன்" என்று கூறிவிட்டு, சுரைதா நடுங்கியதைக் கவனியாதது போல், அன்பாகத் தட்டிக் கொடுத்து விட்டுப் போய்விட்டான். சுரைதா துக்கமே வடிவெடுத்த தங்க விக்கிரகம் போல் நின்றாள்.

"பாதிமா! இங்கே வா" என்று சுரைதா தன் தாதியைக் கூவி அழைத்தாள். தாதியும் தன் வேலையை விட்டுவிட்டு ஓடிவந்தாள்.

"சமாசாரம் கேட்டாயா? என் பிதா, நான் ஸதக் அலியை மணம் செய்து கொள்ள வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார், இரண்டு தாரத்தையும் இழந்த கிழட்டுக் கட்டைக்கு மூன்றாவது பெண்டாட்டி எதற்கு? இன்னும் ஒரு மாதத்தில்......பாதிமா, இதை எப்படிச் சகிப்பேன்? நீதான் காப்பாற்ற வேண்டும்" என்று கதறினாள்.

அந்தத் தாதி, "என்னமா அம்மா பதற்றம்? உன் தந்தையின் வார்த்தையைத் தட்டலாமா? ஸதக் அலிக்கு வயதாகிவிட்டதென்பது வாஸ்தவம்தான். ஆனால் அவர் செல்வத்திற்கு என்ன குறைச்சல்? அங்குச் சென்றால் நீ ராஜாத்தி மாதிரி இருக்கலாமே!" என்று கதையை ஆரம்பித்தாள்.

எதிர்பார்த்ததற்கு முற்றிலும் மாறாகத் தாதி பேசியதைக் கேட்டு அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிட்டாள் சுரைதா.

"பாதிமா! நான் உன்னிடம் கூறிய ரகசியத்தை மறந்து விட்டாயா?"

பர்திமா மூக்கின் மேல் கையை வைத்து, "கண்டபடி உளருதே. நீ அமீர்கானை மறந்துவிடு" என்றாள்.

"பர்திமா, நான் அவரைக் காதலிக்கிறேன். அவருடைய இளமையின் வசீகரமும் அழகும்தான் என்ன! அவர் வாசிக்கும் புல்லாங்குழலின் 'அமுத கீத வலையில்' என் மனதைப் பறிகொடுத்து விட்டேன்" என்று தன்னை யறியாமல் பேசினாள்.

"சுரைதா, என்ன பேச்சு இது? நீங்கள் இருவரும் தனிமையில் சல்லாபிப்பதைக் கண்டிக்க வேண்டுமென்று பல முறை எண்ணியதுண்டு. கொஞ்சம் இடம் கொடுத்தால் மடம் பிடுங்க ஆரம்பித்து விட்டாயே" என்று கடிந்து கூறினாள்.

சுரைதா கட்டிய மனக்கோட்டை யெல்லாம் இடிந்து விட்டது. இதுவரைக்கும் ஒத்தாசையாக இருந்த பர்திமாவும் மாறிவிட்டாள். இந்த உலகத்திலே அவளுக்காகப் பரிந்து பேசுவோரைக் காணோம்!

சுரைதாவுக்கு, ஏழைக் குடும்பத்தில் பிறந்த அமீர்கான் பாலிய சிநேகிதன். இருவரும் ஓடியாடி ஒன்றாகவே வளர்ந்தவர்கள். தோட்டத்திலுள்ள சண்பக மரத்தினடியில் இருவரும் கூடிக் கூடிப் பேசுவார்கள். சண்பகப் பூவைத் தொடுத்து அமீர்கான் சுரைதாவின் தலையில் சூடி அழகு பார்த்து மகிழ்வான். சுரைதாவுக்கு அமீர்கான் இல்லாமல் நேரம் போகாது. அமீர்கானுக்கும் சுரைதா இல்லாத உலகம் சூன்யம்தான். வயது வளர வளர இருவரிடையும் காதலும் வளர்ந்து வந்தது.

அன்று இரவு முழுதும், சுரைதா படுக்கையில் புரண்டு கொண்டிருந்தாள். விடி வெள்ளி தோன்றியதும் தாதிக்குத் தெரியாமல் மெதுவாக எழுந்திருந்து காஷ்மீர் தேசத்துச் சால்வையால் தேகத்தைப் போர்த்துக் கொண்டு, நேரே சண்பக மரத்தடிக்கு ஓடினாள்.

கீழ்வானம் பல்லாயிரம் ரோஜா இதழ்கள் சிதறியது போன்று சிவக்க ஆரம்பித்தது. அமீர்கான் தன் கையில் நாலைந்து மல்லிகைப் பூக்களுடன் காட்சியளித்தான். ஒரு

கையில் அவனை விட்டுப்பிரியாத புல்லாங்குழல் ஊசலாடிக்கொண்டிருந்தது. ஒரு கந்தர்வ யுவன் என்று சொல்லும்படியாகத் தோன்றினன்.

பாலிகையின் வாடிய முகத்தைக் கண்டு, அமீர்கான் தாவிச்சென்று அவளுடைய கையைப் பிடித்துக் கொண்டு, "சுரைதா! என்ன சங்கதி? நேற்றுச் சாயங் காலம், நீ எவ்வளவு சந்தோஷமாக இருந்தாய்! அதற்குள் என்ன நேர்ந்துவிட்டது? என்னிடம் சொல்வதற்குப் பயமா?" என்று பரபரப்புடன் கேள்விக்கு மேல் கேள்வி களை அடுக்கினன்.

"ஆ! அமீர், நாம் ஒருவர் மேல் ஒருவர் அன்புட னிருப்பது கடவுளுக்குச் சம்மதமில்லை போல் தோன்று கிறது. நேற்றிரவு, எனது தந்தை நான் ஸதக் அலியை மணக்க வேண்டுமென்று உத்தரவு இட்டுவிட்டார். அவருடைய பிடிவாத குணம் உனக்குத் தெரிந்ததுதான். இனி மேல் ஒருவரை யொருவர் சந்திக்க முடியுமோ என்று எனக்குப் பயமாயிருக்கிறது!" என்று கூறிப் பெருமூச்செறிந்தாள். அமீர்கானின் நெஞ்சில் ஒரு பாறாங் கல்லைப் போட்டது போலிருந்தது.

பிறகு காதலர்கள் இருவரும் வெகு நேரம் வரை பேசிக்கொண்டிருந்தார்கள். விதியினின்றும் தப்பச் சூழ்ச்சி செய்தார்கள். விதி யாரைத்தான் விட்டது! இதினின்றும் தப்பமுடியாது என்று இரண்டு பேருக்கும் நன்றாகத் தெரியும். ஆனல், காதலுக்குக் கண் உண்டா! காதல் வெள்ளத்தில் இருவரும் அடித்துக்கொண்டு போகப்பட்டார்கள்!

பறவை யினங்கள், 'கீச், கீச்' என்று மரங்களில் கத்தின. சூரியனும் தனது பொற் கிரணங்களைப் பரப்ப ஆரம்பித்தான். காதலர் இருவரும் தாங்கள் பிரிவதற் குரிய நேரம் வந்துவிட்ட தென்பதை உணர்ந்தார்கள். சுரைதா தன் கரங்களை அவன் பிடியினின்றும் விடு வித்துச் சால்வையைச் சீர்படுத்திக் கொண்டாள். 'அமீர்'

என்று கண்ணீர் பெருக ஒரு முறை அணைத்து அவனுடைய இரு கரங்களையும் பற்றி முத்தமிட்டாள். அவன் ஏதோ பேச வாயெடுத்தான். அதற்குள் சுரைதா ‘விறு விறு’ என்று அடிக்கடி திரும்பிப் பார்த்தபடியே போய்க்கொண்டிருந்தாள். அமீர்கான் மனமுடைந்து தேசாந்திரியாய்ச் சென்றான்.

சதக் அலியின் மனையில், மனச் சஞ்சலத்துடன் சுரைதா நாட்களைக் கழித்தாள். அவனும் அவளைத் திருப்தி செய்யத் தன்னாலான மட்டும் முயற்சி செய்தான். அவளிடம் அன்பாகப் பேசுவான்; விலையற்ற பொன்னுடைகளை அவளுக்கு அனுப்புவான். அந்நிய தேசத்து மான் குட்டியையும் கிளிப்பிள்ளையையும் அவள் பொழுது போக்கிற்காகக் கொணர்வித்தான். இவற்றையெல்லாம் அவள் திரும்பிப் பார்த்தால் தானே! அந்த வீட்டில் ஒரு நடைப் பிணமாகவே வாழ்ந்து வந்தாள். அவள் மனம் சமாதானம் அடையும் வரை அவளைத் துன்புறுத்த ஸதக் அலி விரும்பவில்லை.

உண்மையில் அமீர்கான் மேல் ஏற்பட்ட காதல்-தீ அவள் உடம்பை வாட்டிவிட்டது. அவனைப் பற்றிய செய்தி ஒன்றுமே தெரியவில்லை. அங்குள்ள தோட்டத்தில் உலவும் பொழுது அவனைப்பற்றியே கனவு காண்பாள். பார்த்த விடமெல்லாம் அவனுடைய உருவம் தான் தென்பட்டது. ஸதக் அலியின் வீட்டை விட்டு ஓடிவிடலாமா வென்று ஒரு சமயம் தோன்றும். உயிரை மாய்த்துக்கொண்டா லென்ன என்று எண்ணுவாள். அமீர்கானின் கதி என்னவாயிற்றோ என்று நினைத்துப் பொருமுவாள். தன் ஆவல் தீர அவனை ஒரு முறை பார்த்த பிறகு உயிரை விட்டுவிடுவது என்று தீர்மானம் செய்து கொண்டாள்.

வர வர, இந்த ஜன்மத்தில் அமீர்கானைப் பார்க்க முடியுமோ என்ற ஏக்கமே சுரைதாவின் மனதில் குடி கொண்டு விட்டது. எதிலும் மனது செல்லவில்லை. ஒரு நாள் மேல் மாடியில் உட்கார்ந்துகொண்டு, ஆகாயத்தில்

சஞ்சரிக்கும் மேகங்களைப் பார்த்துக் கொண்டிருந்தாள். திடீரென்று புல்லாங் குழலின் இனிய கானம் மாலைக் காற்றில் மிதந்து வந்து அவளை எட்டியது.

பழைய ஞாபகங்கள் ஒன்றன் பின் ஒன்றாய் வந்தன. ஓடிப்போய்த் தோட்டத்தை உற்றுப் பார்த்தாள். தோட்டக்காரனைத் தவிர ஒருவரையும் காணவில்லை. அவன் உதிர்ந்த ரோஜா இதழ்களைக் கூட்டி வாரிக் கொண்டிருந்தான். திகைத்துப் போய்த் திரும்பவும் உற்றுக் கவனித்தாள். தோட்டக்காரன் நிமிர்ந்து சுரைதாவைப் பார்த்தான்......... ஆஹா! அமீர்கானுடைய காதற் கண்களா! நம்பவே முடியவில்லை. 'என் சுரைதா' என்று மெதுவாக உச்சரித்தான். இதுவரை பாலைவனமாகத் தோன்றிய உலகம், பிருந்தாவனமாக மாறிவிட்டது.

வெகு சீக்கிரத்தில், சதக் அலி குடும்ப விஷயமாக வெகு தூரத்திலுள்ள ஊருக்குப் போக வேண்டியதாயிருந்தது. அந்தப்புரத்திற்குச் சென்று, "சுரைதா, இன்றிரவே நான் ஒரு அவசர ஜோலியாக வெளியூருக்குப் போக வேண்டியிருக்கிறது. திரும்பிவர ஒரு வாரமாகும்; அதுவரை ஜாக்கிரதையாக இரு. உனக்குத் தீங்கு நேரிடாதபடி காப்பதற்கு நம் வேலைக்காரர்கள் இருக்கிறார்கள்" என்று அவளை உற்சாகப்படுத்தி விட்டுப் புறப்பட்டான்.

சுரைதாவின் மனத்தில் மறுபடியும் அமீர்கானைப் பற்றிய எண்ணங்கள் தோன்றின. அவனைப் பார்த்ததில் மாத்திரம் அவள் மனம் சாந்தப்படவில்லை. ஒரு முறை எப்படியாவது அந்தப்புரத்திற்கு வரவழைத்துத் தன் எண்ணங்களையெல்லாம் அவனிடம் வெளியிட ஆலோசித்தாள். அதன் பயனாக, ஸதக் அலி பிரயாணப்பட்ட மூன்றாம் நாள் மாலை, மார்ஸினா என்ற சிநேகிதி அவள் கலியாண விஷயமாய்த் தன்னிடம் ஆலோசிக்க வருவதாகவும், அதனால் தோழிகள் அவளை உபசரித்த பின் இருவரையும் தனியே விட்டுச்செல்ல

வேண்டுமென்றும் சுரைதா தன் தோழிகளுக்கு உத்தர விட்டாள்.

கொஞ்ச நேரத்தில், முத்திரை அணிந்த ஒரு பெண்ணுருவம் சுரைதாவின் அறைக்குள் நுழைந்தது. தோழிகள் யாவரும் வரவேற்று உபசரித்து விட்டு விலகி விட்டார்கள். வழக்கம்போல் * இரண்டு சிவப்புப் பாதுகைகள் வெளியே காணப்பட்டன.

"அமீர், இந்த வேஷங்களெல்லாம் எனக்காகவா? நாம் பிரிந்த நாள் முதல் என் மனத்தில் குமிழி விட்டு எழுந்த எண்ணங்களை அடக்கிக் கொண்டிருந்தேன். அவற்றை எல்லாம் சொல்லித் தீர்த்தால்தான் என் மனம் நிம்மதியடையும். அதற்காகவே இங்கு வா வழைத்தேன்" என்று சுரைதா மொழிந்தாள்.

"சுரைதா, நாம் மறுபடியும் சந்திப்போம் என்று நான் நினைக்கவே யில்லை. ஆஹா! அந்தக் கடவுள் நம்மை எப்பொழுதும் குழந்தைகளாகப் படைத் திருந்தால் இந்தத் துக்கங்களை யெல்லாம் அனுபவிக்க வேண்டியிருக்குமா! நான் பலதும் பேசி உன்னைக் கஷ்டப்படுத்த விரும்பவில்லை. என் அருமைச் சுரைதா! நீ இனிமேல் என்னை மறந்துவிடு. ஸதக் அலியுடன் இன்ப வாழ்க்கை நடத்திவிட்டு மேலுலகத்தில் உனக் காகக் காத்திருக்கும் என்னை வந்து சந்திப்பாய்" என்றான். சுரைதா இவ்வளவையும் பொறுமையுடன் கேட்டுவிட்டுச் சிரித்தாள். சுரைதாவும் தான் சாகத் துணிந்துவிட்டதை அவனிடம் சொல்ல எண்ணியிருந்தாள்.

இவ்வாறு காதலர்கள் தங்கள் மனக்குறை தீரச் சிரித்தும், விளையாடியும், வருத்தப்பட்டும் பொழுது போவதே தெரியாமல் பேசிக்கொண்டிருந்தார்கள்.

---

*அராபியர்கள் தங்கள் மனைவியரின் அந்தப் புரத்துக்கு வரும்பொழுது வெளியே சிவப்புப் பாதுகைகள் இருந்தால் திரும்பிச் சென்று விடுவார்கள். உள்ளே அன்னிய ஸ்திரீகள் இருப்பதாகத் தெரிந்து கொள்வதற்கு இதுவே அடை யாளம்.

சதக் அலி தன் காரியங்களைச் சீக்கிரமாகவே முடித்துக்கொண்டு, மூன்றாம் நாள் அந்தி மயங்கும் சமயம் திரும்பிவிட்டான். வீட்டு வாசலில், காவலாளர்கள் தலை வணங்கி வரவேற்றார்கள். நெளிந்து நெளிந்து செல்லும் பாதையின் வழியாக சதக் அலி ஒட்டகையின் மேல் வந்து கொண்டிருந்தான். ஜாதி மல்லிகை, இருவாட்சி, ரோஜா முதலிய புஷ்பங்கள் 'ஜில்' என்று பூத்திருந்தன. அவனது நிலையற்ற மனம்கூட அன்று சாந்தியடைந்திருந்தது. சுரைதாவைப் பார்க்க அவனுடைய மனம் தாவிக் குதித்துக்கொண்டிருந்தது.

நெடுந்தூரம் பிரயாணம் செய்துவந்தபடியால், தூசு படிந்த ஆடைகளைக் களைந்து விட்டு அத்தர் கலந்த வெந்நீரில் ஸ்நானம் செய்தான். வெகு சீக்கிரமாகப் போஜனத்தை முடித்துக்கொண்டு அந்தப்புரத்திற்குக் கிளம்பினான்.

சுரைதாவின் அறையின் வெளியே, இரண்டு சிவப்புப் பாதுகைகள் காணப்பட்டன; பெரிதும் ஏமாற்றமடைந்தான். தன் ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு, தன் அந்தரங்க சேவகனாகிய ஒரு நீகிரோவ அடிமையைக் கூப்பிட்டு, "உள்ளே வந்திருப்பது யார்?" என்று வினவினான். யஜமானியின் சிநேகிதி மார்ஸினா என்பவள் வந்திருப்பதாக அவன் பதிலளித்தான். தான் இதுவரை கேட்டிராத புதுப் பெயராக இருந்தது. இருந்தாலும், அந்தப் பெண் போன பிற்பாடு வந்து தெரிவிக்கும்படி சேவகனை அங்கு நிறுத்திவிட்டுத் தன் அறைக்குச் சென்றுவிட்டான்.

காதலர்களிருவரும் இதுவரை மிருதுவான குரலில் பேசிக்கொண்டிருந்தார்கள். பிறகு தங்களையே மறந்து கனத்த குரலில் காதல் மொழிகளைப் பேசினார்கள். காதலின் வேகத்தில் உலகத்தையே மறந்துவிட்டார்கள்! ஸதக் அலியின் நினைவேயில்லை! அவன் நெடுந்தூரத்திலிருப்பதாக எண்ணி மதி மறந்தார்கள்!

அந்த நீகிரோவ அடிமை சிறிது நேரம் கொட்டாவி விட்டுக்கொண்டு அங்குமிங்கும் பார்த்துக்கொண்டிருந்தான். உள்ளிருந்து 'கலகல' என்று சிரிக்கும் சப்தம் கேட்டு உற்றுக் கவனிக்க ஆரம்பித்தான். ஒரு ஆண் குரல்தான் கேட்பது என்று அறிந்து கொண்டான். உடனே உள்ளே பாய்ந்து அவனைக் கொன்றுவிடலாமா என்று எண்ணினான். அவ்வாறு செய்ய மனந்துணியவில்லை. திடீரென்று யஜமானைக் கூட்டிக்கொண்டு வருவதுதான் உசிதமென்று ஸதக் அலியிடம் சென்று தெரிவித்தான்.

ஸதக் அலி அப்படியே ஸ்தம்பித்துப் போய் விட்டான். சுரைதாவின் அந்தப்புரத்தருகில் வந்து மௌனமாகச் செவிசாய்த்துக் கவனித்தான். வாளை உருவிக்கொண்டு, "இதோ இருவரையும் வெட்டி விடுகிறேன். அவள் காதலனைத்தான் முதலில் துண்டிப்பேன். அந்தக் காட்சியை அவளே பார்த்து ஆனந்திக்கட்டும்" என்று கர்ஜித்தான். அந்த அடிமை தனக்கு ஆபத்து நேரிடுமென்று பயந்து, ஸதக் அலியின் கையைப் பிடித்துக்கொண்டு, மிகவும் தாழ்ந்த குரலில் ஏதோ கூறினான். ஸதக் அலி சிறிது யோசித்துவிட்டு அவர்கள் மேல் வேறு வகையில் வஞ்சந் தீர்த்துக் கொள்ளத் தீர்மானித்து அவ்விடத்தை விட்டகன்றான்.

சிறிது நேரத்திற்கெல்லாம் சுரைதாவின் அறைக் கதவு தட்டப்படும் சப்தம் கேட்டுக் காதலர் இருவரும் விழித்தெழுந்தார்கள். சுரைதா கதவைத் திறந்தாள். ஒரு மூலையில் கிடந்த சோபாவின் மீது மார்லினா முகத் திரையை நன்றாக இழுத்துப் போர்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். சேவகன் வினயமாக உள்ளே நுழைந்து, "அம்மா, யஜமான் வந்துவிட்டார். உங்களைப் பார்க்க வேண்டுமென்று விரும்புகிறார்" என்று கூறினான்.

சுரைதாவின் முகம் வெளுத்துப் போய்விட்டது. என்றாலும், தைரியத்தைக் கைவிடாமல், "அதற்குள் வந்துவிட்டாரா! சரி, சிறிது நேரத்தில் வரச்சொல்லு" என்று சமாளித்துக்கொண்டு பதிலளித்தாள்.

சேவகனை அனுப்பிவிட்டு, அமீர்கானைப் பார்த்து, "அமீர், தப்பித்துக்கொள்! இந்தத் துஷ்டன் கண்டு கொண்டால் உன் உயிருக்கே ஹானி ஏற்படலாம்" என்று கலவரத்தோடு கூறினாள்.

"சாவுக்கா நான் பயப்படுகிறவன்? சுரைதா, நீ இல்லாத வாழ்வு என்ன வாழ்வு? இன்றே இறந்து விட்டால் என் துன்பம் நீங்கிவிடும்" என்று சொல்லித் தன் வாழ்க்கையில் வெறுப்பைக் காட்டினான். சுரைதாவின் வேண்டுகோளுக் கிணங்கி பாதுகைகளைப் பற்றிக்கொண்டு, அவளைக் கடைக்கண் வழியாக நோக்கி விட்டு, இருண்ட பின் வாசல் பாதை வழியாகத் துரித மாக நடந்தான்.

சுரைதாவின் நெஞ்சு 'திக், திக்' என்று அடித்துக் கொண்டது. வெருண்ட மான் போன்று ஸதக் அலியின் வரவை எதிர்பார்த்துக் கொண்டு நின்றாள். உலகை இருள் வந்து கவிந்து கொண்டது. 'வானக் கடலிலே வெடித்தெழுந்த வைரங்கள்' போன்று நக்ஷத்திரங்கள் பிரகாசித்தன. பட்டு ரோஜாவின் மணத்தைப் பிள்ளைத் தென்றல் ஏந்தி வந்தது.

மிருதுவான மக்மல் திண்டின்மேல் சுரைதா படுத் திருந்தாள். வெகுநேரமாகியும் ஸதக் அலியைக் காண வில்லை. நிசப்தமே நிலவியது. தன் காதலனுக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்து விட்டதோ எனத் திகி லடைந்தாள். தனது பணிப் பெண்ணைக் கூப்பிட்டு ஒரு அகல் விளக்கை எடுத்துக்கொண்டு 'கும்' இருட்டில் போவதற்கு எத்தனித்தாள்.

அச்சமயம் 'கிறிச்' என்ற சப்தத்துடன் கதவு திறக்கப்பட்டது, சுரைதாவின் முன்பாக, ஸதக் அலி ஏளனச் சிரிப்புடன் தோன்றினான், "சுரைதா, நான் இங்குவரச் சிறிது தாமதித்து விட்டது. மன்னித்துக் கொள். ஊரிலிருந்து வந்த களைப்பினால் சிறிது கண்ணயர்ந்துவிட்டேன். நான் உனக்காகக் கொண்டு வந்திருக்கும் வெகுமதிகளைப் பார்க்கிறாயா?" என்று

கூறி முடிப்பதற்குள்ளே பல வேலையாட்கள் அங்கே தோன்றினார்கள்.

மறு விநாடியில், உயர்ந்த ஜரிகை வேலைபாட்டமைந்த முகத்திரைகள், முத்து மாலைகள், தையல் வேலைப் பாட்டமைந்த உடைகள், நவநவமான கல்லிழைத்த மோதிரங்கள் எல்லாம் அவள் முன்னால் வந்து குவிந்தன. சுரைதா ஒவ்வொன்றாகப் பார்வையிட ஆரம்பித்தாள்.

“சுரைதா, இவற்றை யெல்லாம்விட உயர்ந்த வஸ்து ஒன்றைக் கொண்டுவந்திருக்கிறேன். அதையும் பார்” என்று கூறிவிட்டுத் தன் பக்கத்திலிருந்த நீகிரோவ அடிமையிடம் ஒரு சமிக்ஞை செய்தான். சுரைதா தன் மனத்தை எவ்வளவோ சமாதானப் படுத்திக் கொண்டாள். ஆனால் விவரிக்க முடியாத பயங்கர எண்ணங்கள் பீறிக்கொண்டெழுந்தன.

வேலையாட்கள் தோதகத்தி மரத்தினால் செய்யப்பட்ட பளபள வென்ற ஓர் அழகிய பெட்டியைக் கொண்டு வந்தார்கள். அதன் மேல் தந்தத்தினாலும், வெள்ளியினாலும் பூ வேலைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

“இதற்குள்தான் மனோரம்மியமான ஒரு வஸ்து இருக்கிறது. நீ திறந்து பார்க்கலாம்” என்று ஸதக் அலி சுரைதாவைப் பார்த்துச் சொன்னான்.

சுரைதா, நடுங்கிக்கொண்டே தனது மெல்லிய கரங்களால் மூடியைத் திறந்தாள். அடுக்கடுக்காக வெண்மையான மரத்தோடுகள் காணப்பட்டன. அவற்றைச் சிறிது நீக்கியதும், இரத்தக் கறைபட்ட இரண்டு சிவப்புப் பாதுகைகள் ஒரு பட்டாடையில் பொதியப்பட்டுத் தெரிந்தன. ‘ஓ’ என்று அலறிக் கொண்டே அப்பட்டாடையை வெளியே இழுத்தெறிந்தாள்.

ஆஹா! தன் உயிரையும் விட மேலாக மதித்த பொருள் அங்கே இருந்தது. இரத்தம் தோய்ந்த தலைச் சுருள்! தன்னிடம் பலமுறை காதல் பேசிய மலர்ந்த கண்கள்! இறக்கும்பொழுதும் அவள் பெயரையே உச்சரித்துக் கொண்டு பிரிந்த உதடுகள்!

"அடி துரோகி! என்னையா ஏமாற்ற நினைத்தாய்; இதுதான் நான் உனக்குக் கொண்டு வந்த வெகுமதி! பெற்றுக்கொள்" என்று தான் வெற்றி பெற்று விட்டதாகக் கொக்கரித்தான்.

இடி விழுந்தவள்போல் சுரைதா ஒரு நிமிஷம் ஒன்றும் தோன்றாமல் விழித்தாள். இரு கைகளையும் கூப்பி, "பிரபோ, என்னையும் வெட்டிவிடலாகாதா?" என்று வேண்டினாள்.

"உன்னையும் கொன்றுவிட நினைத்தேன். உன்னைக் கொல்வதில் என்ன பிரயோஜனம்? அது உனக்குத் தகுந்த தண்டனையாகாது. தூங்கும் பொழுதும், விழித்திருக்கும் பொழுதும் சதா நீ என்னுடனேயே இருக்க வேண்டும். என் காதல் மொழிகளை உன் செவி கேட்டுக் கொண்டேயிருக்க வேண்டும். இந்த இரண்டு பதுமைகளும் உன் எதிரிலேயே எப்பொழுதும் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் என் மனது நிம்மதியடையும்" என்று பேய்மாதிரி சிரித்துக் கொண்டே மொழிந்தான்.

எல்லோரும் ஒரு கணம் திகைத்து நின்றார்கள். மின்னல் போல் சுரைதா ஸதக் அலி மேல் பாய்ந்தாள். யாரும் தடுப்பதற்குள் அவன் உடைவாளைப் பிடுங்கித் தன் இருதயத்தில் அழுத்தி விட்டாள்!

"சுரைதா உனக்குரியவள் அல்ல" என்று சொல்லி மூர்ச்சித்தாள். சுவாசம் மெதுவாக வந்து கொண்டிருந்தது. "அமீர்கான்! அமீர்கான்!" என்று கூறிக் கொண்டே உயிர் நீத்தாள்.

அங்கே தொங்கிக் கொண்டிருந்த கூண்டிலடைபட்ட கிளியும் "அமீர்கான்! அமீர்கான்!" என்று வாய் சலிக்காது கத்திக்கொண்டிருந்தது.

ஒரு செழிப்பான தோட்டத்தில் தூய வெண்மையான மல்லிகைப் பூவும், சிரிக்கும் ரோஜாப் பூவும் பூத்திருந்தன. மல்லிகைப் பூவை யாரோ திருடிவிட்டார்கள். இதைச் சகியாது ரோஜாவின் மெல்லிய இதழ்களும் உதிர்ந்து விட்டன.

பேசா மடந்தை

கோபாலன் கல்வியில் வெகு சமர்த்தன். எல்லாப் பரீட்சைகளிலும் முதலாவதாகத் தேறி வந்தான். எப்போதும் புஸ்தகமும் கையுமாகத்தான் இருந்தான். வீடு தப்பினால் கலாசாலை; கலாசாலை தப்பினால் வீடு; வேறு வெளியிற் போவதென்பதே இல்லை. அவனுக்குத் தோழர்களும் அநேகமாக இல்லை என்றே சொல்லலாம். தன்னுடன் படித்துவரும் பிள்ளைகளோடு கலகலப்பாய் இருந்தால்தானே அவர்களும் நெருங்கிப் பழகுவார்கள்? ஒன்றும் பேசாமல் ஊமை மாதிரி இருந்தால், அவர்கள்தான் என்ன செய்வார்கள்? எல்லாரும் சேர்ந்து **பேசாமடந்தை** என்று பட்டம் சூட்டிவிட்டார்கள். ஒருவாறு பழிக்குப் பழியும் ஆயிற்று.

கோபு இதைப் பொருட்படுத்தவே இல்லை. சென்னை 'மெடிக்கல்' கலாசாலையில் அவனுக்கு இது கடைசி வருஷம். அங்கேயும் இவன் பட்டப் பெயர் பரவி விட்டது. அங்கே வாசித்து வந்த மாணவிகளும் இவனைப் பேசாமடந்தை என்று குறிப்பிடுவதே வழக்கம். அவர்கள் பேசுவதெல்லாம் இவன் காதில் பட்டால் தானே?

'மெடிக்கல்' மாணவர்கள் இவனை எப்படியாவது கேலி செய்துவிட வேண்டும் என்று எண்ணிவிட்டார்கள். ஒரு சந்தர்ப்பமும் வாய்த்தது. ஆசிரியர்களுக்கும், அவ்வருஷத்தோடு மெடிக்கல் கல்வி முடிந்து விடுகிற மாணவர்களுக்கும், அங்குள்ள மற்ற மாணவர்கள் ஒரு தேநீர் விருந்து அளிப்பதாகத் தீர்மானித்தார்கள். அதில், கல்வி முடிகிற மாணவர்களுக்குள் யார் நன்றி கூறுவது என்ற கேள்வி எழுந்தது. அவர்கள் விஷமமாகக் கோபுவின் பெயரைக் குறிப்பிட்டுவிட்டனர். வேறொரு காரியமுங்கூட. கலாசாலையில் எல்லா நடவடிக்கைகளும் ஆங்கிலத்தில் இதுவரை நடந்து வந்திருக்கின்றன.

இப்பொழுது திடீரென்று பாஷாபிமானம் முளைத்து விட்டது. பேசுவோர் எல்லாரும் அவரவர் தாய் மொழியிலேயே பேசவேண்டும் என்று ஏற்பாடாயிற்று.

தேர்தலுக்குக் குறிப்பிட்ட நாளும் நெருங்கி வந்தது. கோபுவைத் தவிர, பேசுவோர் எல்லார்க்கும் முன் கூட்டி அறிவிக்கப்பட்டது. தமிழ்ப் பண்டிதர்களுக்குக் கிராக்கி வந்துவிட்டது. அவர்களிடம் போய், கலாசாலை ஆசிரியர் களுள்படப் பேச வேண்டியவர்களெல்லாம் ஒவ்வொரு மணி நேரத்திற்குக் குறையாத பிரசங்கங்கள் எழுதி வாங்கி நெட்டுருப்போடத் தொடங்கினார்கள். ஆனால் கோபுவுக்குமட்டும் இவ்விஷயம் ஒன்றும் தெரியாது. ஒரு நாள் மாலை தன் இருப்பிடத்தில் ஒரு கடிதத் துண்டு இருந்தது. அதில் இவனைப் பேச வைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் நடந்திருப்பதாயும் முன் கூட்டித் தயாராகிக் கொள்ள வேண்டும் என்பதாயும் எழுதியிருந்தது. யார் எழுதியதாயிருக்கும் என்று கோபு ஆராயத் தொடங் கினான். ஒரு பெண்ணின் கையெழுத்து என்று தோன் றிற்று. முடிவில் தனது வகுப்பில் இருக்கும் சுகுணா என் பவள் எழுதியிருக்கவேண்டும் என்று நிச்சயித்தான். வேடிக்கையென்று நினைத்தானே தவிர, உண்மை யென்று நினைக்கவே இல்லை. சுகுணா பலரோடும் தாராள மாகப் பேசிக் கேலி செய்வதை, சிற்சில சமயங்களில் பார்த்திருக்கிறான். அதனால்தான் இப்படி நினைத்தான்.

கடிதத் துண்டைப் பார்த்ததற்கப்புறம், சுகுணாவைக் கூர்ந்து கவனித்தான். முகத்தில் இளம் புன்னகை எப்பொழுதும் தவழ்ந்து கொண்டிருந்த போதிலும், விஷமக்காரியாகவே தோன்றவில்லை. அவள் மிகுந்த அழகு வாய்ந்தவளாக இப்போது புலப்பட்டாள். அவள் அழகு இதுவரை தன் பார்வைக்குத் தோன்றவில்லையே என்று ஆச்சரியமடைந்தான். யௌவனத்தில் நீந்திக் களிக்கும் சௌந்தர்ய லக்ஷ்மீகரம் அவன் இதயத்தைத் தொட்டுவிட்டது. பிறகு அவளோடு பேசும்போது அடங்காப் பொறுமையும் வருத்தமுங் கொண்டான். தன

லஜ்ஜையினால் அவளருகில் போவதற்குக் கூட மனங் கூசிற்று.

நாலைந்து தினங்கள் கழிந்ததும், தேநீர்க் கூட்டம் நிகழ்ந்தது. சுகுணா வெகு களிப்புடன் இருந்தாள். தன்னுடன் கலாசாலையில் வாசிக்கும் ஆண்பாலார்களுள் சிலர் அவளோடு தமாஷாய்ப் பேசிக்கொண்டிருந்தார்கள். அவள் வாயிலிருந்து மரியாதை தவறி ஒரு வார்த்தை கூட வராமல் போனாலும், அவளுடன் பேசுபவர்களோடு குதூகலமாய்த்தான் இருந்தாள். கோபு அது வரையில்லாத வருத்தத்தை அடைந்தான். அவன் மிரண்டு விழிப்பதையும் அவள் கவனிக்காமலில்லை. இவ்வாறு அவன் கலவரப்பட்டிருக்கும் சமயத்தில் புது மாணவர்கள் சிலர் பிரியாவிடைபற்றி உபசாரமொழி பேசலாயினர். கலாசாலை யாசிரியர்கள் சிலர் தமிழில் பேசினார்கள். மாணவர்கள் பலரும் மறைமுகமாக நகைத்தார்கள். பின் திடீரென்று தலைமை தாங்கியவர், வெளிச் செல்லும் மாணவர்களின் பிரதிநிதியாக, கோபுவைப் பேசும்படி சொல்லினார். மாணவர் எல்லாரும இவனையே பார்த்தார்கள். தூரத்திலிருந்து கேலிச் சிரிப்பொலியும் இவன் காதில் பட்டது. மரப்பாவை போல் எழுந்து நின்றான். 'தலைவரவர்களே, சகோதரி சகோதரர்களே' என்றான். அப்புறம் ஒரு வார்த்தை கூட அவன் வாயிலிருந்து வர மறுத்துவிட்டது. அழாத பாவனையாக நின்றான். சுகுணாவை ஒரு முறை பார்த்தான். அவள் முகத்தில் ஏளனமில்லை; துக்கம் நிரம்பியிருந்தது. இதற்கிடையில் மாணவர்கள் எல்லாரும் கத்தத்தொடங்கி விட்டார்கள். தலைவர் அடுத்துப் பேசுபவனை விடை சொல்லும்படி கூறி, மேல் நிகழ்ச்சிகளை முடித்தார்.

கோபு வீடு வந்து சேர்ந்தான். எப்படி, எந்த வழியாக என்பது கூட அவனுக்குத் தெரியமாட்டாது. தன்னினைவு இல்லாமலே எந்திரப் பாவை போல் நடந்து வந்து வீட்டுக்குள் புகுந்தான்.

வீட்டில் அவனுக்குத் தாத்தாவும் பாட்டியும்தான் உண்டு. வெகு காலத்திற்கு முன்னாலேயே தன் பெற்

ரூர்களை இழந்துவிட்டான். தாத்தா நல்ல வேளையாக வெளியில் போயிருந்தார். பாட்டி தன் அருமைப் பேரன் பைத்தியம் பிடித்தது போலிருப்பதையும் துக்கத்தில் மூழ்கி யெழுந்தவன் போலிருப்பதையும் கண்டு பயந்து போனாள். எத்தனையோ வகையாகக் கேட்டுப் பார்த்தாள். பையன் பதில் சொல்லுவதாகக் காணவில்லை. அவன் சாதம் வேண்டாமென்று படுக்கப் போய் விட்டான். ஆனால் உறக்கம் வரவில்லை. தாத்தா எங்கே யெல்லாமோ வம்பளந்து விட்டு வரும்போது கலாசாலை மாணவர்கள் தம் பேரப் பையனது சமாசாரத்தைப் பேசுவதன் மூலம் தெரிந்துகொண்டு வந்து சேர்ந்தார். பையனை எழுப்பிப் பார்த்தார். உறங்கினால் தானே எழுந்திருப்பான்!

பேசப் பழகுவது எப்படியென்ற ஒரே கவலைதான் அவன் மனத்திலிருந்தது. ஒன்றிலும் மனஞ் செல்லவில்லை. தன்னைப்பற்றிச் சுகுணா என்ன நினைப்பாள் என்ற நினைவும் அடிக்கடி துன்புறுத்தி வந்தது. எச்சரிக்கை செய்தது அவளாகத்தான் இருக்கவேண்டும். இல்லாமற் போனால், அவள் முகத்தில் ஏன் அவ்வளவு சோகம் இருந்தது? எச்சரிக்கையை உண்மை எனக் கொண்டிருந்தால், பேசும் விஷயத்தை முன் கூட்டிக் கோவைப்படுத்தி வைத்திருக்கலாமே! ஒன்றும் செய்யாமல் சும்மா இருந்ததுதானே பெரும் பிழை. இவ்வாறெல்லாம் எண்ணியெண்ணி நொந்து கொண்டிருந்தான்.

காலையில் தாத்தா இவனைத் தொந்தரவு செய்ய வேண்டாமென்று வெளியே சென்று மெடிக்கல் கலாசாலைப் பையனொருவனைக் கண்டு விவரம் தெரிவதற்குப் போனார். அவன் வீட்டை நெடுக விசாரித்துக் கொண்டு போனவர், வழியில் தமது பழங்கால நண்பரொருவரைத் தற்செயலாகச் சந்தித்தார். இந் நண்பர் அவரை வீட்டுக்கு அழைத்துச் சென்றார். ஒருவரை யொருவர் பார்த்து வருஷக்கணக்காய்விட்டபடியால், இரு நண்பர்களும் மிகவும் அளவளாவிப் பேசிக் கொண்டிருந்

தனர். அப்போது உள்ளறையிலிருந்து ஒரு பெண் பாடும் சத்தம் கேட்டது. பாடுவது யாரென்று தாத்தா கேட்க, தமது தங்கையின் குமாரி சுகுணா என்றும், பெற்றோரை இழந்து விட்டமையால் தம்முடனேயே அவள் இருந்து வருகிறாளென்றும் சொல்லிவிட்டு, அவள் கலாசாலையில் முந்தின நாள் நடந்த விஷயத்தை அவள் சொன்னபடியே திரும்ப ரஸமாய்க் கூறிமுடித்தார். தாத்தாவும் தனக்குச் சம்பந்தம் உண்டென்று சிறிதும் காட்டிக் கொள்ளவில்லை. சுகுணாவை மட்டும் பார்க்க வேண்டும் என்று ஒரு நினைப்புத் தோன்றிற்று. இதற்கு ஏற்றாற் போல, நண்பரும் சுகுணாவை அழைத்துக் காப்பி கொண்டுவரச் சொன்னது நல்லதாய்ப்போயிற்று. தாத்தா அவள் அழகைப் பார்த்ததும் மலைத்துப் போனார். சில நேரம் தமது நண்பரிடம் பேசியிருந்து வீடு திரும்பிவிட்டார்.

அன்று கலாசாலைக்குப் போக போகவில்லை; தாத்தாவும் ஏனென்று கேட்கவில்லை. கன்னிமாரா நூல் நிலயத்திற்குச் சென்று அங்குள்ள பத்திரிகைகளையெல் லாம் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தான். திடீரென்று ஒரு விளம்பரம் அவன் கண்ணைக் கவர்ந்தது. ஒரு வாரத் திற்குள் சிறந்த வாசாலகன் ஆய்விடலாம் என்று கண்டான். ஆழ்ந்த சிந்தையில் மூழ்கினான். நூல் நிலயத்தில் வாசம் செய்து கொண்டிருந்த எலியொன்று இவன் காலின்மேல் விழுந்து ஓடியது. கனவிலிருந்து விழித்தெழுபவன் போல எழுந்து விரைவாய் வெளியே வந்தான். வாசல் கதவு இவன் தலையில் பட்டு விட்டது. சிறிதுநேரம் மயங்கி அசைவற்று நின்று பிற்பாடு வீட்டுக்குத் திரும்பினான்.

தாத்தாவைப் பார்த்ததும், என்றுமில்லாத குரலில் வேகத்தோடு முந்தினநாள் நடந்த விஷயத்தை விவரித் துக் கூறினான். தான் இனிமேல் பேச்சில் வல்லவ னாவதற்கு முயலப் போவதாகச் சொல்லிவிட்டு, சாப்பாடு ஆனதும் தனது அறையில் சென்று படுத்துக்கொண்

டான். மறுநாள் விளம்பரத்திற் கண்ட விலாசத்திற்குக் கடிதமும் எழுதி, வேண்டும் தொகையும் அனுப்பினான். பின் கலாசாலைக்குச் சென்றான். இவனைக் கண்டதும் மாணவர்களிடையே கேலி என்ற சிரிப்பு; தலையைக் கவிழ்ந்து கொண்டே வகுப்பிலிருந்தான். மூன்று நாளில் விளம்பரச் செய்தி ஆபிசிலிருந்து பதில் வந்தது. அதில் கூறியபடியே ஒரு வாரம் இரவு பகல் உறக்கமில்லாமல் படிப்பதும், ஞாபகப்படுத்திக் கொள்வதும், ஒருவரும் இல்லாத சமயத்தில் தனக்குத்தானே பேசுவதுமாக இருந்தான். பின் ஒரு நாள் கலாசாலை சென்று தலைமை உபாத்தியாயரைக் கண்டு, வைத்தியப் பரீக்ஷையைக் குறித்துப் பல விஷயங்களைப் பேசினான். அவருக்கு ஆச்சரியமுண்டாய் விட்டது. தன் முன்பாகப் பிரசித்தி பெற்று விளங்கப் போகிற ஒரு வைத்திய நிபுணன் இருப்பதாகவே கருதினார். அவனை நாற்காலியில் இருக்கும்படியாகச் செய்து மிக்க அன்போடு பேசிக் கொண்டிருந்தார். பின்பு கோபு தனது வகுப்புக்குள் வந்தான். ஒரு சிலர் இவன் வருவதைப் பார்த்து நகைக்கத் தொடங்கினார்கள். ஆனால் இவனோ வெகு கம்பீரமாயும் நிதானமாயும் தனது ஆசனத்தில் வந்து உட்கார்ந்தான். வகுப்பு நடத்திக் கொண்டிருந்த உபாத்தியாயர் ஒரு மாணவனிடத்தில் ஏதோ கேள்வி கேட்டுக் கொண்டிருந்தார். அவன் தத்தளிப்பதைப் பார்த்துக் கோபு எழுந்திருந்து விஸ்தாரமாக விடை அளித்தான். மாணவர்களுக்கெல்லாம் பெரு வியப்பாக இருந்தது. சுகுணாவுக்கும் மகிழ்ச்சி ஒரு பக்கம்; வியப்பு ஒரு பக்கம். இதுவரையில் மாணவிகள் இருக்கும் இடத்தையே திரும்பிப் பாராதவன், அன்று மாலையில் சுகுணாவும் வேறு சில மாணவிகளும் பேசிக்கொண்டிருந்த கூட்டத்தில் கலந்து தாராளமாய்ப் பேசலானான். மற்றவர்கள் பேசுவதற்கு இடமே கொடுக்காமல் தட்டுத்தடையின்றிப் பல விஷயங்களைக் குறித்தும் சுலபமாய் வார்த்தைகள் வந்த வண்ணமாயிருந்தன. வகுப்பு முடிந்து வீட்டுக்குத் திரும்பும்போது, சுகுணா ஏறிய டிராம் வண்டியில் தானும் ஏறிக்கொண்டு, அவள் இறங்குமிடத்தில்

தானும் இறங்கி, அவள் மாமாவுக்குத் தன்னை அறிமுகம் செய்யும்படி கேட்டுக் கொண்டான். சுகுணாவுக்கு இன்ன செய்வதென்று தெரியவில்லை. முடிவில், மறு நாள் தன்னோடல்லாமல் அவனுக்வே மாலையில் வந்தால், அறிமுகம் செய்விப்பதாகக் கூறினாள். கோபுவும் தன் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தான்.

தாத்தாவுக்கு மிக்க கலவரமாகிவிட்டது. கடந்த பத்து நாளாகப் பேரப்பையன் சரியாக இல்லை என்பதை உணர்ந்தார். ஒரு வேளை பைத்தியத்திற்கு ஆரம்பமோ என்று கூட நினைத்தார். எதற்கும் தம்முடைய நண்பரிடம் கலந்து கொள்ளலாமே என்று அவர் வீட்டுக்குச் சென்றார். நண்பர் வீட்டில் இல்லை. அப்போது சுகுணா வீட்டின் உள்ளேயிருந்து வெளியே வரவே, கோபுவைக் குறித்து விசாரிக்கத் தொடங்கினார். முதலில் சுகுணாவுக்கு அவரிடம் எப்படிச் சொல்வது என்று சங்கோசமாயிருந்தது. தாம் இன்னாரென்று தெரியப்படுத்தித் தாராளமாகப் பேசவே, அவளும் விவரங்களைச் சொன்னாள். பைத்தியம்தான் என்று தாத்தாவுக்கு உறுதியாகிவிட்டது. பேசிக் கொண்டிருக்கும் மத்தியில் தமது நண்பர் வர, அவரிடத்தில் தம் பேரப்பையன் கதையை விரிவாகக் கூறி முடித்தார். நண்பர் தம் வீட்டிற்கு அவனை அழைத்து வரும்படி தாத்தாவிடம் சொல்லிச் சமாதானப்படுத்தி அனுப்பினார்.

மறுநாள் சுகுணா கலாசாலையிலிருந்து வந்து கொஞ்ச நேரமாயிற்று. வெளியில் ஆள் வரும் அரவம் கேட்டது. வெளியே வந்து பார்க்கவே, கோபு நின்று கொண்டிருப்பதைக் கண்டாள். உடனே தன் மாமாவிடம் வந்து, தன்னுடன் படித்து வருபவனும், முந்தின நாள் வந்த தாத்தாவின் பேரப்பையனும் ஆகிய கோபு வந்திருக்கிறான் என்று சொல்லவே, அவரும் வெளியே வந்தார். மாமாவிடம் கோபுவை அறிமுகப் படுத்தி விட்டுப் பக்கத்தில் சுகுணா நின்று கொண்டிருந்தாள். கோபுவை உட்காரச் சொல்லிப் பலவகையான கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்தார். அவற்றிற்

கெல்லாம் அவன் மிகத்தெளிவாகப் பதில் சொல்லி வந்தான். பதில் சொல்லுவதில் எவ்விதமான தடங்கலும் இல்லை. சற்று நேரமானதும், தேர்வு விடை பெற்றான். போகும்போது ஒய். எம். ஸி. ஏ-இல் சனிக்கிழமையன்று 'மாணவர்களும் அரசியல் முயற்சிகளும்' என்ற பொருள் பற்றி ஒரு விவாதம் நடக்கப் போவதாகவும், அதில் தான் பேசுவதாகவும், அதற்குச் சுகுணாவும் அவள் மாமாவும் அவசியம் வரவேண்டும் என்றும் வேண்டிக்கொண்டு புறப்பட்டான்.

சுகுணா:—இப்படிப் பேசுகிற ஆசாமிக்குப் பேசா மடந்தை என்று பேர் வைத்து விட்டார்கள், மாமா! சில நாள்களுக்குமுன் வரையில், இவர் பேசாமடந்தையாய்த் தான் இருந்தார்.

மாமா:—பையன் நல்ல கெட்டிக்காரன் என்றுதான் தோன்றுகிறது. மூளைக் கோளாறு யாதும் இருப்பதாகத் தெரியவில்லை.

சுகுணா:—முன்னிருந்ததற்கும் இப்போதிருப்பதற்கும் உள்ள வேறுபாடு அதிகமாயிருப்பதனாலே அப்படி நினைக்கத் தோன்றுகிறது. வகுப்புப் பரீட்சைகளிலும், சர்வகலாசாலைப் பரீட்சைகளிலும் முதலாவதாகத் தேறிவந்திருக்கிறார். இந்த வேறுபாட்டுக்கு என்ன காரணம் என்று தெரியவில்லை.

இவ்வாறு சம்பாஷணை நடந்து கொண்டிருந்தது. சற்றுப் பொறுத்து, தாத்தா மிக்வும் கவலையுடன் வந்து சேர்ந்தார். "பையனை அழைத்து வரலாம் என்று நினைத்திருந்தேன். ஆனால் அவனோ வேறு எங்கேயோ போய்விட்டான்" என்று சொன்னார். தம்மிடம் அவன் வந்ததையும் அவனோடு பேசிக் கொண்டிருந்ததையும் நண்பர் சொல்லவே, தாத்தாவுக்கு ஒருவிதத்தில் சந்தோஷமிருந்தாலும் மற்றொரு வகையில் கவலை ஏற்பட்டது. ஒரு வேளை பெண்களைச் சுற்றித்திரிகிறானோ தம்முடைய பேரன் என்று கூட நினைத்துவிட்டார்.

சனிக்கிழமைப் பிரசங்கத்துக்குத் தாமும் வருவதாகச் சொல்லி, வீடு சென்றார்.

கோபு மாலைப் பொழுதுகளில் இப்போது வீட்டில் இருப்பதில்லை. ஏதாவது ஒரு பிரசங்கத்துக்குப் போய் விடுவான். எப்படியாவது அனுமதிபெற்று ஒவ்வொரு பிரசங்கத்திலும் பேசிவிடுவான். பேசினால் முக்கால் மணிக்குக் குறைவதில்லை, தட்டுத்தடை கிடையாது. ஏதாவது தெரியாத்தனமாய், காரியதரிசிகள் தாமாகவே இவனிடம் வந்து பேசும்படி கேட்டுக் கொண்டாலோ, ஆபத்துத்தான்: இரண்டுமணி நேரம் சரமாரியாய்ப் பொழிந்து தள்ளிவிடுவான்.

குறித்த சனிக்கிழமை வந்தது. அன்று விவாதப் போட்டியில் நீதிபதிகளாய் அமர்ந்தோர் நமது தேசத்திலே சொல்வன்மையில் முதல் ஸ்தானம் வகித்த இருவர். போட்டியில் பத்துப்பேர்கள் பேசினார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் தேர்ந்த வாசாலகர்கள்; நல்ல பயிற்சியுடையவர்கள். காண வந்தோர்களும் பெருந் திரளாயிருந்தனர். அக்கூட்டத்தில் சுகுணா, அவள் மாமா, தாத்தா ஆகிய மூவரும் உண்டு. கோபு ஏழா மவனாகப் பேசுதற்கு அழைக்கப்பட்டான். மாணவர்கள் அரசியல் முறைகளில் தலையிடுதல் வேண்டும் என்பதை ஆதரித்துப் பேசினான். அன்று அவன் புரிந்த பிரசங்கம் எல்லார்க்கும் பேராச்சரியத்தை விளைவித்தது. சொல்லு முறையிலும், தொடர்பு படப்பேசும் தன்மை யிலும், வேண்டும் சொற்களைத் தெரிந்தெடுத்தாளு வதிலும், கேட்போர் மனத்தைப் பிணிக்கும் ஆற்றலிலும் அன்று அவன் ஒப்பற்றவனாக விளங்கினான். நீதி பதிகள் இருவரும் அவனை மிகவும் சிறப்பித்துக் கொண்டாடினார்கள். அவனுக்கே பரிசும் கிடைத்தது.

தாத்தாவுக்குப் பெருமை தாங்க முடியவில்லை. சுகுணாவின் முகம் மலர்ந்து விளங்கிற்று. மாமா மகிழ்ச்சி யுற்றார். கோபுவைக் கேலி செய்து கொண்டிருந்த

பலரும் அவனிடம் வந்து தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டனர்.

சுகுணாவைக் கோபுவுக்கு மணம் செய்வித்துவிட வேண்டும் என்று அவள் மாமாவுக்கு நிரம்ப ஆசை. தாத்தாவுக்கும் அதே ஆசைதான். கோபுவும் அவளிடம் காதல் கொண்டு விட்டான். அவளும் அக் காதலை உணர்ந்து மனம் மகிழ்ந்தாள்.

ஆனால் சுகுணாவின் வீட்டிற்குப் போகக்கூட கோபுவுக்கு நேரம் கிடையாது. பிரசங்க அழைப்புகள் வந்தவண்ணமாயிருந்தன. பிரசங்கத்தில் வல்லவன் என்று அவன் எங்கும் புகழ்பெற்று விட்டான். நகரில் மட்டுமல்ல; அயலூர்களுக்கும் சிற்சில வேளைகளில் போய் வருவதுண்டு. ஒரு சமயத்தில் ஒரு நாட்டுக் கோட்டைச் செட்டியார்ப் பிரபு இவனுடைய பிரசங்கத்தைக் கேட்க நேர்ந்தது. பிரசங்கம் முடிந்ததும் இவனை அழைத்துச் சென்று ஷோடசோபசாரம் செய்து அனுப்பினார். பின்னொருமுறை ஓர் ஊரில் இவனை ஊர்வலமாகக் கொண்டு சென்று சிறப்புச் செய்தார்கள். இப்படியே பல இடங்களிலும் இவன் பிரசங்கத்தைப் பெரிதும் புகழ்ந்து, பலபல மரியாதை செய்தார்கள். '**பிரசங்கமாரி**' என்று பட்டமும் பெற்றான்.

பரீட்சைக்கு ஒருமாதந்தான் இருந்தது. வெளியூருக்குப் போவதை நிறுத்திக் கோபு தனது பரீட்சைப் படிப்பில் முழுக்கவனத்தையும் செலுத்தி வந்தான். ஆனால் பேசுவதைமட்டும் அவனால் நிறுத்த முடியவில்லை. இதற்காகத் தினம் மாலையில் சுகுணாவின் வீட்டுக்கு வருவான். அங்கு அவளிடமாவது அவள் மாமாவிடமாவது பிரசங்கம் செய்யாமல் விடுவதில்லை. ஒரு நாள் அவள் மாமா வீட்டில் இல்லை. அவள்மட்டும் தனியாக அகப்பட்டுக் கொண்டாள். கோபு சிறிது நேரம் பல விஷயங்களைப் பேசிக் கொண்டிருந்தான். பின்பு திடீரென்று தன் காதலை வெளியிடத் தொடங்கினான். காதல்-பிரசங்கமொன்று அரைமணி நேரம் நடத்தினான். ஒரு கனவுலகத்தைச் சிருஷ்டித்து விட்டான். அவ்வுலகிலே

சுகுணவும் மகிழ்ச்சியோடு சஞ்சரிக்கத் தொடங்கினுள். முடிவில், அவள்க்வே அவன் பிரசங்கத்தை நிறுத்தி, "பரீட்சை முடிந்ததும் பிரசங்கத்தைத் தொடரலாம்" என்று கூறினுள். சிறிது நேரத்திற்கெல்லாம் அவள் மாமர் வந்து சேர்ந்தார். கோபுவும் விடை பெற்று அள வற்ற சந்தோஷத்தோடு வீடு திரும்பினன்.

பரீட்சை முடிந்தது. மிக்வும் திருப்தியாகவே விடை யெழுதியிருந்தான். சோதனை முறைப் பரீட்சைகளிலும் மிக்க திறமை காட்டினன். சுகுணவும் பரீட்சையில் திருப்தியாக்வே இருந்தாள். பின் காதல்-பிரசங்கம் தொடர்ந்தது. இருவருக்கும் மணமும் நிகழ்ந்தது.

ஜெனரல் ஆஸ்பத்திரியில் இருவரும் 'ஹவுஸ் ஸர் ஜன்'கள்ாக நியமனம் பெற்றுர்கள். ஆனல் கோபு வுக்குப் பிரசங்கம் செய்வதுதான் பெரிய வேலை. ஒரு நாள் ஒருநோயாளிக்கு மருந்து கொடுக்க வேண்டியதா யிருந்தது. அதற்கு மருந்துக்குறிப்பு எழுதும்போது, பேச்சு விஷயத்திலே க்வனம் போய்விட்ட படியால், நோயாளிக்கு ஆபத்து விளைவிக்கக் கூடிய மருந்தை எழுதி விட்டான். பக்கத்திலிருந்த சுகுண இதைப் பார்த்துவிட்டாள். உடனே அதைக் குறிப்பிட்டுக் காட்டி, வேறே எழுதும்படியாகச் செய்தாள். கோபுவின் ஓயாத பேச்சில் சிறிது சலிப்புக்கொண்டாள்.

பின் ஒருநாள் சில சிநேகிதர்களை விருந்துக்கு அழைத்திருந்தான். அன்று பிரசங்கத்திற்குச் சென்றவன் விருந்து விஷயத்தையே மறந்து விட்டான். சுகுணவே விருந்தினரை உபசரித்ததோடு தன் கணவ னுடைய மரியாதைக் குறைவுக்கு மன்னிப்புக்கேட்கும்படி நேர்ந்தது. மற்றொருநாள் வந்த விருந்தினர்கள் வாய் திறக்க முடியாதபடி முழுதும் தானேபேசி, வெறுப்புக் கிடமாக்கி விட்டான்.

பிரசங்கமேடைகளிலும் சலிப்பு ஏற்படத் தொடங் கிற்று. இவன் பேச எழுந்தவுடனே, வந்தவர்களும் ஒவ்வொருவராக நகரத் தொடங்கினர். பிற்பாடு சபை

களின் அழைப்புக் குறையத் தொடங்கிற்று. சபைகளின் காரியதரிசிகள் இவனைக் கண்டால், காணாதது போல் போகத் தொடங்கினர். சிலர் சாக்குப் போக்குச் சொல்லி, விரைவாகச் சென்று விடுவது வழக்கமாயிற்று. இவ்வளவெல்லாம் ஆனாலும், இவன் பேச்சிற்குக் குறைவேயில்லை. நோயாளிகள், தாத்தா, சுகுணா, அவள் மாமா இவர்கள் ஓடிவிட முடியாதல்லவா? பிரசங்கங்கள் தவறாமல் ஓயாமல் நடந்து கொண்டிருந்தன. இது சுகுணாவுக்கும் யமவேதனையாய் முடிந்தது. அவள் மாமாவுக்கு, பொறுக்கவே முடியவில்லை. ஒருநாள் சுகுணாவைப் பார்த்து, "நீ உன் அகமுடையானிடம் சொல்லக் கூடாதோ?" என்று கடிந்துகொண்டார். தாத்தா ஒருநாள் சுகுணாவிடத்தில், "இப்படி ஓயாமல் பேசிக்கொண்டிருக்கிறானே! பைத்தியம் என்று எல்லாரும் பட்டங்கட்டி விடுவார்களே! நீதான் கோபுவை வழிக்குக் கொண்டுவர வேண்டும்" என்றார். பாவம், சுகுணா என்ன செய்வாள்? திடீரென்று ஓர் யுக்தி தோன்றிற்று. மாலை வேளைகளில் டென்னிஸ் முதலிய விளையாட்டுக்களில் கோபு சேர்ந்தால் பிரசங்கங்கள் குறையலாம் என்று நினைத்தாள். அவ்வாறே தானும் அவனும் ஒரு 'கிளப்'பில் சேர்ந்து விளையாடி வந்தார்கள். முதல்நாள் பேச்சில்லாமல் இருந்தது. மறுநாள் டென்னிஸ் விளையாட்டைப் பற்றி ஒரு கட்டுப் புஸ்தகங்கள் கொண்டுவந்தான்; மாலைவரை வாசித்துக் கொண்டிருந்தான். கிளப்புக்கு அவனும் சுகுணாவும் போய்ச் சேர்ந்ததும், டென்னிஸ் பற்றிப் பிரசங்கம் தொடங்கிவிட்டான். தினமும் இப்படியாய் முடிந்தது. கிளப்புக்கு ஒழுங்காக வந்திருந்தவர்களெல்லாம் இப்போது வராமல் நின்றுவிட்டார்கள். கடைசியாய்க் கோபுவும் சுகுணாவுந்தான் மிகுந்தார்கள்.

சுகுணாவுக்கு இருந்த மனவருத்தம் சொல்லிமுடியாது. ஆனால் தன் காதலுக்குரிய கணவனிடத்தில் ஒன்றும் சொல்ல முடியவில்லை. ஒருநாள் மாலையில் இருவரும் டென்னிஸ் விளையாடிக்கொண்டிருந்தார்கள். நடுவே கட்டியிருந்த வலையை அடுத்து இருவரும் பந்தை

யடித்தனர். எப்படி நேர்ந்தது என்று தெரியவில்லை. சுகுணாவின் பந்தடி மட்டை கோபுவின் தலையில் பலமாகப் பட்டுவிட்டது. அவனும் எதிர்பாராதபடி சுருண்டு விழுந்துவிட்டான். சுகுணாவுக்குப் பெருந்திகில் பிடித்து விட்டது. அவனுக்குச் சுவாசம் இருப்பதாகத் தெரிய வில்லை. அவன் தலையை மடியில் எடுத்து வைத்துக் கொண்டு மௌனக்கண்ணீர் வடித்தாள். ஒருவாறு தைரியமுற்று, கிளப்புப் பையனைத் தண்ணீர் கொண்டு வரச் சொல்லி, அவன் முகத்தில் தெளித்தாள். அவனும் கண் திறந்து பார்த்து, மெள்ள எழுந்திருந் தான். பலமாக அடி விழுந்து விட்டதே என்று சுகுணாவுக்கு இப்போதுதான் வருத்தமுண்டாயிற்று. அவள் கண்ணிலிருந்து கண்ணீர் தாரை தாரையாய்ப் பொழிந்தது. கோபுவே அவளைத் தேற்றும்படியாய் முடிந்தது. அவனுக்கு எவ்வகையான நோவும் இல்லை என்று நிச்சயமானபிறகுதான், சுகுணா நிம்மதி யடைந்தாள், இருவரும் வீடுவந்து சேர்ந்தார்கள். வீட்டில் இன்றுதான் பிரசங்கம் இல்லாமலிருந்தது.

மறுநாள் காலையில் கோபு எழுந்திருந்தான். சுகுணா நன்றாக நித்திரை செய்வதைக் கண்டான். சற்று வெளியே சென்று உலவித் திரும்பினான். காப்பி தயாராயிருந்தது. தம்பதிகள் இருவரும் சாப்பிட்டுக்கொண்டே பேச லானார்கள்.

கோபு: நேற்றுவரை எனக்கு ஒரு பரபரப்பு எப்போதும் இருந்துவந்தது. அது இப்போது இல்லை. என் மனமும் அமைதி யடைந்திருக்கிறது. இது உன்னால் தான ஏற்பட்டது. உனக்கு நான் என்ன நன்றி சொல்லட்டும்?

சுகுணா: என்னை நானே மன்னிக்க முடியவில்லை. உங்க ளிடம் எப்படி மன்னிப்புக்கேட்பது என்று தயங்கிக் கொண்டிருக்கிறேன்.

கோபு: மன்னிப்பு எதற்கு? பேசாமடந்தையாயிருந்த என்னைப் பேசும்படி செய்தது என் சுகுணா. ஓயாப் பிரசங்கியாயிருந்து ஜனங்களைத் துன்புறுத்திக் கொண்டிருந்த எனக்கு நிதானமளித்தது என் சுகுணா. அடிக்கும் ஒரு கை; அணைக்கும் ஒரு கை. எவ்வளவு உண்மை!

ஓர் இரவு

சம்பளம் குறையக் குறைய வேலை அதிகமென்பது உலகப் பிரசித்தம். இது அநியாயமென்று யாராவது சொன்னால், 'அதிகச் சம்பளம் வாங்குகிறவர்கள் மூளையினால் வேலை செய்கிறார்கள்; குறைந்த சம்பளம் வாங்குகிறவர்கள் ஒன்று சரீரப்பிரயாசையால் மட்டும் உழைப்பவர்கள்; அல்லது குறிப்பிட்ட தினசரி ஒழுங்கு வேலையை மட்டும் செய்கிறவர்கள்' என்று பதில் சொல்லுவார்கள். குறைந்த சம்பளமும் கொடுத்து முட்டாள் பட்டமும் சுமத்துகிறார்கள். நான் வேலை பார்க்கும் கம்பெனியில் இப்படித்தான் நடக்கிறது. மற்ற இடங்களில் எப்படி என்று தெரிந்துகொள்ள எனக்கு நேரமில்லை.

இந்த யுத்த காலத்தில் வியாபாரமெல்லாம் மிகவும் மந்தம். என் கம்பெனியில் வேலை இல்லை. இருந்தாலும், எங்கள் மானேஜர் வீட்டுக்குப்போகும் வரையில் கம்பெனியில்தான் நாங்கள் இருக்கவேண்டியிருக்கும். அவரும் வேலைபார்த்துக் கொண்டிருந்தால் 'போக்கழிந்து போகிறது; இருந்து தொலைப்போம்' என்று காத்திருக்கலாம். அவருக்கு வேலையில்லை; அவருடைய சிநேகிதர் நாலைந்துபேர்கள் சாயங்காலம் கூடிவிடுவார்கள்; சளசளவென்று பேசிக்கொண்டேயிருப்பார்கள்; சிரிப்பும் குசுகுசுப்பும் வேடிக்கையும் ஆர்ப்பாட்டமும்தான். எங்களுக்கு யமவேதனை. என்னோடு வேலை பார்க்கும் குமாஸ்தாக்களெல்லாரும் வீட்டுக்குப்போகத் துடிதுடித்துக் கொண்டிருப்பார்கள். அவர்களுக்கெல்லாம் கலியாணமாயிருக்கிறது. எனக்குச் சீக்கிரம் போகவேண்டுமென்று எண்ணந்தான். என் தாயார் நான் திரும்பும் வரையில் உண்ணாமல் எனக்காகக் காத்துக்கொண்டிருப்பாள்.

எனது தகப்பனார் இளமைக் காலத்திலேயே சிவலோகப் பிராப்தியாய் விட்டார். என் அருமைத் தாய்

தான் என்படிப்பு விஷயத்தைக் கவனித்துக்கொண்டாள். நானும் தட்டுத் தடுமாறி பி. ஏ. பரீக்ஷையில் தேர்ந்து விட்டேன். இதில் என் தாயாருக்குப் பரமதிருப்தி. எனக்குக் கஷ்டகாலம் சமீபித்து விட்டதென்ற வருத்தந் தான். வேலைக்காக எங்கெல்லாமோ போய்த் திண்டாடி னேன். எப்படியும் பிழைக்கலாம் என்று சென்ன பட்டணத்திற்குத் தாயாருடன் வந்துசேர்ந்தேன். முதலில் அரசாங்க உத்தியோகத்திற்கென்று அலைந்தேன். பின்னால் அரசாங்கத்தைப்போல ஸ்திரமான ஆபீசுகளில் வேலைக்குத் திரிந்தேன். அதுவும் கிடைக்காததால் கம்பெனிகளில் வேலைக்கு முயற்சி செய்தேன். கடைசியாக ஒரு கம்பெனியில் 3 மாசம் சம்பளமில்லாமல் வாலண்டிய ராக ஒரு வேலை கிடைத்தது. என் பாக்கியம்தான்.

சம்பளம் வாங்குகிறவர்களைக் காட்டிலும் வாலண்டி யருக்குத்தான் அதிகவேலை. எல்லாருடைய வேலையையும் அவன்தான் பார்க்கவேண்டும். என் கையெழுத்து நன்றாயிருக்கவேண்டும் என்று கொஞ்சம் சிரமம் எடுத்துக் கொண்டேன். என் கூடவுள்ள குமாஸ்தாக்களெல்லாரும் நான் நன்றாய் எழுதுகிறேன் என்று புகழ்ந்து புகழ்ந்து என்னிடம் வேலை வாங்கத் தொடங்கிவிட்டார்கள். பொறுமைக்குப் பேர்போன மிருகங்கூட என்னிட மிருந்துதான் கற்றுக்கொள்ள வேண்டும். அத்தனை பொறுமையுடன் வேலைபார்த்தேன். இப்படிச் சதா வேலைபார்த்தால் உடம்பு கெட்டுப் போய்விடுமே என்று என் தாயார் அடிக்கடி கவலைப்பட்டாள். நான் அதைப் பொருட் படுத்துவதில்லை. வாலண்டியர் வேலையும் போய்விடப்படாதே.

இன்று எழுதியெழுதி என் கை சலித்துவிட்டது. மணியும் 7½ ஆகிவிட்டது. விளக்கு வெளிச்சம் வெளியே தெரியக் கூடாதென்று குறைந்த 'பவர்' உள்ள விளக்குத்தான் போட்டிருந்தது. மங்கின வெளிச்சத்தில் வேலை மிகுதியால் சோர்வடைந்து கொஞ்சம் கண் ணயர்ந்து விட்டேன்.

என் பக்கத்தில் அழுகைச்சத்தம் கேட்டதும் விழித்தேன். இரண்டு குமாஸ்தாக்கள் வீட்டுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார்கள். மற்றக் குமாஸ்தாக்களும் மானேஜரும் அவருடைய சகாக்களும் வெளியில் இறங்கியவுடன் போய்விட்டார்கள்.

எங்கள் முன்னாலே நின்று அழுதது ஒரு பெண். இரண்டு குமாஸ்தாக்களும் அவளைக் கேள்விக்குமேல் கேள்வியாகக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். இந்தப் பெண்ணும் அவள் சிநேகிதிகளும் கடற்கரையில் உலாவிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் புறப்பட்டுத் திரும்பும் சமயத்தில் அங்கே மூன்று காலாடிகள் அவர்களைத் தொடரத் தொடங்கினார்கள். இருட்டான ஒரு சந்தில் வந்தவுடன், ஒருவன் 'நில்லு!' என்று அதட்டிப் பக்கத்தில் வந்துவிட்டான். அந்தப் பெண்கள் மூலைக்கு மூலை ஓடத் தொடங்கினார்கள். இவள் ஓடியே வந்து திறந்திருந்த எங்கள் ஆபீஸில் புகுந்துவிட்டாள். இவளைத் துரத்திக்கொண்டு வந்தவன், இவள் ஆபீஸில் புகுவதைக் கண்டதும், எங்கேயோ மறைந்துவிட்டான். இவள் தகப்பனார் தாமோதர முதலியார்; வீடு ராயப்பேட்டையில். இந்த விவரத்தைக் கேட்டதும், அந்த இரண்டு வயசான குமாஸ்தாக்களும் என்ன செய்வதென்று ஆலோசிக்கத் தொடங்கினார்கள். முடிவில் என்னைப் பார்த்து "சோமு! உங்களவாள் போலத் தோற்றுகிறது. எங்களுக்கு ராயப்பேட்டைக்குப் போய் அப்புறம் எங்கள் வீட்டுக்குப் போவது கஷ்டம். நீ கூடப் போய் இந்தக் குழந்தையை அவர்கள் வீட்டில் விட்டுவிட்டு உன் வீட்டுக்குப் போய்விடலாம். உன் வீடு லக்ஷ்மீபுரத்தில் தானே?" என்றார்கள்.

இதுவரையில் சித்தப்பிரமை பிடித்தவன்போலிருந்த நான் இப்பொழுதுதான் விவரத்தைத் தெரிந்து நன்றாக விழித்துப் பார்த்தேன். இந்தப் பெண்ணின் கண்களில் தோன்றிய இரக்கம் என்னை உடனே ஒப்புக்கொள்ளும்படி செய்துவிட்டது. என் மனத்தில் அச்சத்

திற்குக் குறைவில்லை. இவளைத் துரத்திக்கொண்டுவந்த தடியர்கள் எங்கேயாவது ஒளித்துக் கொண்டிருந்து, போகும் வழியில் மடக்கிக்கொண்டால் என்ன செய்வது என்று நினைத்தேன். ஏ. ஆர். பி. சட்டத்தை நொந்துக் கொண்டேன். கையில் ஒரு சிறு தடியை எடுத்துக் கொண்டு புறப்பட்டேன். பெண் முன்னுக்கவும் நான் பின்னுக்கவும் நடக்கத் தொடங்கினோம். சிறிதுதூரம் சென்றவுடன் "நீங்கள் இருட்டும்வரையில் கடற்கரையில் இருந்திருக்கக்கூடாது. ஆபத்தல்லவா?" என்றேன். "வீட்டிலிருந்து வண்டி வரும்வரை காத்துக்கொண் டிருந்தோம்; என்ன காரணத்தாலோ இன்று வண்டி வந்து சேரவில்லை; என் சிநேகிதிகள் என்ன ஆனார் களோ? தெரியவில்லையே" என்றாள். கொஞ்ச நேரத்தில் டிராம்வண்டிப் பாதையில் வந்து சேர்ந்தோம். அங்கே இவள் சிநேகிதிகளைக் கண்டபின் இவள் முகத்தில் கலவரம் தீர்ந்தது. என்னைப் பார்த்து "நீங்கள் வேண்டு மென்றால் போகலாம், நான் இவர்களோடு வீடுபோய்ச் சேர்ந்து விடுவேன்" என்றாள். "நான் ராயப்பேட்டை வழியாகத்தான் போகவேண்டும். லக்ஷ்மிபுரத்தி லிருக்கிறேன். எனக்குச் சிரமமேயில்லை; வீட்டில் கொண்டுபோய்ச் சேர்க்காவிட்டால் எனக்கு நிம்மதி ஏற்படாது" என்றுசொல்லி விட்டேன்.

டிராம்வண்டி வந்து சேர்ந்தது. வண்டியில் எல் லோரும் ஏறினோம். இப்பொழுதுதான் இவளை நான் கூர்ந்து கவனிக்க நேர்ந்தது. இவள் முகச்சாயல் எனக்குப் பழக்கமுள்ளது போல் தோன்றியது. மற்றப் பெண்கள் இவளை அழைப்பதிலிருந்து இவள் பெயர் 'பங்கஜம்' என்று தெரிந்தேன். இவளை எங்கே பார்த் திருக்கிறோமென்று குமாஸ்தா வேலை பண்ணிக் குட்டிச் சுவராய்ப் போன என் மூளையைப் பருண்டிக் கொண் டிருந்தேன். பயனில்லை.

ராயப்பேட்டை வந்ததும் நாங்கள் எல்லாரும் கீழே இறங்கினோம். பங்கஜத்தை நான் பின்தொடர்ந்து

நடந்தேன். மற்றப் பெண்கள் பக்கத்திலிருந்த அவ ரவர்கள் வீட்டுக்குச் சென்றார்கள்.

ஒரு பெரிய பங்களா. ஏ. ஆர். பி. உத்தியோகஸ்தர் களையும் பொருட் படுத்தாமல் விளக்கு மதமதவென்று எரிந்து கொண்டிருந்தது. மிகுந்த கலவரத்துடன் ஒருவர் உலாவிக் கொண்டிருந்தார். தமது பக்கத்தில் நின்று கொண்டிருந்த ஓர் அம்மணியைப் பார்த்துக் கொஞ்சம் கோபக் குரலில், "வண்டியை நேரத்தோடே அனுப்பக் கூடாதா?" என்று கடிந்து கொண்டிருந் தார். அந்த வேளையில் நாங்கள் போய்ச் சேர்ந்தோம்.

வீட்டுக்குச் சென்றதும் பங்கஜம் ஓடி அங்கே நின்று கொண்டிருந்த அம்மணியைக் கட்டித் தழுவிக் கொண்டு அழத் தொடங்கி விட்டாள். ஒருவருக்கும் ஒன்றும் புரிய வில்லை. என்னை நோக்கியவுடன் நான் விவரங்களைச் சொல்லி முடித்தேன். மாடியிலிருந்து ஒருவன் ஓடிவந்து என்னைப் பார்த்ததும் சட்டென்று நின்று விட்டான். "நீ சோமு முதலிதானே? இங்கே எப்போது வந்தாய்? எங்கே இருக்கிறாய்? என்னவேலை பார்க்கிறாய்?" என்று விசாரித்தான். என்கூடத் திருச்சியில் வாசித்துக் கொண்டிருந்த அருணகிரியின் வீடென்று அப்போது தெரிந்து கொண்டேன். அவன் தகப்பனார்தான் அங்கே கடிந்து பேசிக் கொண்டிருந்த தாமோதர முதலியா ரென்று ஊகித்தேன்.

பங்கஜம் அப்போதுதான் என்னை நன்றாகப் பார்த் தாள். இவரில்லாமற் போனால் நான் என்ன ஆயிருப்பே னென்று சொல்லித் தன் தாயை உள்ளே அழைத்துச் சென்றாள். தாமோதர முதலியார் எனக்கு நன்றி சொல்லி உட்காரச் சொன்னார். அருணகிரி என் அருகில் வந்து உபசாரப் படுத்தினான். சாப்பிட்டு விட்டுப் போகலா மென்று வற்புறுத்தினான்; நான் இன்னொருநாள் சௌகரியமாக வருகிறேனென்று சொல்லிக் கொண்டு விடை பெற்றேன். அப்போது பங்கஜம் வெளியே வந்து "நீங்கள் எனக்குத் துணை வந்தது பெரிய உபகாரம்"

என்று சொன்னாள். அருணகிரி என் விலாசத்தைக் குறித்துக்கொண்டான்.

என் மனமானது தத்தளித்துக் கொண்டிருந்தது. வீடுவந்து சேர்ந்தேன். என் தாய் கவலையோடு காத்துக் கொண்டிருந்தாள். 'ஏன் இவ்வளவு நேரம்?' என்று கேட்க, நான் எல்லா விவரங்களையும் சொன்னேன். அவள் 'தாமோதர முதலியார்' என்ற பெயரைக் கேட்டதும் திடுக்கிட்டாள். "எத்தனை பேரோ? யார் கண்டார்கள்? எனக்குத் தெரிந்திருப்பதற்கு நியாய மில்லை" என்று முனங்கிக் கொண்டாள். நான் திரும்பத் திரும்பக் கேட்டதின் பேரில் தனக்குப் பந்துவான ஒரு தாமோதர முதலியார் உண்டென்றும் அவர் வெகு காலத்திற்கு முன்னே வடக்கே எங்கேயோ போய்விட்டா ரென்றும் சொன்னாள்.

நான் சாப்பிட்டுவிட்டுப் படுத்துக் கொண்டேன். ஆனால் உறக்கம் மட்டும் வரவில்லை. கம்பெனியில் பங்கஜம் அச்சத்துடன் நடு நடுங்கிக் கொண்டிருந்ததும், நான் துணை வரவேண்டுமென்று குறிப்பிட்ட பார்வையும் என் கண்முன்னே நின்று கொண்டிருந்தன. அருணகிரி என்னை இன்னாரென்று சொல்லியபோது அவள் என்னை உற்று நோக்கியது என் நெஞ்சைவிட்டு அகல வில்லை. எனக்கு நன்றி கூறியபோது தோன்றிய பாதி முகம் என் இதயத்தை ஊடுருவிச் சென்று அங்கே குடிபுகுந்து கொண்டது. வெகு நேரமாகப் புரண்டு கொண்டிருந்தேன். கடைசியில் லேசாக உறக்கம் வந்தது. பங்கஜமும் அவள் அண்ணா அருணகிரியும் என்னை வேடிக்கை பண்ணிக் கொண்டிருந்தார்கள் என்று கனவு கண்டேன். ஏன் விடிந்தது என்று வெறுத்துக் கொண்டேன். காலையில் அருணகிரி என்னை அழைத்துப்போக வந்து விட்டான்.

எனக்கு வாலண்டியர் உத்தியோகம் போய்விட்டது. ஆனால் என் கம்பனியை எப்பொழுதும் வாழ்த்திக் கொண்டிருக்கிறேன். கூட வாழ்த்துவதற்குப் பங்கஜ மும் என்னருகில் இருக்கிறாள்.

சந்திரா பழி வாங்கியது

['தக்காணத்துப் பண்டை நாட்கள்' என்று பொருள்படும் (*Old Deccan Days*) ஓர் ஆங்கில நூலிலுள்ள கதையைத் தழுவி இக்கதை எழுதப்பட்டது. ஆங்கில நூல் எம். பிரேரே (*M. Frere*) என்பவரால் 1868-ல் எழுதி வெளியிடப்பட்டது. இக்கதைக்கும் சிலப்பதிகாரக் கதைக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமை அறியத்தக்கன.]

முன்னொரு காலத்தில் தனவணிகன் ஒருவன் வசித்து வந்தான்; அவனுக்கு அழகும் அறிவும் படைத்த ஒரு மனைவியிருந்தாள், செல்வத்திற்குக் குறைவில்லை. ஆனால் அவர்களுக்குக் குழந்தையே பிறக்கவில்லை. ஒருநாள் அவள் அழுதுகொண்டே தன் கணவனிடம் சென்று, "குழந்தையில்லாமல் எனக்கு மிக்வும் வருத்தமாயிருக்கிறது. என்னைக் களிக்கச்செய்ய ஒரு குழந்தை மட்டுமிருந்தால், எவ்வளவு சந்தோஷமாக இருப்பேன்" என்று கூறினாள். "இதற்காக நீ வருத்தப்பட வேண்டும்; உனக்குக் குழந்தைகள் இல்லாவிட்டாலும், உனது சகோதரிக்கு எட்டு, ஒன்பது குழந்தைகள் இருக்கிறார்களே. அவளுடைய குழந்தைகளில் ஒன்றை ஏன் தத்தெடுத்துக் கொள்ளக்கூடாது?" என்று பதிலளித்தான். வணிகனுடைய மனைவியும் அதற்குச் சம்மதித்தாள்; தன் சகோதரியின் ஆண் குழந்தைகளில் ஆறுமாதக் குழந்தை யொன்றைக் கொணர்ந்து வளர்த்து வந்தாள்.

சில வருஷங்கள் சென்றபின் அந்தப் பையன் பள்ளிக்கூடத்திலிருந்து ஒருநாள் திரும்பும்பொழுது, தனது பள்ளித் தோழனுடன் சண்டை பிடித்துக்கொண்டான். முரடனான அத்தோழன் அவன் தலையில் நையப் புடைத்துக் காயப்படுத்தி விட்டான். அவன் அழுதுகொண்டே வீட்டுக்குப் போனான். வணிகனுடைய மனைவியும் அவன் தலையைக் கழுவிச் சுத்தம் செய்துவிட்டுக் காயத்தைத்

துணியால் கட்டினுள். "குழந்தைகளை வீட்டுக்குள் அடைத்துவைப்பது சாத்தியப்படாது. குழந்தைகள் ஒருவருக் கொருவர் அடித்துக்கொள்வதும், சண்டை போட்டுக்கொள்வதும் வழக்கம்தான்" என்று எண்ணி, தீங்கு விளைவித்த அந்தத் துஷ்டப் பையனைக் கூப்பிட்டு விசாரிக்காது இருந்துவிட்டாள். இதைக் கண்டு, "இவள் என்னை வளர்க்கும் தாய்தானே. அதனுல் தான் என்னைக் காயப்படுத்தியவனைத் தண்டிக்கவில்லை. எனது சொந்தத் தாயாகமட்டும் இருந்தால், அந்தத் துஷ்டனைக் கண்டித்திருப்பாள்" என்று பையன் முணு முணுத்துக் கொண்டிருந்தான். வணிகனுடைய மனைவி இதை ஒட்டுக் கேட்டுக்கொண்டிருந்தாள்; இவ்வார்த் தைகள் அவளுடைய மனத்தைப் புண்படுத்தின. "ஆஹா, நான் இந்தப் பையனைச் சிறு குழந்தை முதல் வளர்த்து வருகிறேன். இவன் தன் சொந்தத் தாயைப்போல என் னிடம் அன்பு கொள்ள வில்லை. என்ன பிரயோஜனம்? இவன் என்னை ஒருபோதும் லட்சியம் செய்ய மாட்டான்" என்று சங்கடப்பட்டாள். ஆக்வே அவள் அவனைச் சொந்தத் தாயிடம் அழைத்துச் சென்று, "அக்கா, நான் உன் குழந்தையை உன்னிடமே கொண்டுவந்து விட்டேன்" என்றுள். "ஏன் அப்படி? அவன் ஆயுள் காலம்வரை உன் புத்திரனுக ஸ்வீகரித்துக் கொண்டாயே; இப்பொழுது ஏன் திரும்ப அழைத்துக்கொண்டு வந்து விட்டாய்?" என்று அவளுடைய சகோதரி கேட்டாள். அவளுடைய புத்திரன் சொல்லிக் கொண்டிருந்ததைச் சகோதரியிடம் சொல்லவில்லை. ஆனுல், "ஒன்றுமில்லை, அவன் உன்னுடைய புத்திரனுகவும், என்னுடைய புத்திர னுகவும் இருக்கட்டும். சிறிது காலம் உன்னுடனும் பிறகு என்னுடனும் வசிக்கட்டும்; இருவரும் அவனைக் கவனித்துக் கொள்ளுவோம்," என்று சமாதானமாகப் பதிலளித்துவிட்டுச் சென்றுள்.

அவள் தன் கணவனிடம் சென்று பையனை அவன் தாயிடம் விட்டுவந்த சமாசாரத்தைச் சொன்னுள். "என் முயற்சி யெல்லாம் பிரயோஜனமில்லாமல் போய்

விட்டது; என் சகோதரியின் புத்திரனிடம் நான் எவ்வளவு அன்பாக இருந்தேனென்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். இருந்தாலும், நான் செய்ததற்குப் பதிலாக, ஏழு வருஷங்களாக—முகத்தை நன்றாகக்கூடப் பார்த்தறியாத தன்னுடைய தாயை நேசிப்பதைப்போல் அவன் என்னிடம் பிரியமாகவில்லை. ஆகையால் நான் மகாதேவரிடம் எனக்கு ஒரு குழந்தையைக் கொடுக்கும்படி வரம் பெறுகிற வரை எனக்கு மனச் சமாதானம் ஏற்படாது! மகாதேவரை நேரிற் கண்டு வரம் பெறப் போகிறேன்” என்று கூறினாள்.

“நீ ஒரு முட்டாள் பெண்ணாக இருக்கிறாயே! உனக்குக் கிடைத்ததை வைத்துத் திருப்தியாக இருக்கக்கூடாதா? அந்த மகாதேவரை எப்படிக் கண்டுபிடிக்கப் போகிறாய்? மேலுலகத்திற்குச் செல்லும் நெறி உனக்குத் தெரியுமா?’ என்று அவளுடைய கணவன் கேட்டான். “ஒருகாலும் முடியாது. நான் கண்டுபிடிக்கிறவரை எல்லா நெறியாலுஞ் சென்று தேடத்தான் போகிறேன். கண்டுபிடிக்காவிட்டால் என்னுடைய பிரார்த்தனை சித்தியாகிற வரையில் வீட்டிற்குத் திரும்பமாட்டேன்” என்று பதிலளித்தாள். அப்படியே வீட்டைவிட்டுச் சென்றாள். காட்டில் அலைந்து திரிந்தாள். அநேக நாட்களாகப் பிரயாணம் செய்து தன் நாட்டை விட்டு வெகு தூரத்திற்கப்பாலுள்ள மதுரை திருநெல்வேலிச் சீமையின் எல்லையை அடைந்தாள். அங்கே ஒரு பெரிய நதி ஓடிக்கொண்டிருந்தது. அதன் கரையில் இரண்டு ஸ்திரீகள் உட்கார்ந்திருந்தார்கள்.—ஒருத்தி கோவிலிங்கி என்ற ராணி, மற்றொருத்தி ஒரு நடன மாது.

இவர்கள் அதற்கு முன்னால் ஒருவரை யொருவர் சந்தித்தது கிடையாது. வணிகனுடைய மனைவி தண்ணீர் குடித்துவிட்டு இளைப்பாற உட்கார்ந்த பொழுது, ராணி அவளிடம் திரும்பி, “அம்மா, நீ யார்? எங்கே போகிறாய்?” என்று கேட்டாள். “நான் தூர தேசத்திலுள்ள ஒரு வணிகனின் மனைவி. எனக்குக் குழந்தைகள்

இல்லாதபடியால் வாழ்வில் மகிழ்ச்சியே யேற்படவில்லை. நான் மகாதேவரைக் கண்டு, எனக்கு ஒரு குழந்தையை அளிக்கும்படி கேட்கப் போகிறேன்" என்று பதிலளித்தாள்.

பிறகு அவள் ராணியைப் பார்த்து, "நீ யார்? எங்கே போகிறாய்?" என்று கேட்டாள். "நான் இந்த நாட்டிற் கெல்லாம் அரசியாகிய கோவிலிங்கி ராணி. பணத்தினால் எனக்குச் சந்தோஷமேற்படவில்லை. எனக்கும் குழந்தை இல்லை. நானும் மகாதேவரிடம் ஒரு குழந்தை வரம் கேட்கப் போகிறேன்" என்று கூறினாள். அதன் பிறகு ராணி நடன மாதைப் பார்த்து, "நீ யார்? எங்கே போகிறாய்?" என்று வினவினாள். அவளும், "நான் ஒரு நடன மாது. எனக்கும் குழந்தை யில்லை. ஆகையால் மகாதேவரிடம் குழந்தை வரம் கேட்கத்தான் போகிறேன்" என்று தெரிவித்தாள். இதையெல்லாம் கேட்டு வணிகனுடைய மனைவி, "நாம் எல்லோரும் ஒரே காரியத்தைக் குறித்துப் போகிறோம். யாவரும் ஒன்றாகச் சென்றால் என்ன?" என்று கேட்டாள். அதற்கு ராணியும் நடன மாதும் சம்மதிக்கவே, அம் மூவரும் காட்டின் வழியாகத் தங்கள் பிரயாணத்தைத் தொடங்கினார்கள்.

வரவர மனித சஞ்சாரமே இல்லாத காட்டின் வழியாக வெகுதூரம் போய்க்கொண்டே இருந்தார்கள்; இளைப்பாறக்கூடத் தங்கவில்லை. கால்களில் பொறுக்க முடியாத வலி ஏற்பட்டது. ஆடைகளெல்லாம் கந்தலாகி விட்டன. காட்டுச் செடிகளும், பழங்களும், கிழங்குகளும்தான் அவர்களுக்கு ஆகாரம். வெகுதூரம் பிரயாணம் செய்து வந்தபடியால் ஏற்பட்ட சோர்வினாலும் கந்தலாடைகளினாலும் மூன்று பிச்சைக்காரிகள் போன்று காணப்பட்டார்கள். இரவில் தூக்கம் கிடையாது; பகலில் இளைப்பாறுவதற்காகக் கூடத் தங்குவது கிடையாது. பல மாதங்கள், பல வருஷங்கள் அவர்கள் பிரயாணம் செய்தார்கள்.

கடைசியாக ஒருநாள் காட்டின் மத்தியில் அக்கினிச் சுவாலேயே பிரவாகமாக ஓடும் ஒரு பெரிய நதியை அடைந்தார்கள். கோவிலிங்கி ராணியும், நடன மாதும் இதைப் பார்த்துவிட்டு, "ஐயோ, நாம் இவ்வளவு கஷ்டப் பட்டும் இந்த இடத்திற்கா வந்து சேர்ந்தோம்? நம்பிக்கை யெல்லாம் பாழாய்ப் போய்விட்டது. இந்த நதியைக் கடந்து போகவே முடியாது" என்று மலேத்துப் போனார்கள். ஆனால் வணிகனுடைய மனேவியோ, "இவ்வளவு தூரம் வந்துவிட்டு இந்த அக்கினிக்காகவா பயப் படுவது? இதைக் கடந்து செல்ல ஒரு வழி கண்டுபிடிப் போம்" என்று சொல்லிக்கொண்டே ஊடே நடந்து சென்றாள். மற்ற இருவரும் பயந்து பின்தங்கி விட் டார்கள். வணிகனுடைய மனேவி நதியின் மத்தியில் சென்றதும், பின்னல் திரும்பித் திரும்பிக் கையால் அழைத்துக்கொண்டே, "வாருங்கள், வாருங்கள்; பயப் படாதீர்கள். இந்த அக்கினி என்னே எரிக்கவில்லேயே! நான் மகாதேவரைத் தேடப்போகிறேன். ஒருவேளே அவர் அக்கரையில் இருப்பார்!" என்று உரக்கக் கூவினாள். அவர்களிருவரும், "நாங்கள் வரமுடியாது. நீ திரும்பும் வரை நாங்கள் இங்கேயே காத்திருக்கிறோம். நீ மகா தேவரைப் பார்த்தால் எங்களுக்கும் குழந்தைகள் பிறக்க வரம் வேண்டிக்கொள்" என்று சொல்லிவிட்டார்கள்.

ஆகவே வணிகனுடைய மனேவி தனியாகத் தன் வழியே சென்றாள். அக்கினி-அலேகள் தண்ணீர்-அலேகள் போன்று அவளுடைய காலில் அடித்தன. அவளுக்கு ஒரு தீங்கும் விளேயவில்லே. நதியைக் கடந்ததும், ஒரு பெரிய காட்டை அவள் அடைந்தாள். அங்கே யானேகளும், காட்டெருமைகளும், சிங்கங்களும், புலிகளும், கரடிகளும் முழக்கம் செய்தன; உறுமின. அவைகளேக் கண்டும் அவள் பயப்படவில்லே. 'மகாதேவரைக் காணுது திரும்புவதைக் காட்டிலும் இந்தத் துஷ்ட மிருகங்களால் இறப்பது மேல்' என்று மனத்திற்குள் எண்ணிக் கொண்டாள். துஷ்ட மிருகங்களெல்லாம் அவளே இம்சிக்காது சும்மா விருந்தன.

இப்பொழுதுதான் மகாதேவர் மேலுலகத்திலிருந்து கவனித்தார். இந்த உலகத்தில் அவரைத் தேடிப் பன்னிரண்டு வருஷங்களாக அலைந்து திரிந்த அவளைப் பார்த்ததும், அவர் இரக்கப்பட்டார். பிறகு அந்த வனத்திடையே தங்கி இளைப்பாறுவதற்காகத் தெள்ளிய நீரையுடைய ஒரு கிணற்றையும், அழகான மாமரத்தையும் சிருஷ்டித்தார். அவர் ஒரு தேசாந்தரியான துறவி வேடம் பூண்டு மரத்தினடியில் தோன்றினார். வணிகனுடைய மனைவி நீரருந்தவோ, பழங்களைத் தின்னவோ தங்கிவிடாது, இவற்றையெல்லாம் கவனிக்காது மகாதேவரைத் தேடி மேலும் நடக்க ஆரம்பித்தாள். மகாதேவர், "அம்மா, அம்மா, நீ எங்கே போகிறாய்? இங்கே வா," என்று கூப்பிட்டார். அவரைத் திரும்பிக் கூடப் பார்க்காது, "சாமியாரே, நான் எங்கே போனால் உமக்கென்ன? நீர் உமது ஜெபத்தைக் கவனியும். என்னை விட்டுவிடும்," என்று பதிலளித்தாள். "இங்கே வா. இங்கே வா," என்று சத்தமிட்டார். அவளோ ஒன்றையும் பொருட்படுத்த வில்லை. ஆகவே மகாதேவர் துறவியின் வேஷத்தை நீக்கிவிட்டுத் தமது சுயரூபத்துடனும், தேஜஸுடனும், கைலாசபதியாக அவள் முன்னால் தோன்றியருளினார். இவ்வுருவத்தைக் கண்டு வணிகனுடைய மனைவி தரையில் விழுந்து அவரது பாதங்களை நமஸ்கரித்தாள். "அம்மா! நீ எங்கே போகிறாய்?" என்று கேட்டார். "ஐயா, நான் மகாதேவரைத் தேடி எனக்கு ஒரு குழந்தையைக் கொடுக்கும்படி வரம் வேண்டிக்கொள்ளப் போகிறேன். பன்னிரண்டு வருஷங்கள் தேடியும் பிரயோஜனமில்லை," என்று மறுமொழி கூறினாள். "நீ இனிமேல் தேடவேண்டிய அவசியமில்லை. நான்தான் அந்த மகாதேவன். இந்த மாங்கனியைச் சாப்பிடு; வீட்டை யடைந்ததும், ஒரு குழந்தையைப் பெறுவாய்" என்று கூறி, கிணற்றருகிலிருந்த மாமரத்தில் ஒரு கனியைப் பறித்துக் கொடுத்தார். அதற்கவள், "தேவரீரே, மூன்று பெண்கள் உம்மைத் தேடி வந்தோம். ஆனால் இருவர் அந்த நெருப்பாற்றைக் கடந்துவரப் பயந்து அங்கேயே தங்கி விட்டார்கள். அவர்

களுக்கும் குழந்தைகளைக் கொடுக்லாகாதா?" என்று வேண்டிக்கொண்டாள். "உனக்கு இஷ்டமானால், உனது மாங்கனியில் சிறிது பாகத்தை அவர்களுக்குக் கொடு. அப்பொழுது இருவருக்கும் குழந்தைகள் பிறக்கும்," என்று கூறி மறைந்துவிட்டார்.

வணிகனுடைய மனைவி அளவிலாத சந்தோஷமடைந்தவளாய், வனத்தையும் வனாந்தரத்தையும், நெருப்பாற்றையும் கடந்து ராணியும், நடனமாதும் தங்கியிருந்த இடத்தை அடைந்தாள். இவளைப் பார்த்ததும், "நல்லது; என்ன சமாசாரம்?" என்று கேட்டார்கள். "நான் மகாதேவரைக் கண்டு பிடித்து விட்டேன். அவர் எனக்கு இம் மாங்கனியைக் கொடுத்தார். நாம் இதைச் சாப்பிட்டால், ஒவ்வொருவருக்கும் ஒரு குழந்தை பிறக்கும்," என்று கூறினாள். மாங்கனியைப் பிழிந்து அதன் சாற்றை ராணிக்கும், தோல் பாகத்தை நடனமாதுக்கும், கொடுத்துவிட்டு மீதியான சதைப் பாகத்தையும் கொட்டையையும் தான் உண்டாள்.

அம் மூவரும் தங்கள் வீடு நோக்கித் திரும்பினர். கோவிலிங்கி ராணியும், நடனமாதும் மதுரை திருநெல்வேலிச் சீமைக்கும், வணிகனுடைய மனைவி வெகு தூரத்திலுள்ள தன் கணவன் வசித்து வந்த சேர்ந்த நாட்டிற்கும் போய்ச் சேர்ந்தார்கள். இவர்களுடைய சிநேகிதர்கள் எல்லாரும் இவர்களைப் பார்த்துச் சிரித்தார்கள். "நீ பன்னிரண்டு வருஷம் பயித்தியக்காரி மாதிரி அலைந்து திரிந்ததினால் என்ன லாபம்? ஒரு பிச்சைக்காரி மாதிரி திரும்பி யிருக்கிறாய்; உலகத்தார் உன்னைப் பார்த்துச் சிரிக்கிறார்கள்," என்று வணிகன் தன் மனைவியைப் பார்த்துக் கூறினான். "எனக்கு அதைப் பற்றிக் கவலையில்லை. நான் மகாதேவரைப் பார்த்துவிட்டேன். அவர் தந்த மாங்கனியையும் சாப்பிட்டேன். எனக்குக் குழந்தை பிறக்கும்," என்று கூறினாள்.

சிறிது காலம் சென்ற பின் வணிகனுக்கும் அவன் மனைவிக்கும் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அதே

தினத்தில் கோவிலிங்கி ராணிக்கும், நடன மாதுக்கும் தலைக்கொரு பெண் குழந்தை பிறந்தது. அவர்களுக்கு மிகுந்த சந்தோஷ மேற்பட்டது. தங்கள் சிநேகிதர்களுக்கெல்லாம் இந்த நல்ல செய்தியைச் சொல்லியனுப்பினார்கள். தங்கள் தங்கள் சக்திக்குத் தகுந்தபடி ஏழைகளுக்குச் சாப்பாடு போட்டார்கள்; தங்களிடம் இரக்கம் காட்டிய மகா தேவருக்கும் நைவேத்தியங்கள் படைத்தார்கள். வணிகனுடைய மனைவி தன் மகனுக்குக் *"கோவிலன்," என்றும், நடன மாது தன் குழந்தைக்கு, "மௌலி" என்றும் பெயரிட்டார்கள். பூர்ண சந்திரனைப் போன்று பிரகாசமும் அழகும் பொருந்தி விளங்கிய படியால் ராஜ குமாரிக்கு 'சந்திரா தேவி' என்று பெயர் இடப்பட்டது.

சந்திரா ராணி அந்தத் தேச முழுவதிலும் மிகுந்த அழகுடையவளாய் விளங்கினாள். அவளுடைய அழகையும், மெல்லிய சரீரத்தையும் கண்டு எல்லாரும் அவளிடம் பிரியமாக நடந்து கொண்டார்கள். அவள் பிறக்கும்பொழுதே இதுவரை ஒருவரும் பார்த்தறியாத மிகுந்த விலை மதிப்புப் பெற்ற இரண்டு சிலம்புகள் காலில் விளங்கின. அவை தங்கத்தினாலும் சூரியனைப் போன்று பிரகாசிக்கும் விலையுயர்ந்த கற்களாலும் செய்யப்பட்டிருந்தன. குழந்தை வளர வளர, காற் சிலம்புகளும் வளர்ந்து வந்தன. அவற்றைச் சுற்றிலும் காணப்பட்ட சதங்கை மணிகள் யாராவது சமீபத்தில் வந்தால் சப்திக்கும். சந்திராவின் பெற்றோர்களுக்கு இது பெருமையாகக் கூட இருந்தது. அவளுடைய அதிர்ஷ்டத்தைக் குறித்துத் தெரிந்து கொள்வதற்காகச் சோதிடர்களை வரவழைத்தார்கள். மிகவும் கற்றறிந்த பிராமணர் ஒருவர் அக்குழந்தையைப் பார்த்துவிட்டு, "இக் குழந்தையை நாட்டை விட்டே அனுப்பி விட

*இப்பெயர்கள் முறையே மாங் கொட்டையிலிருந்து பிறந்தவன் என்றும், மாந் தோட்டிலிருந்து தோன்றியவள் என்றும், சந்திரிகைப் பெண் என்றும் பொருள்படுமென்று ஆங்கில நூல் கூறுகிறது.

வேண்டும். அவள் இங்கே இருந்தால் இந்த நாடு முழுவதும் தீப் பற்றி எரிந்து அழிந்துபோகும்" என்று கூறினார்.

அரசன் இவ் வார்த்தைகளைக் கேட்டுக் கோப மடைந்தான். அப் பிராமணரைப் பார்த்து, "உமது தலையை வெட்டிவிடுவேன். நீர் சொல்வது பொய்" என்று கூறினான். "எனது தலையை வெட்டவேண்டு மென்றால் வெட்டிவிடுங்கள். நான் உண்மையைத்தான் சொல்லுகிறேன். நீங்கள் நம்பாவிட்டால் சிறிது கம்பளி நூலை எடுத்துக் குழந்தையின்மேல் வையுங்கள். அப் பொழுது நான் கூறுவதன் உண்மையை அறியலாம்," என்றார். அதன்படியே செய்தார்கள்; கம்பளி நூல் பற்றிக்கொண்டு எரிந்தது. வேலைக்காரியின் கையையும் சுட்டுவிட்டது.

"இப்பொழுது எரிந்ததுபோல், அவள் இங்கு இருந்தால் இப்பட்டணம் முழுவதும் தீப் பற்றியெரியும்" என்று அப் பிராமணர் கூறினார். எல்லாரும் பயந்து போனார்கள். அரசனும் ராணியைப் பார்த்து, "அப்படி யானால் நாமும் நமது குழந்தையை நாட்டை விட்டு அனுப்பிவிட வேண்டியதுதான்," என்றான். ராணி தனது குழந்தையைக் காப்பாற்றத் தன்னாலானமட்டும் முயன்றும் பிரயோஜனப்படவில்லை. குழந்தையை ஒரு பெரிய பெட்டியில் வைத்துத் தன் நாட்டை விட்டு வெகு தூரம் கடலை நோக்கிச் செல்லும் ஆற்றில் மிதந்து செல்ல விட்டு விடும்படி உத்தரவளித்தான்.

ராணியும் தங்கத்தினால் ஒரு பெட்டியைச் செய் வித்து—தன்னால் காப்பாற்ற முடியவில்லையே என்ற வருத்தத்தினால் கண்ணீர் வடித்துக் கொண்டு—குழந்தையை அப் பெட்டியில் வைத்து நதியில் விட்டு விட்டாள்.

அந்தப் பெட்டி விரைவாய் நீரின் மேல் மிதந்து போய்க் கொண்டிருந்தது. கடைசியாக வணிகன்

வசிக்கும் நகரை அடைந்தது. அந்த சமயத்தில் வணிகன் முகங் கழுவுவதற்காக ஆற்றங் கரைக்குச் சென்றான். அப்பொழுது அப் பெட்டியைப் பார்த்தான். பக்கத்திலிருந்த செம்படவனைக் கூப்பிட்டு, "செம்படவா, ஓடு. மீன் பிடிக்கத் தாமதிக்காதே. அதோ பிரகாசிக்கிற பெட்டியின்மேல் வலையை வீசி இங்கே இழுத்துக் கொண்டுவா" என்று கத்தினான். அந்தச் செம்படவன் "நீங்கள் அந்தப் பெட்டியை எனக்குத் தருவதா யிருந்தால், நான் போகிறேன்" என்று கூறினான். "மிக்வும் சரி. அந்தப் பெட்டி உனக்குத்தான். பெட்டிக்குள் என்ன இருந்தாலும் என்னுடையது," என்று வணிகன் கூறினான். அதன்படியே செம்படவன் வலையை வீசி, அப் பெட்டியைக் கரைக்கு இழுத்துக் கொண்டு வந்தான். அவர்களிருவரும் மிக்வும் திகைத்துப் போனார்கள்; அப் பெட்டி தங்கத்தினாலும், விலையுயர்ந்த கற்களாலும் செய்யப்பட்டிருந்தது. அதனுள் மிக்வும் அழகு வாய்ந்த ஒரு குழந்தை படுத்திருந்தது. அது ஓர் இளவரசி என்றே தோன்றிற்று. ஏனென்றால் அதன் மீது பொன்னால் இழைத்துச் செய்த ஆடை காணப்பட்டது. காலில் சூரியன் மாதிரி பிரகாசித்த இரண்டு சிலம்புகள் கிடந்தன. வணிகன் பெட்டியைத் திறந்ததும், அக்குழந்தை சிரித்துக் கொண்டே அவனை நோக்கிக் கைகளை நீட்டிற்று. அவன் மிக்வும் திருப்தி யடைந்து, "செம்படவா, பெட்டியை நீ எடுத்துக்கொள். குழந்தை எனக்கு இருக்கட்டும்," என்று கூறினான். செம்படவனும் திருப்தியடைந்தான்; அவனுக்கு அநேகங் குழந்தைகளிருந்தனர். தங்கத்தினால் செய்யப்பட்ட பெட்டி கிடைக்கவே அவனுக்குச் சந்தோஷம் உண்டா யிற்று. வணிகனுக்கு ஒரே பையன் மாத்திரம் இருந்தான்; செல்வமும் ஏராளமாயிருந்தது; குழந்தை யோடு வீடு திரும்பினான்.

வணிகன் தன் மனைவியைப் பார்த்து, "பார்த்தாயா, நமக்கு ஒரு சிறிய மருமகள் கிடைத்திருக்கிறாள். உன் னுடைய பையனுக்கு இவள்தான் மனைவி," என்று

சொன்னான். மிகவும் அழகுடனும், வசீகரமாகச் சிரிக்கும் முகத்தோடும் கூடிய குழந்தையைக் கண்டு அவள் பரவசமடைந்தாள். மிகவும் ஜாக்கிரதையாகத் தன் சொந்த மகள் போன்று கவனித்து வந்தாள். சந்திரா தேவிக்கு ஒரு வயதானதும் அவளைக் கோவிலனுக்கு மணம் செய்து வைத்தார்கள்.

வருஷங்கள் பல சென்றன. வணிகனும் அவன் மனைவியும் மிகவும் விருத்தாப்பிய தசை யடைந்து இறந்து விட்டார்கள். கோவிலனும் சந்திராவும் அந்த நாட்டிலேயே மிகவும் அழகான தம்பதிகளாய் விளங்கினார்கள். கோவிலன் நிமிர்ந்து உயரமாய், இளஞ் சிங்கம் போன்ற கம்பீரமான முகத்தை யுடையவனாய்த் தோன்றினான். சந்திரா பேரழகியாய் வெண்மையான நிலவொளி பொருந்திய முகத்தை யுடையவளாயும் தோன்றினாள்.

மௌலி மதுரை-திருநெல்வேலிச் சீமையில் மற்றெல்லாரையும் விட அழகுடன் விளங்கினாள். மேலும் மற்றெல்லா நடன மாதர்களையும்விட மிகவும் நேர்த்தியாகப் பாடவும், நடனமாடவும் கற்றுக் கொண்டாள். இவளுடைய குரல் குயிலின் குரலைப் போன்று இனிமையும் தெளிவும் பொருந்தி யிருந்தது; அக் குரல் பன்னிரண்டு நாள் பிரயாண தூரத்திற்கப்பால் கேட்கும். இவளைச் சார்ந்தவர்கள் இவளுடைய அபாரமான இசை வன்மையையும் நடன சாமர்த்தியத்தையும் நாடெங்கும் காட்டிப் புகழ்பெற வேண்டுமென்று விரும்பினர். இக் காரணத்தால் பல தேசங்களுக்கும் பிரயாணஞ் செய்யத் தொடங்கினர். இவர்கள் ஒவ்வொரு நாள் ஒவ்வோர் ஊரில் தங்கிப் பிரயாணம் செய்வது வழக்கம். இப்படிப் பிரயாணம் செய்துகொண்டே கோவிலனும் சந்திராவும் வசித்த நாட்டின் எல்லையை அடைந்தார்கள்.

ஒருநாள் கோவிலன் வெகு தூரத்திலிருந்து வந்த பாட்டின் நாதத்தைக் கேட்டான். அது அவனுக்கு இன்பத்தை யளித்தது. இவ்வளவு இனிமையான தொனி யாருடையது என்றறிய மிகவும் விரும்பினான்.

பன்னிரண்டு நாட்கள் நாட்டின் வழியாக நடந்து சென்றான். ஒவ்வொரு நாளும் அந்தக் கானம் தெளிவாகக் கேட்டது. கடைசியாகப் பன்னிரண்டாவது நாள் ஒரு நகரத்திற்குச் சமீபமாக நாட்டியக்காரர்—நடனமாதர்களும் அவர்கள் கூட்டத்தாரும்—தங்கியிருக்கும் இடத்தை யடைந்தான். அங்கே தன்னைக் கவர்ந்திழுத்த இன்னிசையைப் பாடும் மாதைக் கண்டான். அவள் தான் மௌலி. பெரியகூட்டத்திற்கு நடுவில் மௌலி பாடிக்கொண்டும் நாட்டியம் ஆடிக்கொண்டு மிருந்தாள். அவள் நடனம் புரியும்பொழுது கையிலிருந்த பூமாலையை அசைத்துக்கொண்டே ஆடினாள்.

மிகவும் சமீபத்தில் வாராது வெகு தூரத்திலேயே, தான் கடந்துவந்த காட்டின் ஓரமாகக் கோவிலன் நின்று கொண்டிருந்தான். அவளது இனிமையான கானத்தைக் கேட்டு லயித்துப் போனான்.

நடனம் முடிந்ததும், ஜனங்கள் அவளைச் சூழ்ந்து கொண்டார்கள். சிலர் அவளைப் பார்த்து, "இவ்வளவு இனிமையான குரலையுடையவள் எங்கள் மத்தியிலேயே வசிக்கலாகாதா? எங்கள் ஊரை விட்டுப் போக வேண்டாம். இந்நகரத்திலுள்ளவர்களில் உனக்கு இஷ்டமான ஒருவனை மணந்துகொண்டு இங்கே தங்கலாகாதா?" என்று கேட்டுக்கொண்டார்கள். அவளை மணந்துகொள்ள அநேகர் முன் வந்தார்கள். மௌலி அவர்களைப் பார்த்து, "நான் என் கையிலுள்ள மாலையை எறிவேன். யார் கழுத்தில் விழுகிறதோ அவரையே என் கணவராக வரிப்பேன்," என்று கூறினாள். மாலையை வேகமாகச் சுழற்றி வீசி எறிந்தாள்.

எறிந்த வேகத்தில் ஆகாயத்தில் கிளம்பிக் கூட்டத்தையும் தாண்டி வெகு தூரத்தில் நின்றுகொண்டிருந்த கோவிலன் கழுத்தில் மாலை விழுந்தது. அப்போப்பட்ட அதிர்ஷ்டசாலி யாரென்பதை யறிய ஜனங்கள் ஓடி வந்தார்கள். அவர்கள் கோவிலனைப் பார்த்துப் பிரமித்துப் போனார்கள். அவன் தெய்வ லோகத்தைச் சேர்ந்தவனோ

என்று சொல்லும்படி அழகுடையவனாய் விளங்கினான். நாட்டியக்காரர் ஆரவாரித்துக்கொண்டு, "உனது கழுத்தில் மாலை விழுந்துவிட்டது; நீதான் மௌலிக்குத் தகுந்த கணவன்" என்று கொண்டாடினார்கள். "நான் இங்கு வேடிக்கை பார்க்க வந்தவர்களுள் ஒருவன். இது எனக்குச் சேர்ந்த நாடுமல்ல. எனக்குக் கலியாணமான மனைவி யொருத்தி வீட்டிலிருக்கிறாள்" என்று கோவிலன் கூறினான். "அதைப்பற்றி எங்களுக்கு அக்கரை யில்லை; மௌலியை மணக்க வேண்டுமென்பது உனக்கு ஏற்பட்ட விதி; மிகவும் இனிமையாகப் பாடும் சக்தி வாய்ந்தவள். சௌந்தர்யமுடையவள். நாட்டியத்திலும் திறமை யுடையவள். உன் கழுத்தில் மாலை விழுந்தபடியால் நீ அவளை மணந்துகொள்ளத்தான் வேண்டும்" என்று வற்புறுத்தினார்கள்.

கோவிலன் தன் மனைவியிடம் மிகவும் அன்பாக நடந்துகொண்ட போதிலும், ஆரம்பத்தில் நேசித்தது போல் அவளை நேசிக்கவில்லை. குழந்தைப் பருவத்தி லிருந்து ஒன்றாகவே வளர்ந்தவள்தானே; இவளுடைய நற்குணமும், அழகும் மற்றவர்களுக்குத் தோன்றியது போல் அவனுக்குப் புலப்படவில்லை போலும்! தான் வீட்டுக்குத் திரும்பாவிட்டால் சந்திரா மிகவும் வருத்தப் படுவாள் என்பதை மறந்தவனாய், அக் கூட்டத்தார் மத்தியில் நின்று தயங்க ஆரம்பித்தான். அச்சமயம் அவர்கள் அவனுக்கு மயக்கத்தைத் தரும் பானத்தைக் கொடுத்தார்கள். அதைக் குடித்துவிட்டுத் தன் வீட்டையே மறந்து விட்டான். நடன மாதாகிய மௌலியைக் கலியாணம் செய்துகொண்டு அவர்கள் மத்தியில் பல மாதங்கள் தங்கி, முடிவில் அவர்கள் ஊருக்கே சென்று விட்டான். ஒருநாள் மௌலியின் தாய் கோவிலனைப் பார்த்து, "இவ்வளவு நாள் உமக்கு ஆகாரம் எல்லாம் கொடுத்துக் கொண்டிருந்தோம். உமக்குச் சோம்பல் அதிகமாகிவிட்டது. எங்களைக் காப்பாற்ற முயற்சி ஒன்றும் செய்வதாகத் தெரிய வில்லையே. உடுப்பதற்கு உடைகூட நாங்கள் கொடுக்க

வேண்டியிருக்கிறதே. இப்பொழுது சென்று பணம் கொண்டு வராவிட்டால், இந்த வீட்டை விட்டுப் போய் விட வேண்டியதுதான். மௌலியைப் பிரிப்பதற்குக் கூட முடியாது" என்று கூறிவிட்டாள்.

தனது மாமியாரிடம் கொடுப்பதற்குக் கோவிலனிடம் பணமில்லை. அப்பொழுதுதான் முதல் தட்வையாகத் தன் நாட்டைப் பற்றியும், சந்திராவைப் பற்றியும், நினைத்தான். "ஊரில் வசிக்கிற முதல் மனைவியின் காலில் மிகவும் விலை மதிப்புப்பெற்ற இரண்டு சிலம்புகளிருக்கின்றன. வீட்டிற்குச் சென்று அவைகளிலொன்றைக் கொண்டு வருகிறேன். அதைக்கொண்டு உங்களுக்குப் பணத்தைக் கொடுத்துக் கடனைத் தீர்த்து விடுகிறேன்" என்று கூறினான். நாட்டியக்காரர்களும் சம்மதித்தார்கள். ஆகவே, கோவிலன் தன் வீட்டிற்குத் திரும்பினான். சந்திராவிடம் தனக்குப் பணம் வேண்டியிருப்பதாகவும் அவளுடைய காற்சிலம்புகளில் ஒன்றைக் கொடுக்கும்படியாகவும் கேட்டான். அதற்கு மறுத்து, "நீங்கள் என்னைத் தனிமையாக விட்டுவிட்டுப் போய் வெகுகாலமாகிறது. இரண்டாவது மனைவியாக ஒரு நடன மாதையும் கலியாணம் செய்துகொண்டு அவர்கள் கூட்டத்தில் சேர்ந்து விட்டீர்கள். என்னுடைய குழந்தைப் பிராய முதல் வளர்ந்து வரும் சிலம்பொன்றையும் அந்த மனைவிக்குக் கேட்கிறீர்கள். ஒருகாலும் முடியாது. திரும்பிவிடுங்கள். என்னால் கொடுக்கமுடியாது" என்று மறுத்தாள்.

"அவர்கள் எனக்கு மயக்கத்தைத் தரும் பானத்தைக் கொடுத்து விட்டபடியால், நான் உன்னை மறந்து விட்டேன். அவர்களை எனக்குப் பிடிக்கவில்லை. நான் சென்று எனது ஆடைக்கும், உணவுக்கும் செலவழித்த பணத்தை எனது மாமியாரிடம் கொடுத்துவிட்டுத் திரும்பிவிடுகிறேன். இங்கேயே வந்து உன்னுடன் வசிக்கிறேன்" என்று நயமாகக் கூறினான்.

"அப்படியானால் நல்லது. எனது காற்சிலம்பை விற்று அவர்களுக்குச் சேரவேண்டிய பணத்தைக்

கொடுத்துவிடுங்கள். என்னைத் தனியே விட்டுப் போகக் கூடாது; என்னையும் அழைத்துக்கொண்டு போங்கள்" என்றாள். கோவிலனும் சம்மதிக்கவே, இருவரும் மதுரை-திருநெல்வேலிச் சீமைக்குப் புறப்பட்டார்கள்.

அவர்கள் பிரயாணம் செய்தபொழுது தேவ லோகத்தில் கிருஷ்ணபகவான் தமது மூன்று மனைவிகளுடனும் சொக்கட்டான் ஆடிக் கொண்டிருந்தார். பிரயாணம் செய்யும் இருவரையும் பார்த்துக் கிருஷ்ணன் சிரித்தார். அவருடைய மனைவியர், "ஏன் சிரிக்கிறீர்கள்? இத்தனை நேரமாகச் சிரிக்கவில்லையே. இப்போது சிரிப்பதற்குக் காரணம் யாது?" என்று வினவினார்கள். "கோவிலனும் அவன் மனைவி சந்திராவும் மதுரைக்குப் போவதைப் பார்த்து நான் சிரிக்கிறேன். தனது மனைவியின் சிலம்பை விற்கப் போகிறான். அப்பொழுது கொல்லப்படுவான். அவள் கோபத்தில் நாட்டை முழுவதும் எரித்துவிடுவாள். என்ன மதியற்ற ஜனங்கள்!" என்று கூறினார். தேவியர் மூவரும், "என்ன பயங்கரமான சமாச்சாரம்! நாங்கள் மாறு வேடத்தில் சென்று அவர்களை எச்சரிக்கிறோம்" என்று கூறினார்கள். "அது பிரயோஜனப்படாத காரியம். நீங்கள் சென்றால், அவன் உங்களைப் பார்த்து நகைப்பான்; உங்களிடம் கோபப் படுவான்" என்று கிருஷ்ணன் எடுத்துரைத்தார். ஆனால் தேவியர் மூவரும், நேரிடப் போகிற பெரிய ஆபத்தைத் தடுப்பதற்கு உறுதி கொண்டார்கள். குறி சொல்லுபவர் போன்று வேஷம் போட்டுக்கொண்டு, கோவிலனும் சந்திராவும் வரும் வழியில் தோன்றினார்கள். கோவிலனைப் பார்த்து, "மதுரைக்குப் போகவேண்டாம். போனால் நீ கொல்லப் படுவாய். உனது மனைவியும் கோபத்தில் நாட்டை எரித்துவிடுவாள்" என்று எச்சரித்தார்கள். கோவிலன் முதலில் நம்பவே இல்லை. அவர்கள் திரும்பத் திரும்பச் சொல்லவே கோபங்கொண்டு அவர்களைத் துரத்தி விட்டான். "உங்களைப்போன்ற கிழடுகளுக்கு நானா பயப்படுகிறவன்?" என்று கூறி வழிநடந்தான்.

தேவியர் மூவரும் கிருஷ்ணனிடம் சென்று தங்களுக்கு நேர்ந்ததைச் சொன்னார்கள். "பிரயோஜனமில்லை; நீங்கள் போக வேண்டாமென்று நான் தடுக்கவில்லையா?" என்று அவர் கூறிவிட்டார்.

மதுரைத் தலைநகருக்குப் பக்கத்திலுள்ள வயது சென்ற ஒரு பால்காரி வீட்டில் கோவிலனும் சந்திராவும் தங்கினார்கள். அவர்களுக்கு உணவும் தங்க இடமும் அவள் கொடுத்தாள். மறுநாட் காலையில் கோவிலன் தன் மனைவியைப் பார்த்து, "நீ இங்கேயே தங்கி யிரு; இவள் உன்னைப் பாதுகாப்பாள். நான் நகரத்திற்குச் சென்று சிலம்பை விற்றுவிட்டு வருகிறேன்" என்று தெரிவித்தான். சந்திராவும் சம்மதித்தாள். அவனும் சிலம்பை விற்பதற்காகச் சென்றான். அந்த ஊர் அரசனும் அரசியும், தனது மனைவியின் பெற்றோராகிய அரசனும் கோவிலிங்கி ராணியும் என்ற விஷயமாவது, மகாதேவரிடம் வரம் பெற்றுப் பிறந்த மாம்பழக் குழந்தைகளைப் பற்றியாவது கோவிலனுக்கு ஒன்றுந் தெரியாது.

கோவிலனும், சந்திராவும் மதுரைக்கு வருவதற்குக் கொஞ்ச நாட்களுக்கு முன்பாக, கோவிலிங்கி ராணி அந்த ஊர்த் தட்டானிடம் பழுது பார்ப்பதற்காகத் தன் சிலம்புக ளிரண்டையும் அனுப்பி யிருந்தாள். தட்டானுடைய வீட்டிற்குப் பக்கத்திலிருந்த ஒரு பெரிய மரத்தில் இரண்டு கழுகுகள் கூடு கட்டி வசித்துவந்தன. அவை சப்தமிட்டுத் தட்டானுக்கு உபத்திரவம் உண்டு பண்ணின. ஒருநாள் பெரிய கழுகுகள் இல்லாத சமயம் பார்த்து, தட்டானுடைய மகன் மரத்திலேறி, கூட்டைப் பிரித்துச் சிறு கழுகுகளைக் கொன்றுவிட்டான். பெரிய கழுகுகள் வந்து பார்த்து வருந்திக் கதறின. பழிக்குப் பழி வாங்க உறுதி பூண்டு தட்டானைத் தண்டிக்க அவை எண்ணின. தட்டான் பழுது பார்த்துக் கொண்டிருந்த சமயம், மாடத்திலிருந்த சிலம்புகளி லொன்றைக் கீழே பாய்ந்து கௌவிக்கொண்டு அக்கழுகுகள் பறந்து போய்விட்டன.

தட்டானுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை; அவன் தன் மனைவியிடம், "இப்பேர்ப்பட்ட காற் சிலம்பை வாங்குவதற்கு நமது சொத்தை யெல்லாம் கொடுத்தாலும் போதாது. இதைச் செய்துவிடலா மென்றாலோ பல வருஷங்கள் பிடிக்கும். தொலைந்துவிட்ட தென்று நான் துணிந்து சொல்லவும் முடியாது. நான் களவாடி விட்டதாக நினைத்துக் கொண்டு என்னைக் கொன்று விடுவார்கள். மற்றொரு சிலம்பையும் விரைவில் திரும்பக் கொடுத்துவிடாது காலங் கடத்தவேண்டும். அதற்குள் அதைப் போன்ற சிலம்பொன்றைப் பெற முயற்சிக்க வேண்டும்" என்று கூறினான். மறுநாள் ராணி ஆள் அனுப்பியதற்கு, "இன்னும் தயாராகவில்லை. நாளைக்குள் முடிந்துவிடும்" என்று பதில் சொல்லி யனுப்பினான். இப்படியாக நாள் கடத்திவந்தான். ராணியின் ஏவலாளர் அதிகமாக நெருக்கவே ஒரு சிலம்பைப் பழுது பார்த்தனுப்பிவிட்டு மற்றொன்றை விரைவில் அனுப்பி வைப்பதாகச் சொன்னான். மற்றொரு சிலம்பைப் பெறுவதற்காக மிக்வும் முயற்சி செய்து கொண்டிருந்தான். அதற்கு ஈடான சிலம்பு அகப்பட வில்லை.

கோவிலன் நகரத்தை யடைந்ததும் கடைத்தெருவில் துணியைப் பரப்பி அமர்ந்து விலைக்கு வாங்க வருவோரை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். அவன் மிகவும் அழகுடையவனாய் விளங்கினான். சர்வ சாதாரணமான உடை உடுத்திருந்தாலும், ஓர் இளவரசன் போலத் தோன்றினான். அவன் விற்பதற்காக வைத்திருந்த காற் சிலம்போ சூரியனைப் போன்று பிரகாசித்துக்கொண்டிருந்தது. அப்பேர்ப்பட்ட அழகுள்ளவனையாவது, சிலம்பையாவது ஒருவரும் இதுவரை பார்த்ததில்லை. தலையில் சுமைகளைத் தூக்கிக்கொண்டு போனவர்களில் சிலர் அவனைப் பார்த்து ஆச்சரியப்பட்டுச் சுமைகளைக் கீழே நழுவவிட்டு நின்றுகொண்டிருந்தார்கள். பக்கத்திலுள்ள வீடுகளின் ஜன்னல் வழியாக ஆடவரும் பெண்டிரும் அவனையே உற்றுப்பார்த்து ஆச்சரியப்பட்டார்கள்.

ஒருவரும் காற் சிலம்பை வாங்க முன் வரவில்லை. "நம்மால் இவ்வளவு விலையுயர்ந்த ஆபரணத்தை வாங்க முடியாது. இதை அணிவதற்கு ஒரு அரசிதான் தகுதியுள்ளவள்" என்று கூறிக்கொண்டு பலரும் சென்றார்கள். கடைசியாகப் பொழுதெல்லாம் போன பிற்பாடு, ராணியின் சிலம்பொன்றைப் பறி கொடுத்த அரண்மனைத் தட்டானே அவ்வழியாக வந்தான். கோவிலன் வைத்துக் கொண்டிருந்த சிலம்பைப் பார்க்கவே, "நான் வேண்டுவது இதைப் போன்ற சிலம்பொன்றுதான். இதை எப்படிப் பெறுவது?" என்று ஆலோசித்தான். தட்டான் தன் மனைவியைப் பார்த்து, "கடைத்தெருவில் சிலம்பு விற்பவனிடம் சென்று அன்பாகப் பேசி, பொழுது ஆகிவிட்டபடியால் நம் வீட்டிலேயே இரவில் தங்கிப் போகும்படி அழைத்து வா. நண்பர்கள்போல் நடித்து நம்மை நம்பும்படி செய்துவிட்டால், நான் இந்தச் சிலம்பை எடுத்துக்கொண்டு, அவனே களவாடி விட்டதாகச் சொல்லிவிடலாம். அவன் அன்னியனானபடியால், என் வார்த்தையை எல்லோரும் நம்புவார்கள். இந்தச் சிலம்பு ஒன்றுதான் ராணியின் சிலம்பைப் போலவே இருக்கிறது" என்று கூறினான்.

தட்டானுடைய மனைவியும் அவ்வாறே நடந்து கொண்டாள். தட்டான் கோவிலனை நெருங்கி, "நீயும் சிலம்பு விற்பவன்; நானும் சிலம்பு விற்பவன்தான். நான் உன்னை எனது சொந்தச் சகோதரனாகப் பாவிக்கிறேன். நீ இவ்வூருக்குப் புதிதாகையால் எங்கள் வீட்டில் வந்து இரவில் தங்கிப் போகலாம்" என்று நயமாகக் கூறினான். அவர்கள் தந்திரமாகக் கோவிலனைத் தங்கள் வீட்டிற்கு அழைத்துச் சென்று, பரிவுடன் பேசி, ஆகாரமும் இரவில் படுக்கச் சௌகரியமும் செய்து கொடுத்தார்கள்.

மறுநாள் அதிகாலையில், தட்டான் கூக்குரலிட்டுக் காவலாளர்களுக்கு ஆளனுப்பினான். கோவிலனை ராணியின் சிலம்பைக் களவாடியதாகக் குற்றஞ்சாட்டி அரசனிடம் அழைத்துக்கொண்டு போகச் சொன்னான். தான் நிரபராதி யென்று கோவிலன் வாதித்தான். தன்

னுடைய மனைவியின் சிலம்பென்றும், அன்னியனுனபடி யால் ஒருவரும் சாட்சியாகவில்லை யென்றும் கூறினன். யாதொரு பிரயோஜனமுமில்லை. காவலாளர்கள் அவனை அரண்மனைக்கு இழுத்துச் சென்றார்கள். தட்டான் அரச னிடம், "என்னிடம் பழுது பார்ப்பதற்காக அனுப்பிய ராணியின் சிலம்பைத் திருட இவன் எத்தனித்தான். இவன் தப்பி யிருந்தால் நான் களவாடி விட்டதாக நினைத்து என்னைக் கொன்றிருப்பீர்கள். ஆகையால் இவனைக் கொன்று விடுவதுதான் தகுந்த தண்டனை யாகும்" என்று குற்றஞ் சாட்டினன்.

பிற்பாடு அந்தச் சிலம்பை ராணியினிடம் காண் பித்தார்கள். சந்திராவின் சிலம்பென்பதை அடையாளம் கண்டுகொண்டு மிகவும் பிரலாபித்து வருந்தினள். "என் னுடைய சிலம்பு இதுவல்ல. ஆஹா! அரசே, உலகிலுள்ள ஒருவராலும் இதுபோன்ற சிலம்பை இயற்ற முடியாது. என் சிலம்பிற்கும், இந்தச் சிலம்பிற்கும் வித்தியாச மிருக்கிறது. கவனித்துப் பாருங்கள். யாராவது பக் கத்தில் வந்தால் இதில் கட்டிய சதங்கை மணிகள் சப்திக்கின்றன. மறந்துவிட்டீரா? என்னுடைய கண் மணியின் சிலம்பல்லவா? என்னை விட்டுப் பிரிந்த சந்திராவின் சிலம்பே! இது எப்படி இங்கு வந்தது? இந்தத் தட்டானே என் சிலம்பை வைத்துக்கொண்டு இதைக் கொண்டுவந்திருக்கிறான். இது சந்திராவின் சிலம்புதான்" என்று கூறி விசாரித்தறிய அரசனை வேண்டிக் கொண்டாள்.

அவளுக்குப் பயித்தியம் பிடித்துவிட்டதென்று நினைத்தார்கள். "நமது அரசிக்குச் சித்தப் பிரமை ஏற் பட்டிருக்கிறது. என்னிடம் பழுது பார்க்கக் கொடுத்த சிலம்பு இதுதான்" என்று தட்டான் சாதித்தான். மற்றவர்களும் இரண்டிற்கும் நெருங்கிய ஒற்றுமை யிருப்ப தாகவும் ஒரே ஜதை யென்றும் அபிப்பிராயப் பட் டார்கள். கோவிலனைக் கள்வனென்று எண்ணி அவனைச் சிரச்சேதம் செய்யும்படி அரசன் உத்தரவிட்டான். ராணியோ அந்தச் சிலம்பைத் தனிமையாக ஓர் நகைப்

பெட்டியில் பத்திரமாகப் பூட்டி வைத்தாள். கோவிலனைக் காட்டிற்கு அழைத்துச் சென்றார்கள். கொலையாளிகள் தன்னைக் கொல்வது நிச்சயமென்று உணர்ந்த அவன் தன் கைகளாலேயே இறப்பது மேல் என்று எண்ணியவனாய், தன் வாள்மேல் பாய்ந்துவிட்டான். அவன் உடல் இரு துண்டுகளாக வாளின் இரு பக்கங்களிலும் விழுந்தன. அத்துண்டங்களை அந்த இடத்திலேயே போட்டு விட்டுக் காவலாளர்கள் சென்றார்கள். இந்தச் சமாசாரம் நகரத்திற்கு எட்டிற்று. அங்கே கோவிலன் முந்தின நாள் நகை விற்பதைப் பார்த்திருந்த அநேகர் இதை நம்பவே இல்லை. "இது அநியாயமா யிருக்கிறது. ஐயோ பாவம்! இவனா நகையைத் திருடி இருப்பான்! இந்த நகரிலே அதை விற்கவும் முயற்சி செய்திருப்பானா? அரசன் ஆத்திரப்பட்டு, சாந்தமும், பெருந்தன்மையும், அழகும் உடைய இவ்வாலிபனைக் கொல்லத் தீர்மானித்தான். மேலும் இவனோ அன்னியன். என்ன கொடுமை இது?" என்று பேசிக் கொண்டார்கள். பலர் அவன் மரணத்துக்காக மனம் வெதும்பினார்கள்.

குடிஜனங்கள் இவ்வாறு பேசுகிறார்கள் என்பதைக் கேள்விப்பட்டதும் அரசனுக்கு மிகுந்த கோபம் வந்து விட்டது. அவன் உடனே தன் ஆட்களை அனுப்பி "நடந்த சமாசாரத்தைப் பற்றி யாரேனும் பேசினாலும் கொலையுண்டு இறந்தவனுக்காகக் கண்ணீர் சிந்தினாலும், துக்கப்பட்டாலும், அவர்களைத் தூக்கிலிடுவது நிச்சயம்" என்று உத்தரவு பிறப்பித்தான். குடி மக்கள் மிகவும் பயந்தார்கள். கோவிலனது விதியைப்பற்றி நொந்து கொண்ட போதிலும், ஒருவராவது அவனைப்பற்றிப் பேசத் துணியவில்லை.

கோவிலன் கொலையுண்டு இறந்த நாளன்று காலையில், பால்காரக் கிழவியின் வீட்டில் சந்திரா தூங்கிக்கொண்டிருந்தாள். அக்கிழவி ஒரு கிண்ணம் நிறையச் சந்திராவுக்குப் பால் கொண்டு வந்தாள்; சிறிது குடித்ததும், 'ஐயோ அம்மா, நான் இரத்தத்தைக் குடிப்பதைப்

போல் தோன்றுகிறதே!" என்று சப்தமிட்டாள். "அப்படி யொன்றுமில்லை, அம்மா, நீ ஏதோ கெட்ட கனவு கண்டிருக்கிறாய். இப்பொழுதுதான் சுத்த மாகக் கறந்து, கறந்த சூட்டோடு கொண்டு வந்த பாலல்லவா இது?" என்று தேற்றினாள். "இல்லவே இல்லை. இது பாலல்ல; இரத்தம்தான். நேற்று இரவு முழுவதும் நான் பயங்கரமான கனவு கண்டேன். இன்று விழித்துப் பார்க்கும்பொழுது எனது மாங்கல்யச் சங்கிலி இரண்டு துண்டாக அறுந்துவிட்டது. இந்தப் பாலோ இரத்த வாடை அடிக்கிறது. எனது கணவருடைய உயிருக்கே ஆபத்து வந்துவிட்டதாக எனக்குத் தோன்று கிறது" என்று கதறினாள்.

அக் கிழவியும் மிக்க அன்பாக, "உன் கணவன் இறந்துவிட்டதாக நீ ஏன் எண்ணுகிறாய்? சிலம்பு விற்கச் சென்றபொழுது மிகவும் தேக சௌக்கியத் துடன்தான் சென்றார். அவர் கூறிச் சென்றபடி சீக்கிரத்தில் திரும்பிவிடுவார்" என்று சமாதானப் படுத்தினாள். "அவர் இறந்து விட்டதாகவே எனக்குத் தோன்றுகிறது. நான் இறக்கு முன்னால் அவரைப் பார்த்துவிட்டு வருகிறேன். விடை கொடுங்கள்" என்று சந்திரா கூறினாள். "நீ போகக்கூடாது. முன் பின் பழக்க மில்லாத இந்த நகரத்தில் மிகவும் அழகுடையவள் தனியாகப் போகக்கூடாது. உன் புருஷனுக்குத் தெரிய வந்தால் மிகவும் கோபித்துக் கொள்வார். நீ வழி தப்பிச் சென்றாலும் சென்று விடுவாய். உன்னை அடிமையாகப் பிடித்துக் கொண்டுபோய் விடுவார்கள். உன் கணவர் திரும்பும்வரை உன்னை இங்கிருக்கச் சொல்லவில்லையா? பொறுமையாக இரு. நான் சென்று உனது புருஷனைத் தேடிவருகிறேன். பிழைத்திருப்பதையும் இல்லாததையும் நான் தெரிந்து வந்து சொல்லுகிறன்" என்று கூறி ஒரு சட்டி நிறையப் பால் எடுத்துக்கொண்டு பால் விற்பவள் போல் கோவிலனைத் தேடிக் கிழவி சென்றாள். சந்திரா விற்கோ ஒரு நிமிஷம் போவது ஒரு யுகமாகத் தோன்றியது.

பால்க்காரக் கிழவி நகரத்தை யடைந்து கோவிலனைத் தேடியபடியே வீதிகளில் அலைந்து திரிந்தாள். முந்திய நாள் மிகவும் அற்புதமான சிலம்பை விற்க வந்த அழகான வாலிபனைப்பற்றி ஜனங்கள் பேசிக் கொள்வார் களென்று எதிர்பார்த்தாள். ஒரு சமாசாரமும் காதில் படவில்லை. அரசன் ஆணையின்படி எல்லாரும் வாயைத் திறக்க மிகவும் அஞ்சினார்கள். கோவிலனைப் பார்க்க முடியாது போகவே, கடைத் தெருவுகளி லெல்லாம் மிகவும் ஜாக்கிரதையாகத் தேடத் தொடங்கினாள். அங்கேதான் சென்றிருக்கக் கூடுமென்று நினைத்தாள். ஒவ்வொரு தரம் வீதியில் செல்லும்பொழுதும் வெவ் வேறு பண்டங்களை விற்கத் தொடங்கினாள். முதலில் "பால் வாங்குவாருண்டோ! பால் வாங்குவாருண்டோ!" என்று கத்திக்கொண்டே சென்றாள். சிறிது நேரத்தில் அதே வீதி வழியாகச் செல்லும்பொழுது "வெண்ணெய் வாங்குவாருண்டோ! வெண்ணெய் வாங்குவாருண்டோ!" என்று கூவிக்கொண்டே சென்றாள். இதைக் கவனித்த ஒரு பெண், "கிழவி என்ன பிதற்றுகிறாள்! இந்த வீதியிலேயே ஆறேழு தடவை திரும்பத் திரும்ப வெவ் வேறு பண்டம் சட்டியில் இருப்பதாக விலை கூறிச் செல்கிறாளே. நேற்றுக் காற் சிலம்பை விற்கவந்த வாலிபனைப்போல் இவளுக்கும் புத்தியில்லை. நாள் முழு வதையும் போக்கிவிட்டுக் கடைசியில் வெட்டுண்டு இறந் தான்" என்று கூறினாள்.

"யாரைப் பற்றியம்மா நீ பேசுகிறாய்?" என்று பால் காரக் கிழவி கேட்டாள். "ஓகோ, நீ பக்கத்து நாட்டுப் புறத்திலுள்ள பால் வியாபாரி. உனக்கு ஒன்றும் தெரி யாது. அதைப் பற்றிப் பேசக்கூடாது. யாராவது இறந்தவனைப் பற்றிப் பேசினாலும், புலம்பினாலும், உடனே தூக்கிலிட்டு விடுவார்கள். ஆஹா! அவன் மிகவும் அழகு வாய்ந்தவன்" என்று கூறினாள்.

"எங்கே கொல்லப்பட்டான்?" என்று அக்கிழவி மிகவும் தாழ்ந்த குரலில் கேட்டாள். "அதோ ஜனங்கள்

கூடி யிருக்கிறுர்களே அங்கேதான். ராணியின் கால் சிலம்பை அவன் திருடியதாக அரசனுடைய தட்டான் குற்றஞ் சாட்டினன். உடனே அவனைக் கொன்று விட்டார்கள். அநேகர் இது நீதியல்ல என்று சொல்லு கிறுர்கள். நான் சொன்னதாக ஒருவரிடமும் சொல்லாதே" என்று சொல்லிக் கொண்டே தூரத்திலுள்ள காட்டைக் காண்பித்தாள். பால்காரக் கிழவியும் அவ்விடத்திற்கு ஓடினள். ஆனல் கோவிலனுடைய உடலின் இரு கூறுகளும் சிதறிக் கிடப்பதைக் கண்டு தனது சட்டியைக் கீழே போட்டுவிட்டு, கீழே குனிந்துகொண்டு அழ ஆரம்பித்துவிட்டாள். அரசனுடைய சேவகர்கள் இந்த அழுகைக் குரலைக் கேட்டு அவளைச் சூழ்ந்து கொண்டு, "கிழவியே, இந்த இறந்த மனிதனைக் குறித்துப் புலம்புவது சட்ட விரோதமானது. அரசனுடைய ஆணையைப்பற்றி முணு முணுக்கக் கூடாது; உனக்குத் தகுந்த தண்டனை உன்னைக் கொல்வதே" என்று கூறினர்கள். அடுத்த விநாடியில், "இறந்த மனிதன்! இறந்த மனிதனைக் குறித்து நான் அழவில்லை. என்னுடைய சட்டி கீழே விழுந்து பாலெல்லாம் சிந்தி விட்டது. அதற்காக எனக்கு அழுகை வராதா?" என்று கூறிக்கொண்டே மேலும் அழத் தொடங்கினள். "சத்தம் போடாதே, அழாதே. இந்தச் சட்டி அதிக விலையில்லையே; மண்ணினல் செய்ததுதானே; உனது அழுகையை நிறுத்து; நாங்கள் தங்கத்தினல் செய்த பாத்திரம் தருகிறோம்" என்று கூறினர்கள்.

"உங்களுடைய தங்கத்தினல் செய்த சட்டியும் வெள்ளிச் சட்டியும் எனக்கு எதற்கு? போங்கள். என்னுடைய மண் சட்டிக்கு அவைகள் ஈடாகா. என்னுடைய பாட்டனருக்குப் பாட்டனரும், பாட்டியாருக்குப் பாட்டியாரும் இந்தச் சட்டியை உபயோகப் படுத்தினர்கள். அப்பேர்ப்பட்ட சட்டி இப்பொழுது உடைந்து விட்டதே; பாலும் போய்விட்டதே" என்று வருந்தினள். உடைந்த துண்டுகளைப் பொறுக்கிக்கொண்டே ஏங்கிக்கொண்டு வீட்டிற்குச் சென்றுள். சட்டி உடைந்ததுதான் தனது

துக்கத்திற்குக் காரணம் என்று நடித்தாள். வீட்டை யடைந்ததும் சந்திராவை நெருங்கி, "ஐயோ, என் குழந்தை, என் புத்திரியே, நீ பயப்பட்டது உண்மையாகி விட்டது!" என்று கொஞ்சங் கொஞ்சமாகச் சமாசாரத்தைச் சொன்னாள்.

சந்திரா இதைக் கேட்டவுடன், அரசனுடைய அரண்மனைக்கு ஓடினாள். அரசன் இருந்த இடத்திற்குச் சென்று, "அரசே! எனது கணவனைக் கொல்ல எவ்வாறு துணிந்தீர்?" என்று கேட்டாள்.

அவளுடைய சப்தத்தைக் கேட்டு, ராணியால் மிகவும் பத்திரமாகப் பூட்டி வைக்கப்பட்ட கால் சிலம்பு கதவுகளையெல்லாம் உடைத்துத் தாண்டவமாடிக் கொண்டு சந்திராவின் காலடியில் உருண்டு வந்தது.

இதை அரசன் பார்த்தான். அவனால் அவளுக்குப் பதில் சொல்ல முடியவில்லை. அவளோ மண்டியிட்டுக் கொண்டு, உடைகளையும், தலையையும் பிய்த்தெறிந்தாள். அப்பொழுது நாடு முழுவதும் தீப்பற்றி எரிய ஆரம்பித்தது. அவளுடைய தலையும் எரிந்தது.

அவள் பின்னால் சென்ற கிழவியான பால்காரி ஓடிச் சென்று அவளது தலையில் வெண்ணெயை வைத்தாள். பக்கத்திலிருந்த இரண்டு பெண்கள் தண்ணீரைக் கொண்டுவந்து தலையில் ஊற்றினார்கள். இதற்குள் பத்தொன்பது வரிசை வீடுகள் எரிந்துவிட்டன. அக் கிழவி, "அம்மா, எங்கள் ஆயர்குலத்தைக் காப்பாற்று; எங்களையும் எரித்துவிடாதே. நான் உனக்கு என்னால் முடிந்த உதவியைச் செய்திருக்கிறேன்" என்று இரைந்து கூறினாள். சந்திரா அக் கிழவியும் அவளுடைய இனத்தாரும் வசித்த அப் பாகத்தை எரிக்கவில்லை. ஆனால் மற்றப் பக்கங்களில் மேலும் மேலும் தீப்பரவியது; அரசனையும், அரசியையும், அரண்மனையிலுள்ளவர்களையும், துர்க்குணமுள்ள தட்டானையும், அவன் மனைவியையும் எரித்துக்கொன்றது. அந்தத் தட்டான் இறக்கும்

பொழுது அவனது இருதயத்தைப் பிடுங்கி மேலே பறந்துகொண்டிருந்த கழுகுகளுக்குக் கொடுத்தாள். "உங்களுடைய குஞ்சுகளைக் கொன்றதற்குப் பழி இதுதான்" என்று கூறினாள். சிறிது தூரத்தில் நின்று பார்த்துக் கொண்டிருந்த நடன மாது மௌவியும், அவளது தாயும் நெருப்புக்கு இரையானார்கள்.

அதன் பிறகு கோவிலனுடைய உடல் கிடந்த இடத்திற்குச் சந்திரா சென்று புலம்பினாள். அவள் அழுது கொண்டிருக்கும் பொழுதே, ஆகாய வெளியிலிருந்து ஊசியும் நூலும் வந்து விழுந்தன. சந்திரா எடுத்துக் கொண்டாள். "இவற்றைக்கொண்டு எனது கணவனை மீண்டும் உயிர்ப்பிக்க முடியாதா!" என்று சொல்லிக் கொண்டே உடலின் இரு கூறுகளையும் ஒன்றாகப் பொருத்தித் தைத்தாள்.

அப்படிச் செய்ததும், மகாதேவரை நோக்கி, "மகாதேவா, நான் என்னால் செய்ய முடிந்ததைச் செய்தேன். உடலின் இரு பாகங்களையும் பொருத்தி விட்டேன். உயிரைக் கொடு" என்று வேண்டினாள். மகாதேவரும் அவள்மேல் இரக்கங்கொண்டு, கோவிலனுடைய உயிரைத் திரும்ப அனுப்பினார். திரும்பவும் உயிர் உடலில் வந்து சேர்ந்தது; கோவிலன் உயிர் பெற்றெழுந்தான். சந்திரா அளவுகடந்த சந்தோஷமடைந்தாள். அவர்களிருவரும் திரும்பிச் சென்று தங்கள் நாட்டில் சந்தோஷமாக வாழ்ந்தார்கள்.

இப்பொழுதும் எரியுண்ட நாட்டை மதுரை - திருநெல்வேலிச் சீமையில் நீங்கள் காணலாம்.

மத்தளக்காரன்*

ஓர் ஊரில் மத்தளக்காரன் ஒருவன் இருந்தான். அவன் ஒருநாள் ஓர் ஏரியின் கரையோரமாய்ப் போய்க்கொண்டிருக்கையில் மூன்று மெல்லிய சிற்றுடைகளைக் கண்டான். அவை மிகவும் அழகாக இருந்தமையால் அவன் அவற்றில் ஒன்றை யெடுத்துச் சட்டைப் பையில் போட்டுக்கொண்டு வீடு வந்து சேர்ந்தான்.

அன்றிரவு அவன் தூங்கும்பொழுது ஓர் இனிமையான குரல் கேட்டது. அது "மத்தளக்காரா! நீ வைத்திருக்கும் ஆடை என்னுடையது; அதைக் கொடுத்துவிடு" என்றது. அவன் கண்களைத் திறந்து சுற்றுமுற்றும் பார்த்தான். ஓர் அழகிய பெண் அவனெதிரே நிற்கக் கண்டான். அப்பெண் மறுபடியும், "மத்தளக்காரா! நான் ஓர் அரசகுமாரி; ஒரு மாயக்காரியின் கையில் அகப்பட்டு அவள் இருப்பிடமாகிய 'கண்ணாடி மலை'யில் சிறையிருந்து வருகிறேன். நானும் என்னைப்போல அகப்பட்டுக்கொண்ட என் இரண்டு சகோதரிகளும் இங்கிருந்து சமீபத்திலுள்ள ஏரிக்கு நீராட வருவது வழக்கம். நீ வைத்திருக்கும் ஆடை மந்திர சக்தி வாய்ந்தது. அதன் உதவியின்றி நான் திரும்பிப் பறந்து போக முடியாது. என் சகோதரிகள் இருவரும் பறந்து போய்விட்டார்கள். அதிக சீக்கிரம் போகவேண்டியிருப்பதால், தயைசெய்து ஆடையைக் கொடுத்துவிடு; நான் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுகிறேன்" என்றாள். இவ்வரலாற்றை ஆச்சரியத்துடன் கேட்டுக் கொண்டிருந்த மத்தளக்காரன் அவளது ஆடையைத் திருப்பிக் கொடுத்துவிட்டான்; மாயக்காரியிடமிருந்து அவளை விடுவிக்கத் தன்னால் இயன்ற முயற்சிகள் செய்வதாய்ப் பரிந்து கூறினான். அவ்வரசகுமாரி சந்தோஷமடைந்து, கண்ணாடி மலைக்குப் போகும் வழியைப்பற்றி விவரமாய்க் கூறி மறைந்தாள்.

---

* 'க்ரிம்' என்பவர் எழுதிய கதையொன்றைத் தழுவி எழுதியது.

மறுநாட் காலையில், அவன் தன் மத்தளத்துடன் அரசகுமாரி சொல்லிய வழியே புறப்பட்டுப் போனான். அவன் போய்க்கொண்டிருந்த காட்டுப் பாதையில் ஒரு பெரிய அரக்கன் உறங்கிக் கொண்டிருந்தான். அவனைப் பார்த்ததும் மத்தளக்காரன் தனது மத்தளத்தை 'டம டம' என்று அடித்தான். அரக்கன் விழித்துக் கோபங் கொண்டு, "கொட்டடித்து ஏன் என்னை எழுப்பினாய்?" என்று மத்தளக்காரனை அதட்டினான். "கணக்கற்ற ஆட்கள் ஆயுதங்களுடன் என் பின்னால் வந்துகொண்டிருக்கிறார்கள்; உன்னை எப்படியாவது கொன்று விடுவார்கள்" என்று மத்தளக்காரன் அவ்வரக்கனைப் பயமுறுத்தினான். அரக்கனும் அவன் வார்த்தைகளை நம்பி அவனுடைய ஆட்களால் தனக்கு யாதோர் ஆபத்தும் ஏற்படாதபடி பார்த்துக் கொண்டால், தன்னால் கூடிய உதவியைச் செய்வதாக வாக்களித்தான். மத்தளக்காரன், "அப்படியானால், என்னைத் தூக்கிக் கண்ணாடி மலைக்குக் கொண்டுபோய் விடு. நான் மத்தளத்தை அடித்து என் ஆட்களைத் திரும்பிப் போக உத்தரவு செய்கிறேன்" என்றான். "என் தோளின்மேல் ஏறிக் கொள். நீ விரும்பிய இடத்திற்கு நான் கொண்டு போகிறேன்" என்று அரக்கன் சொன்னான். மத்தளக்காரனும் அவன் தோளின்மேல் ஏறிக்கொண்டு மத்தளத்தை 'டமடம டம்டம்' என்று அடித்தான். தன்னுடைய ஆட்களைத் திரும்பிப் போகச் சொல்வதற்கு அடையாளமாக மத்தளத்தை அடிக்கிறானென்று நம்பி அரக்கனும் திருப்தியடைந்தான்.

கொஞ்சதூரம் போனதும், பின்னுமோர் அரக்கன் மத்தளக்காரனை வாங்கித் தன் பொத்தான் துவாரத்தில் வைத்துக்கொண்டு கண்ணாடிமலையை நோக்கிச்சென்றான். அத்துவாரம் மிகவும் பெரிதாகவும் அகலமானதாகவும் இருந்தபடியால், மத்தளக்காரன் சௌகரியமாய் உட்கார்ந்து கொண்டு குதூகலத்தோடு சென்றான். இந்த அரக்கன் கொஞ்சதூரம் போனதும், மூன்றாவது அரக்கனொருவன் எதிர்ப்பட்டான். அவன் மத்தளக்காரனைத்

தன் தொப்பியின் அகலமான விளிம்பில் ஏற்றிக் கொண்டான். மத்தளக்காரனும் அவ் விளிம்பில் வேடிக்கையாக நடந்துகொண்டே இருக்கும்பொழுது, வெகு தூரத்திலுள்ள ஒரு மலையைப் பார்த்தான். அது தான் கண்ணாடிமலையா யிருக்குமென்று தனக்குள் எண்ணினான். இரண்டு மூன்று அடியெடுப்பில் அரக்கன் அவனைக் கண்ணாடி மலையின் அடிவாரத்தில் கொண்டு போய்ச் சேர்த்தான். மத்தளக்காரன் அந்த மலையின் உச்சிக்குக் கொண்டு போகும்படி அவனிடம் சொன்னான். ஆனால் அவ்வரக்கன் தன் வாய்க்குள் ஏதோ சில வார்த்தைகளை முணுமுணுத்துக் கொண்டே மத்தளக்காரனை அங்கே விட்டுவிட்டுத் திரும்பக் காட்டிற்குப் போய்விட்டான்.

கண்ணாடி மலையோ மிகவும் உயரமானதாயும், பளிங்கு போல் பிரகாசமுள்ளதாயும் வழவழப்பாயும் இருந்தது. மத்தளக்காரன் கொஞ்சதூரம் ஏறினான்; சறுக்கி விழுந்தான். இவ்வாறு திரும்பத் திரும்பப் பலதடவை ஏறியும் வழுக்கி விழுந்துகொண்டேயிருந்தான். என்ன செய்வதென்று அவனுக்குத் தெரியவில்லை. சுற்று முற்றும் பார்த்தான். சமீபத்தில் இரண்டுபேர் சண்டை போட்டுக் கொண்டிருப்பதைக் கவனித்தான். அவர்கள் ஒரு சேணத்தைக் குறித்துச் சண்டை போடுவதாகத் தெரிந்து கொண்டான். அவர்களிடம் போய், "அட பைத்தியக்காரர்களே! இந்தச் சேணத்திற்காகவா சண்டை போடுகிறீர்கள்? சேணம் இருக்கிறது; பின்னால் குதிரையைச் சம்பாதிக்கலாம்! என்ன ஆலோசனை!" என்று கேட்டான். அதற்கு ஒருவன், "ஐயா, இந்தச் சேணத்தைப்பற்றி உமக்கொன்றும் தெரியாது. தன் மேலேறி இருப்பவர்களை இது நினைத்த இடத்திற்குக் கொண்டுபோய்ச் சேர்க்கும் வல்லமையுடையது. எங்கள் இருவருக்கும் இது சொந்தம். இப்பொழுது நான் ஏறிப் போகவேண்டிய முறை. ஆனால் எனது பகைவன் தடுக்கிறான்" என்று சொன்னான். மத்தளக்காரன், "நான் உங்கள் சண்டையைத் தீர்த்துவைக்கிறேன்" என்று

சொல்லி ஓர் இடத்தைக் குறித்து அங்கே ஓடி எவன் முதலில் சேருகிறானோ அவனே சேணத்தைப் பெற வேண்டுமென்று தந்திரமாகச் சொன்னான். இருவரும் சம்மதித்து ஓட ஆரம்பித்தார்கள். அவர்கள் இரண்டு மூன்றடி எடுத்து வைத்ததும், மத்தளக்காரன் சேணத்தின் மேலேறித் தான் கண்ணாடிமலையின் உச்சியை அடைய வேண்டுமென்று நினைத்தான்; ஒருகணத்தில் மலையுச்சியில் தான் இருப்பதைக் கண்டான்.

அங்கே கல்லினால் கட்டப்பட்ட ஒரு சிறு வீடு இருந்தது. அதன் முன்னால் மீன்கள் மிகுந்த ஒரு குளமும், சுற்றிலும் அடர்ந்த பெரிய காடும் காணப்பட்டன. மத்தளக்காரன் அவ்வீட்டின் கதவை மூன்று தடவை தட்டினான். இருண்ட முகமும், வெள்ளை முடியும், சிவந்த கண்களுமுடைய ஒரு கிழவி கதவைத்திறந்தாள். அவளுடைய மூக்கு மிக நீண்டிருந்தது. அதன்மேல் அவள் ஒரு கண்ணாடியைப் போட்டுக்கொண்டிருந்தாள். மத்தளக்காரனை ஏற இறங்க ஒரு பார்வை பார்த்தாள். "என்ன காரியத்திற்காக இங்கு வந்தாய்?" என்று சிறிது கோபத்தோடு கேட்டாள். தனக்குத் தங்க இடமும், கொஞ்சம் ஆகாரமும் வேண்டுமென்று அவன் பதில் சொன்னான். அதற்கு அவள், "நீ கேட்டதைத் தருகிறேன். ஆனால் நீ அதற்காகப் பாடுபட வேண்டும். நான் கொடுக்கும் மூன்று வேலைகளை நீ செய்ய வேண்டும்" என்றாள். "அப்படியே ஆகட்டும்; எவ்வளவு கடினமான வேலையானாலும் பரவாயில்லை" என்று வினயமாக அவன் பதில் சொன்னான். உடனே அம்மந்திரக்காரி அவனை உள்ளே அழைத்துச் சென்று நேர்த்தியான சாப்பாடு போட்டாள். தூங்குவதற்கும் சொகுசான படுக்கை கொடுத்தாள்.

பொழுது விடிந்ததும், ஒரு சிறு ஓட்டைப் பாத்திரத்தைக் கொடுத்து, "இந்தப் பாத்திரத்தைக் கொண்டு வீட்டின் முன்னாலுள்ள குளத்துத் தண்ணீரை ஒரு சொட்டுக்கூட இல்லாமல் இறைக்கவேண்டும். பின்னால்

அங்குள்ள மீன்களை யெல்லாம் இனத்திற்கும் உருவத்திற்கும் தக்கபடி பிரித்து ஒழுங்குபடுத்த வேண்டும். இவ்வளவையும் இன்று ராத்திரிக்குள் செய்து முடிக்க வேண்டும்" என்று கட்டளையிட்டாள். மத்தளக்காரனும் அவ்வேலையைச் செய்யப் புறப்பட்டுவிட்டான். மத்தியானம் வரைக்கும் தண்ணீரை இறைத்துப் பார்த்தான். குளம் வற்றச் சுமார் ஆயிரம் வருஷமாகும் போலத் தோன்றியது. சாப்பாட்டு நேரம் வந்ததும் சோர்வடைந்து உட்கார்ந்தான். வீட்டிலிருந்து ஓர் அழகிய சிறு பெண் அவனுக்கு ஆகாரம் கொண்டுவந்தாள். அவன் முன்னால் பரிமாறினதும், "அப்பா, நீ ஏன் விசனமடைந்திருக்கிறாய்? என்ன காரணம்?" என்று கேட்டாள். அவன் அவளுடைய அழகிய முகத்தை உற்றுப் பார்த்தபடியே, "ஐயோ! இந்த வேலையையே எனக்குச் செய்ய முடியவில்லையே! இன்னும் கொடுக்கப் போகிற இரண்டையும் எப்படிச் செய்யப்போகிறேன்?" என்று மலைவாகச் சொல்லிவிட்டு, "நான் ஓர் அரசகுமாரியைத் தேடி இங்கு வந்தேன்; இன்னும் அவளைப் பார்க்கக்கூடவில்லை"—என்று வருந்தினான்.

"சற்று அமைதியாக இரு. நான் உனக்கு உதவி செய்கிறேன். நீ மிக்வும் களைத்துப் போயிருக்கிறாய். என் மடிமேல் உன் தலையை வைத்துத் தூங்கு. விழித்ததும் நீ செய்யவேண்டிய வேலை முடிவடைந்திருக்கும்" என்று அச் சிறுமி கூறினாள்.

அவளது அழகில் ஈடுபட்ட மத்தளக்காரன் அவள் மடியில் தலைவைத்துத் தூங்கிவிட்டான். சிறுமி தன் கையிலுள்ள மந்திரசக்தி வாய்ந்த ஒரு மோதிரத்தைத் திருகிக்கொண்டே, "தண்ணீரே வற்றிவிடு. மீன்களே கரைக்கு வாருங்கள்" என்று கூறினாள். உடனே குளத்திலுள்ள தண்ணீரெல்லாம் நீராவியாக மாறிவிட்டது. மீன்களெல்லாம் கரையை அடைந்து இனத்திற்கும் உருவத்திற்கும் தகுந்தபடி ஒழுங்காகப் பிரிந்து இருந்தன. மத்தளக்காரன் தூங்கி விழித்ததும் எல்லாவற்றையும்

பார்த்து மிகவும் ஆச்சரியப்பட்டான். அச்சிறுமி அவனைப் பார்த்து, "நண்பனே, ஒரே ஒரு மீன் மாத்திரம் தனிமையாகக் கிடக்கிறது. அக்கிழவி இன்று சாயங் காலம் வந்ததும் அந்த மீன் மாத்திரம் அப்படித் தனியாக இருப்பதின் காரணத்தைக் கேட்பாள். நீ உடனே இது 'உனக்காக' என்று சொல்லி அவள் முகத்தில் எறிந்து விடு" என்றாள்.

சாயங்காலமானதும் கிழவி வந்தாள்; சிறுமி சொல் லியது போலவே தனிமையாகக் கிடந்த மீனைப்பற்றிக் கேட்டாள். உடனே மத்தளக்காரன் 'உனக்குத்தான்' என்று அவள் முகத்தில் மீனை எறிந்தான். கிழவி இந்த அவமானத்தைக் கவனியாதது போல் நடந்து கொண்டாள். ஆனால் அவனைக் கொடிய நோக்கத்தோடு பார்த்தாள்.

மறுநாட் காலையில் அந்தக் கிழவி மத்தளக்காரனைப் பார்த்து, "நேற்று உனக்கு மிகவும் சுலபமான வேலை. இன்றைக்குச் சிறிது கடினமான வேலை கொடுக்க வேண்டும். இந்தக் காட்டிலுள்ள மரங்களையெல்லாம் வெட்டி வீழ்த்திச் சிறுசிறு துண்டுகளாக்க வேண்டும். பின்பு அவைகளை இன்று சாயங்காலத்திற்குள் கட்டுக் கட்டாகக் கட்டி முடிக்கவேண்டும்" என்று கோபத்தோடு கூறினாள். மத்தளக்காரன் கோடாரி, ரம்பம் முதலிய வற்றை எடுத்துக்கொண்டு அவ்வேலைக்குப் புறப் பட்டான். முந்தினநாள் மாதிரியே அன்றும் அவனுக்கு என்ன செய்வதென்று தோன்றவில்லை. சாப்பாட்டு நேரத்தில் மறுபடியும் அச்சிறுமி வந்து சேர்ந்தாள். அவள் மடியில் தலையை வைத்து மத்தளக்காரன் தூங்கினான். விழித்தவுடன், மரங்களெல்லாம் வெட்டப் பட்டு, கட்டுக்கட்டுகளாகக் கிடந்தன. ஒரு கிளை மாத்திரம் தனிமையாகக் கிடந்தது. அந்தக் கிளையைக் கொண்டு கிழவியை அடிக்கும்படியாகச் சிறுமி கேட்டுக் கொண்டாள். கிழவி வந்தவுடன் அவனும் அவ்வாறே செய்தான். அவள் கோபங் கொள்ளவில்லை. ஏளனமாகச் சிரித்துக்கொண்டே, "நாளைக்கு நீ இந்தக் கட்டுகளை

யெல்லாம் ஒன்று சேர்த்து, ஓர் இடத்தில் குவித்து எரிக்க வேண்டியது" என்று உத்தரவிட்டுப் போனாள்.

மூன்றாவது நாட் காலையில் மத்தளக்காரன் எழுந்திருந்து விறகுக் கட்டுகளையெல்லாம் ஓரிடத்தில் குவிக்க ஆரம்பித்தான். பாவம்! ஒருவனால் எப்படி அவ்வளவையும் குவிக்க முடியும்? அன்றும் அவனால் அதிகமாக ஒன்றும் செய்ய முடியவில்லை. சிறுமி அன்றைக்கும் அவனைத் திண்டாட விட்டுவிடவில்லை. வழக்கம்போல் மத்தியானம் சாப்பாடு கொண்டுவந்தாள். மத்தளக்காரனும் அவள் மடியில் தலைவைத்துத் தூங்கிவிட்டான். விழித்தெழுந்தவுடன் தீ 'தகதக' என்று சுவாலைவிட்டு எரிந்து கொண்டிருந்தது. சிறுமி அவனைப் பார்த்து, "நண்பனே, இன்று மாயக்காரி வந்ததும் உன்னை ஒரு வேலை ஏவுவாள். நீ பயப்படாமல் அவள் சொல்லுவதைச் செய். சிறிது பயப்பட்டாலும் காரியம் கெட்டுவிடும். உன்னைத் தீயில் செல்லும்படி ஏவுவாள். நீ அவள் சொல்வதைச் செய்து முடித்தால் சுலபமாய் அவளையே பிடித்து நெருப்பில் எறிந்து கொன்றுவிடலாம்" என்று எச்சரித்து விட்டுப் போனாள்.

சாயங்காலமானதும் மாயக்காரி வந்தாள்; "ஆ! தீ எரிகிறதா? நான் குளிரினால் நடுங்கிக்கொண்டிருக்கிறேன். குளிர் காயவேண்டும். அதோ தெரிகிறது பார். அந்தக் கட்டை எரியவில்லை. அதை மாத்திரம் வெளியே எடுத்தெறிந்துவிடு. அப்படிச் செய்வாயானால் நீ இஷ்டப்பட்டபடி அலைந்து திரியலாம்" என்று வஞ்சனைக்காரக் கிழவி சொல்லி முடித்தாள். மத்தளக்காரனும் பின்வாங்காமல் எரிகிற தீயில் பாய்ந்து சென்றான். அவனுக்கு அணுவளவும் தீங்கு உண்டாகவில்லை. எரியாதிருந்த கட்டையை வெளியே எடுத்து வந்து போட்டான். அக்கட்டை தரையில் படவே, அவனுக்கு இதுவரை உதவி செய்துவந்த அழகிய சிறுமியாக அது மாறியது. அவள் அணிந்திருந்த விலையுயர்ந்த ஆடையாபரணத்தைக் கண்டு அவள்தான் தான் தேடிவந்த அரசகுமாரி யென்று

அறிந்து கொண்டான். மாயக்காரி சிரித்துக்கொண்டே, "உம்! நீ அவளை அடைந்துவிட்டதாக எண்ணிவிடாதே; அதை இப்பொழுதே காண்பிக்கிறேன்" என்று சீறினள். உடன் அச்சிறுமியின் மேல் பாய்ந்து அவளைத் தூக்கிக் கொண்டு போகுந் தருணத்தில், மத்தளக்காரன் மாயக் காரியைப் பிடித்துத் திக்கிரையாக்கினன்.

அரசகுமாரி மத்தளக்காரனைக் கூர்ந்து பார்த்தாள்; அவன் அழகுடையவனாகக் காணப்பட்டான். மேலும் தனக்காக அவன் உயிரையும் பொருட்படுத்தாமல் முயற்சி செய்ததை நினைத்துக் கொண்டாள். தன் கையை அவனிடம் நீட்டி, "எனக்காக எவ்வளவு சிரமம்? அன்பரே, நான் உம்மையே மணம் புரிந்துகொள்ள விரும்புகிறேன். உமது எண்ணம் இதற்கு மாறாக இராதென்றே நம்புகிறேன்" என்று அவள் கூறினள். அவன் மறுத்து விடுவானா? பின்பு இருவரும் மாயக்காரியின் வீட்டிற்குள் சென்று அங்கிருந்த தங்கம், வெள்ளி, பின்னும் விலையுயர்ந்த மணிகள் முதலியவற்றை எடுத்துக் கொண்டார்கள். அக்கண்ணாடி மலையில் அவர்கள் நெடு நேரம் தங்கவில்லை. அரசகுமாரி தன் கையிலுள்ள மந்திர சக்தி வாய்ந்த மோதிரத்தினால் வீடு போய்ச் சேரலாம் என்று தெரிவித்தாள். அவள் காதலன் முதலில் நகரத்தின் வெளிவாசலை அடையும்படி நினைக்கச் சொன்னன். ஒரு நொடிக்குள் இருவரும் அங்கே போய்ச் சேர்ந்தார்கள்.

மத்தளக்காரன் :—"நான் முதலில் என் தாய் தந்தையர்களிடம் போய் என் விருத்தாந்தத்தை யெல்லாம் தெரிவித்துவிட்டுச் சீக்கிரம் வந்துவிடுகிறேன். அதுவரை இங்கே இரு."

அரசகுமாரி :—"ஐயோ! ஜாக்கிரதை! அவர்கள் வலது கன்னத்தில் உமது முகம் படுமானல் என்னைப்பற்றிய நினைவை அடியோடு மறந்துவிடுவீர். அப்படிப்படாமற் பார்த்துக்கொள்ளும்."

மத்தளக்காரன் :—"நான் உன்னை எப்படி மறக்கக்கூடும்?"

இவ்வாறு சமாதானம் செய்துவிட்டு மத்தளக்காரன் தனது வீட்டையடைந்தான். அங்கே ஒருவரும் அவனை அறிந்து கொள்ளாதபடி அவ்வளவு மாறிப் போய் விட்டான். பின்பு தன்னைப்பற்றியும் தனக்கு நேர்ந்த அதிசய சம்பவங்களைப் பற்றியும் ஆதிமுதல் சொல்லி முடித்தான். அவனுடைய பெற்றோர்களைச் சந்தோஷத்தினால் தழுவிக் கொண்டான். அளவுகடந்த மனமகிழ்ச்சியினால் அவர்கள் வலது கன்னத்தில் அவனுடைய முகம் பட்டுவிட்டது. உடனே அரச குமாரியைப் பற்றிய செய்தியை முற்றிலும் மறந்துவிட்டான். அவர்களிடம் தான் கொண்டுவந்த திரவியத்தைக் கொட்டினான். அப் பணத்தைக்கொண்டு, மத்தளக்காரனுடைய தகப்பனார் அரசர்கள் வசிக்கத் தகுந்த ஒரு பெரிய மாளிகையைக் கட்டி முடித்தார். பின்பு தம் மகனைப்பார்த்து, "நான் உனக்கு ஒரு பெண் பார்த்திருக்கிறேன்; இந்த வாரத்தில் கலியாணம் முடித்துவிடலாம்" என்று கூறினார். மத்தளக் காரனும் சம்மதித்தான்.

அரசகுமாரி தன் காதலனுக்காக வெகு நேரம் காத் திருந்தாள். அவன் திரும்பி வருகிற வழியைக் காண வில்லை. தான் எச்சரித்ததை மறந்துவிட்டபடியால் பெற் றோரின் வலது கன்னத்தில் அவன் முகம் பட்டிருக்கு மென்று நினைத்தாள், சாயங்காலமானவுடன் நகரத் திற்குள் நடந்து சென்றாள். தனது அன்பன் வீட்டின் வழியாகச் சென்றபொழுது அவன் பலதடவை பார்த்தும் அவளை அறியவில்லை. 'எப்படியாயினும் இவனை அடை வேன்' என்று தனக்குள்ளே உறுதி பூண்டாள்; அந் நகரிலேயே மறைந்து வசித்தாள். அவனுக்குக் கலியா ணம் என்ற பேச்சும் அவள் காதிற்பட்டது.

கலியாண வைபவத்தின் முதல் நாளன்று அரச குமாரி தனக்குச் சூரியகிரணங்களால் இழைக்கப்பட்டது போல் பிரகாசிக்கும் பொன்னுடை ஒன்று வேண்டு மென்று தன் மாய மோதிரத்தைத் தொட்டு நினைத்தாள். உடனே ஆடை தோன்றியது. அன்றிரவு அவ் ஆடையை உடுத்திக்கொண்டு, விருந்து நடக்கும் இடத்

திருச் சென்றாள். கலியாணப் பெண் அந்த ஆடையைக் கண்டு அதின்மேல் மிக்வும் விருப்பங் கொண்டாள். அவள் அரசகுமாரியிடம் மெதுவாகச் சென்று, "பொன் னுடையை விற்க முடியுமா?" என்று கேட்டாள். விலைக்குக் கொடுக்க முடியாதென்றும் அவள் கணவன் படுக்கும் அறையின் வெளிப்பக்கத்தில் அரசகுமாரி இரவைக் கழிக்கச் சம்மதித்தால் ஆடையைத் தருவ தாகவும் சொன்னாள். அவளும் ஒத்துக்கொண்டாள். ஏனென்றால் ஆடையின்மேல் அவளுக்கு அவ்வளவு மோகம் இருந்தது. அன்றிரவு மத்தளக்காரன் தன் மனைவி கொடுத்த பானத்தை உண்டுவிட்டு மயங்கித் தூங்கினான். நடு இரவில் அரசகுமாரி தன் காதலன் படுத்திருந்த அறையின் வெளியே இருந்துகொண்டு, "மத்தளக்காரர், ஆருயிர்க் காதலா, மறந்தாயோ என்னை!" என்று புலம்பத் தொடங்கினாள். பிரயோஜன மில்லை. இரண்டாவது நாள் சந்திர கிரணங்களால் இழைக்கப்பட்டது போல் விளங்கிய வெண் பட் டொன்றை உடுத்திக்கொண்டு வந்து மணப்பெண்ணையும் மயக்கி, இரவில் அங்கே தங்குவதற்குச் சம்மதம் பெற்று விட்டாள். அன்றும் வெற்றி பெறவில்லை. ஆனால் அங் குள்ள வேலைக்காரர்கள் ஓர் அழகிய பெண் இரவில் வந்து, 'மத்தளக்காரர், ஆருயிர்க் காதலா' என்று அழைப்பதாக அவனிடம் சொன்னார்கள்.

மூன்றாவது நாள் இரவில், மத்தளக்காரன் தூக்கந் தரும் பானத்தை உட்கொள்ளாமல், குடிப்பதுபோல் கீழே கொட்டிவிட்டான். அன்றிரவும் அரசகுமாரி நக்ஷத் திரங்களைப்போல் மின்னும் பூக்களையுடைய ஆடையைக் கட்டிக்கொண்டு வந்தாள். அன்றும் கலியாணப் பெண் அவளிடம் அவ்வாடையைப் பெற்றுக் கொண்டு, தன் வீட்டில் தங்கும்படி அனுமதி கொடுத்தாள். இரவில் சப்தமடங்கியதும் முன்னிரண்டு இரவில் கூவியதுபோல், "மத்தளக்காரா, ஆருயிர்க் காதலா, மறந்தாயோ என்னை!" என்று இரக்கமான குரலில் அரசகுமாரி பாடி னாள். இதைக் கேட்டுக் கொண்டிருந்த மத்தளக்காரனுக் குத் திடீரென்று பழைய நினைவு வந்துவிட்டது; "ஆஹா!

மிகவும் நன்றி கெட்டவனுக்கும், கொடிய பாவியாகவும் மாறிவிட்டேனே! இவள் எச்சரித்தபடி நடக்காததினால் அல்லவோ இவளை மறக்க நேர்ந்தது!'" என்று தன்னையே நொந்துகொண்டான். உடனே அரசகுமாரியைப் போய்த் தழுவிக்கொண்டான். தன் பெற்றோர்களிடம் அழைத்துக் கொண்டு போய் அவளுடைய வரலாற்றைத் தெரியப் படுத்தினான். அவர்களைப் பார்த்து, "இவள்தான் எனது உண்மையான காதலி. வேறொருத்தியைக் கலியாணம் பண்ணுவேனானால், இவளைத் துன்புறுத்திய பாவியாவேன்" என்று தழுதழுத்த குரலில் சொன்னான். ஆச்சரியத்துடன் கேட்டுக் கொண்டிருந்த அவன் பெற்றோர்கள் மகிழ்ச்சியடைந்தார்கள்; அவன் காதலை முற்றுவித்து அவனையும் இன்புறுத்த எண்ணினார்கள்.

அரசகுமாரிக்கும் மத்தளக்காரனுக்கும் கலியாணம் நடந்தது. முன்னால் திர்மானிக்கப்பட்ட பெண்ணிற்கு அந்த மூன்று அழகிய ஆடைகளும் கைம்மாறாகக் கிடைத்தன. அவற்றைக்கொண்டு அவள் திருப்தி யடைந்தாள்.

பாலகோபாலன் வழக்கு*

சுமதி ஓர் ஏழைத் தாய். வெகு காலமாகக் கஷ்ட ஜீவனம் செய்துவந்தாள். ஒரே மகள்; சுந்தரி என்று பெயர்; இவளைப் பராமரிப்பதற்குக் கூட வழியில்லாமல் தாய் மிகவும் வருந்தினாள்.

கடைசியாக, தெய்வம் கண் திறந்தது. அவளுடைய தூரபந்து ஒருவர் எழுதி வைத்த மரண சாசனத்தின் மூலமாகச் சிறிது பொருள் அவளுக்குக் கிடைத்தது. அம்முதலைக் கொண்டு மதுரையில் ஒரு சாப்பாட்டு விடுதி வைத்துக் காலந்தள்ளி வந்தாள். வருபவர்களுக்குத் தன்னால் கூடிய மட்டும் நல்ல உணவளித்து உற்சாகப் படுத்துவது வழக்கம். அவள் விடுதிக்கு வருபவர்களும் உள்ளதைக் கொண்டு திருப்தி அடைபவர்களே.

*ஓர் ஆங்கிலக் கதையைத் தழுவி எழுதியது.

அவளுடைய முன்னோர்களில் ஒருவர் சிறந்த போர் வீரராய் விளங்கிப் பாண்டிய நாட்டிற்குப் பெருந்தொண்டு புரிந்தவர். அவருடைய வீரச் செயல்களையும், அவரைப் பற்றியுள்ள வேறு சரித்திரங்களையும் உற்சாகம் வந்தபொழுது அவள் சொல்லிக் கொண்டிருப்பாள். அவளுடைய வீட்டின் பின்புறத்திலே வைகை நதி. முன்புறத்தில் சிறிது தூரம் சென்றதும் ஒரு பழமையான அழகிய கோயில். அதன் சுவர்களிலெல்லாம் கண்ணைக் கவரும் சித்திரங்கள்; அவைகள் எக்காலத்தில் எழுதப்பட்டனவோ தெரியாது. அந்தக் கோயிலுக்கு அடிக்கடி சென்று தானும் மகளும் வழிபட்டு வருவது உண்டு. தெரிந்தவர்கள் எல்லாரும் இவர்களை நன்குமதித்து அன்புசெய்து வந்தார்கள்.

இவ்விதம் வாழ்ந்து வருகையில் ஒரு சம்பவம் நிகழ்ந்தது. ஆடி மாதம்; நடுப் பகல். மூன்று பிரயாணிகள் அவளுடைய விடுதிக்கு வந்து சேர்ந்தார்கள். அவர்கள் கை கால் அலம்பிக் கொள்வதற்குச் சுந்தரி தண்ணீர் கொண்டுவந்து கொடுத்தாள். அவர்களும் சுத்தி பண்ணிக்கொண்டு மிகவும் பசியாயிருந்ததனாலே உணவருந்த உட்கார்ந்தார்கள். பாண்டிய நாட்டைச் சேர்ந்தவர்களாக அவர்கள் தோன்றவில்லை. தூர தேசத்திலிருந்து வந்தவர்களோ என்று எண்ணும்படியாயிருந்தது. ஒருவன் மலையாள தேசத்தான் போலத் தோன்றினான். அவன் நடை உடை பாவனைகளில் மிக்க மரியாதை காட்டிய போதிலும், அவனுடைய பார்வையிலிருந்து நம்பிக்கைக் குரியவனல்ல என்று வெளியாயிற்று. இடைவிடாது அவன் சிரித்துக் கொண்டிருந்தான். ஆனால் அச்சிரிப்பு உதட்டின் அளவாக இருந்ததேயன்றி, உள்ளத்திலிருந்து எழுந்ததல்ல. மேலும் அவன் சிரிக்கும் பொழுது மற்றவர்கள் பார்க்க முடியாதபடி முகத்தைத் திருப்பிக்கொண்டு சிரித்தான். அவன் கூட வந்தவர்கள் முரட்டு ஆசாமிகள்; துடுக்கான பேச்சுக்காரர்கள்; தட்டுத் தடையின்றி, சிறிதும் கூச்சமின்றிக் கீழ்மக்கள் பேச்சுக்களைப் பேசிவந்தனர். அவர்கள்

அணிந்திருந்த சட்டையிலிருந்து, ஒருவேளை அவர்கள் கூலிப் படையைச் சேர்ந்தவர்களாக இருக்கலாமோ என்று எண்ண இடமிருந்தது; வம்புச் சண்டைக்குப் பின் வாங்காதவர்களா யிருந்தார்கள்.

சாப்பாடு முடிந்ததும் அவர்கள் ஓரிடத்தில் உட்கார்ந்து ரகசியம் பேசத் தொடங்கினார்கள். முடிவில் மலையாளி எழுந்திருந்து சுமதி யம்மையை நோக்கி, "அம்மா, இரண்டொரு நாள் இந்தப் பொன் முடிப்பை உங்கள் வீட்டில் வைத்துவிட்டுப் போகலாமா?" என்று கேட்டான்.

சுமதி :—நீங்கள் வைத்துவிட்டுப் போகலாம். ஆனால் எங்கள் வீட்டுக் கதவுக்குப் பூட்டுக் கிடையாது. கொண்டியை மாட்டித்தான் நாங்கள் கதவடைத்துக் கொள்வது. உங்களுடைய பொன் முடிப்புக்கு இந்தப் பாதுகாப்புப் போதுமா என்பதை நீங்களே யோசித்துக் கொள்ள வேண்டியதுதான்.

மலையாளி :—உங்கள் வார்த்தையே எங்களுக்குத் தக்க பாதுகாப்பு.

சுமதி :—நாங்களிருவரும் இறந்துபோனால், என்ன செய்வீர்கள்? உங்களுடைய பொன்னை ஒருவரும் எடுத்துக்கொள்ள மாட்டார்கள்; ஆனால் ஊர்க்காரர்கள் அநாதைச் சொத்தென்று அதைக் கோயிலுக்குக் கொடுத்து விடுவார்கள்.

மலையாளி :—அப்படியானால் எங்களுக்கு ஒரு ரசீது எழுதிக் கொடுங்கள். அதன் மூலம் இந்தப் பொருளைப் பெற்றுக் கொள்வோம்.

அப்படியே ரசீது ஒன்று எழுதப்பட்டது. இந்தச் சமயத்தில் அருகிலுள்ள வைத்தியர் ஒருவர் அங்கு வந்து சேர்ந்தார். அவருடைய முன்னிலையில் சுமதி யம்மையும் ரசீதில் கையெழுத்துச் செய்தாள். 'நாங்கள் வந்து கேட்டால்தான் பொன் முடிப்பைக் கொடுக்கவேண்டும்' என்று அதில் கண்டிருந்தது.

பொன் முடிப்பும் சுமதி யம்மையிடம் கொடுக்கப் பட்டது. மூவரும் திரும்பினார்களோ இல்லையோ, மலையாளி மீண்டு வந்து, "அந்தப் பொன் முடிப்பின் மேலே மற்றவர்களெல்லோரும் தங்கள் முத்திரை யிட்டிருக்கிறார்கள். நானும் முத்திரை யிடவேண்டும். அதைக் கொண்டு வாருங்கள்" என்று கேட்டான். சுமதி யம்மை அதைக் கொண்டுவந்து கொடுத்தாள். அதே சமயத்தில் வேறொருவன் சாப்பாட்டுக்காக அவசரமாய் வந்து சேர்ந்தான். அவனைச் சிறிது உட்காரும்படி சொல்லச் சுமதி யம்மை சென்றாள். அவள் திரும்பி வந்தபொழுது மலையாளியையும் காணவில்லை; அங்கே பொன் முடிப்பையும் காணவில்லை. அவன் பொன் முடிப்புடன் மாயமாய் மறைந்து விட்டான். சுமதி யம்மைக்குத் துக்கம் தாங்க முடியவில்லை. பொன் முடிப்பைக் கொடுத்தவர்கள் கேட்டால் என்ன செய்வது என்று வருந்தினாள். வெகு காலமாகக் கஷ்டப்பட்டுக் கடைசியில் ஏதோ ஒரு வகையாய் ஜீவனம் செய்து வந்ததிலும் இப்போது மண் விழுந்துவிட்டதே யென்று புலம்பினாள். தனது செல்வக் குழந்தையைப் பிடித்துக்கொண்டு, "உன் வாழ்வு அநியாயமாய்ப் போய் விடுமே. என்னைச் சிறையில் அடைத்து விடுவார்களே. பிறந்த வுடனேயே இறந்திருந்தால் இந்தக் கதி உனக்கு நேரிடாதே!" என்று பன்னிப் பன்னிக் கதறி யழுதாள். கண்ணீர் வடித்துப் பயன் என்ன?

மலையாளியைத் தவிர, மற்ற இரண்டு பேரும் சீக்கிரத்திலேயே திரும்பி வந்தார்கள். தாங்கள் வைத்து விட்டுப்போன பொன் முடிப்பு எவ்விதம் போய்விட்டதென்று தெரிந்து கொண்டார்கள். ஆனால் அதைத் திரும்பக் கொடுப்பதற்குப் பொறுப்பாளி சுமதியம்மையே யென்று வற்புறுத்தினார்கள். அதன் மேல், கிராமப் பஞ்சாயத்தாரிடம் வழக்குத் தொடரப்பட்டது. அவள் என்ன பதில் சொல்லுவது? அவளே யல்லவா ரசீதில் கையெழுத்திட்டது? அஜாக்கிரதையினாலே அவள் பொன் முடிப்பை இழந்துவிட்டாள். அவளுக்கு நாசகாலந்தான் என்று எண்ணவேண்டியதா யிருந்தது. தன் மகள்

சுந்தரியை அழைத்து, "நீ வழக்கு விசாரணையன்று நமது பக்கமாய்ப் பேசுவதற்குக் காளத்திநாதரை இரந்து பணிவாய்க் கேட்டுக்கொள்ளவேண்டும்; அவர் தயாளு; ஏழைகளின் துக்கத்திற்கு இரங்குபவர்; சீக்கிரம் போ" என்று சொன்னாள். "போகிற வழியில் கோவிலுக்கும் சென்று சுவாமியைப் பிரார்த்தித்துக் கொள்" என்று வற்புறுத்தி அனுப்பினாள்.

தாய் சொன்னபடியே சுந்தரி சென்றாள். ஆனால் சிறிதும் பயனில்லை. காளத்திநாதன் முரடர்களாகிய வாதிகளுக்குப் பயந்து, சுமதியின் தரப்பில் பேச மறுத்து விட்டான். சுமதி யம்மைக்காக வழக்குப் பேச ஒருவருமில்லை.

மறுநாள் வழக்கு விசாரணைத் தினம். பஞ்சாயத்தார்களும் குறிப்பிட்ட நேரத்தில் வந்து கூடிவிட்டார்கள். வாதியின் வழக்கு இன்னதென்று வழக்காளிகள் சொல்லி விளக்கினார்கள். சாக்ஷிகளின் வாக்குமூலம் வாங்கியாய் விட்டது. பிரதிவாதியின் பிரதி-யுத்தரம் என்னவென்று கேட்டார்கள். ஒரு வார்த்தையும் ஒருவரும் சொல்லவில்லை. சிறிது நேரம் மௌனம். பஞ்சாயத்தார் ஒருவரோடொருவர் கலந்துகொண்டு தீர்ப்புச் சொல்லத் தயாரா யிருந்தார்கள். சேவகன் எல்லோரையும் அமைதியாய் இருக்கும்படி எச்சரித்து விட்டான். அப்பொழுது பாலகோபாலன் என்ற ஒரு வாலிபன் எழுந்து நீதிபதிகளை நோக்கிப் பேசினான்:

"மாட்சி மிக்க நீதிபதிகளே! நான் சிறுவனாயிருந்த போதிலும் எனக்குத் தங்கள் முன்னிலையில் பேசுவதற்கு உத்தரவு அளிக்க வேண்டும். ஒரு துணையுமற்ற அகதி ஒருத்திக்காகப் பேச முன் வந்துள்ளேன். சில வார்த்தைகள்தான் நான் சொல்ல விரும்புவதும். வாதி தரப்பில் நம்பிக்கையாக வைத்த அடைக்கலத்திற்கு ஒரு வகையாலும் பங்கம் ஏற்படத்தக்கதல்ல என்று மிகவும் அழுத்தமாக வாதித்தார்கள். நான் அதைப் பூரணமாய் ஆமோதிக்கிறேன்: அடைக்கல நிபந்தனை முழுதும் — சிறிதும் தவறாமல் — அநுசரிக்கப்பட வேண்டியது

என்றே நான் இப்பொழுது தெரிவித்துக் கொள்வது. என் கக்ஷியின் விருப்பமும் அதுதான். பொன் முடிப்பை யாரிடம் கொடுப்பது? ரசீதில் என்ன சொல்லியிருக்கிறது? 'நாங்கள் வந்து கேட்டால்தான் பொன் முடிப்பைக் கொடுக்க வேண்டும்' என்றல்லவா கண்டிருக்கிறது? கொடுத்தவர்கள் மூன்று பேர். அந்த மூன்று பேரும் வந்து கேட்கட்டும். நாங்கள் பொன் முடிப்பைக் கொடுக்கச் சித்தமாயிருக்கிறோம். வாதிகளாகிய இவ்விருவர்களிடம் மட்டும் பொன் முடிப்புக் கொடுக்கத்தக்கதல்ல."

இவ்வாறு வாதித்த பாலகோபாலன் ஒரு சட்டமாணாக்கன். நியாயவாதி ஒருவரிடம் சட்டம் கற்று வந்தான். நல்ல அறிவாளி யென்றும், அவன் பிற்காலத்தில் மிகச் சிறந்த வழக்காளி ஆவான் என்றும் பலரும் அவனைக் கருதினார்கள். அவன் சுந்தரிமீது பெருங் காதல் கொண்டிருந்தான். அவள் கண்களில் சுரந்து நின்ற சோகம் அவனுடைய நெஞ்சை உருக்கிவிட்டது. ஆனால் அவன் என்ன செய்ய முடியும்? அப்பொழுதுதான் வழக்காளி உத்தியோகத்தில் சேர்ந்திருந்தான். இதுவரையில் பஞ்சாயத்து முதலிய நீதி ஸ்தலங்களில் பேசியவனல்ல. மிக்க அநுபவசாலிகளும், சிறந்த நியாயவாதிகளுமாகியவர்களைப் பழக்கமற்ற தான் எவ்வாறு தனித்து எதிர்ப்பது என்று மனக்கவலை கொண்டான். ஆனால் எப்படியும் சுந்தரியின் தாயார் பக்கமாகத் தான் வழக்குப் பேசவேண்டுமென்று தீர்மானித்து விட்டான். ஏழைப் பங்காளனாகிய ஈசுவரன் எப்படியும் தன்னைக் கைவிடமாட்டான் என்று நம்பி அவன் மேல் பாரத்தைப் போட்டுப் பஞ்சாயத்து ஸ்தலத்திற்கு வந்திருந்தான்.

தீர்ப்பு அவன் பக்கந்தான் என்று சொல்லும் அவசியமில்லை. அன்று முதல் பாலகோபாலனையே வழக்குப் பேசுவதற்குப் பலரும் விரும்பி அமர்த்தி வந்தனர். புகழும், செல்வமும் பெருகின. அவனுக்கு விவாகம் நடந்தேறியது. அவனுடைய மணப்பெண் யாரென்று கேட்கவும் வேண்டுமா?

Printed at the Indian Express Press, Mount Road, Madars.

தினமணி வெளியீடு—1

மகாத்மா காந்தி—நினைவு மாலை

இந்தியாவின் தனிப்பெருந் தலைவரும் உலக சிரேஷ்டருமாகிய மகாத்மாவுக்கு இந்த மாலையைத் தொடுத்தவர் அவர்தம் "ஸ்வீகார புத்திரி" என்று அபிமானிக்கப் பெற்றவர். வாடாத அன்பு-மலர்களைக்கொண்டு இவர் தொகுத்த இந்த மாலை, புதுமைத் தமிழ் இலக்கியத் திற்கே ஒரு புது மணம் தருகிறது.

பக்த மணியும் தேசபக்த மணியுமாகிய திரு. வி. கலியாணசுந்தர முதலியார் தமது முன்னுரையில் இந்த ஆசிரியரைக் குறித்தும், இந்த நூலைக் குறித்தும் பின் வருமாறு கூறியுள்ளார்:

> "காந்தி அடிகளின் நோக்கால் வீராகியவருள் ஒருவர் திருமதி எஸ். அம்புஜம்மாள் அவர்கள். அம்புஜம்மாள், பாரதநாட்டு வீரருள் ஒருவராகிய எஸ். ஸ்ரீநிவாஸையங்காரின் அருந்தவப் புதல்வியார்.........காந்தியத்தால் தாம் பெற்ற பேற்றை அம்மையார் இந்நூல் வாயிலாக வெளியிட்டுள்ளார்...............இந்நூல், பெண்மைக்கு ஓர் உறையுள்; வீரத்துக்கு ஒரு வைப்பு; காந்தியத்துக்கு ஓர் ஊற்று.".

அழகிய கட்டடம்
ஆப்டோன் படங்கள்
கடிதங்களின் நகல் படங்கள்

96 பக்கங்கள் — விலை அணா 8

தினமணி வெளியீடு—2

ரவீந்திரநாத டாகுர்

வாழ்க்கையும் கவிதையும்

ஆசிரியரைக் குறித்தும் நூலைக் குறித்தும் ஸ்ரீ. கே. எஸ். வேங்கடரமணி தமது முன்னுரையில் பின் வருமாறு கூறியுள்ளார்:

"ரவீந்திரநாத டாகுரின் மெய்ம்மறந்த காதலர்—பக்தர்... மூன்று இலக்கியத்தில்—ஸம்ஸ்கிருதம், தமிழ், ஆங்கிலம்—தம் வழியிலே ஊறிப் பிறவியிலே ஸங்கீதத்தில் லயித்த மனோ நிலை உள்ள ரஸிகர்...கதை போல் ரஸமாக, போற்றத்தக்க முறையில், ஸ்ரீ கி. சந்திரசேகரன் எழுதி யிருக்கிறார்."

"ரவீந்திரருடைய வாழ்க்கை பெரிது; கவிதை உன்னதமானது. இந்த இரண்டையும் கலைக் கண்களோடு பார்த்து இதன் ஆசிரியர் எழுதி யிருக்கிறார்."

"கலைமகள்"

"இதைப் படிக்கும்போது ரவீந்திர நாதரின் ஒப்பற்ற கவிதைகளைப் படிப்பது போலவே ஒரு உணர்ச்சி உண்டாகின்றது. நாம் வாழும் இந்த உலகை மறந்து கவிகள் வசிக்கும் கற்பனை உலகில் சஞ்சரிக்கத் தொடங்கி விடுகிறோம். டாகுர் எழுதியுள்ள பலவேறு நூல்களின் சாராம்சங்களை ஆசிரியர் சந்திரசேகரன் வெகு சுருக்கமாகவும் அழகாகவும் இப்புஸ்தகத்தில் எடுத்துக் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது. டாகுரைப்பற்றி இவ்வளவு சிறந்த விமர்சனம் இது வரையில் தமிழில் வெளிவந்ததில்லை என்றே நினைக்கிறேன்."

"ஆனந்த விகடன்"

6 பக்கங்கள் விலை அணா 8

தினமணி வெளியீடு—3

கைலாஸம்—மானஸரோவர்

(ஓர் அழகான யாத்திரைப் புஸ்தகம்)

வாசகர்களும் இந்த வழிகாட்டியைப் பயன்படுத்திக்கொண்டு வசீகரமான காட்சிகளுக்கிடையே மானஸ யாத்திரை செய்யலாம்.

“உன்னைத் துண்டு துண்டாக வெட்டிக் காக்காய்க்கு இடுகிறேன்’ என்று பயமுறுத்துகிறோமே, இந்த வ[illegible]ம் எவ்வாறு எழுந்தது?—என்பதை அறியவேண்டுமானால் ‘கைலாஸ – மானஸரோவர்’ என்னும் நூலைப் படித்துப் பாருங்கள். நாம் எல்லாம் கைலாசத்திற்குப் போய் வந்தால் எவ்வளவு பெருமையோடு பொய்யோடு சிறிது மெய்யும் கலந்து பேசுவோம்! நம்மைப் போன்றவர் அல்லர் எஸ். வேதாந்தம். குமாஸ்தா நாட் குறிப்பை எழுதுவதுபோல், அவ்வளவு துல்லியமாகத் தாம் இரண்டு ஸ்திரீகளுக்குத் துணையாக மானஸரோவரைக் காண்பதற்கும், கைலாஸத்தைப் பரிக்ரமஞ் செய்வதற்கும் போய் வந்ததைக் குறிப்பிடுகிறார். என்ன சொற்செட்டு!”

“பாரதமணி”

“மானஸ ஸரோவரம்வரை யாத்திரை செய்த ஆசிரியர் இந்தப் புஸ்தகத்தை ஒரு விரிவான டைரியைப் போலே எழுதியிருக்கிறார். இப்புஸ்தகத்தால் பல விஷயங்கள் தெரிய வருகின்றன.”

“கலைமகள்”

96 பக்கங்கள் — விலை அணா

[...]கம்	வரி	பிழை		திருத்தம்
22	23	வந்தே	...	வைத்தே
51	29	கடசியாய்	...	கடைசியாய்
77	11	மாணவர்கள்	...	மாணவர்கள் சிலர்
86	28	தான	...	தான்
88	28	போய்விடப் படாதே.	}	போய்விடப் படாதே!
100	32	மாங்கொட்டையி லிருத்து	}	மாங்கொட்டையி லிருந்து
106	18	மறுத்து	...	அவள்
106	22	என்னுடைய	...	என்னுடன்,
110	12	தட்டான் தன்	...	தட்டான் தன் வீடுவந்து
110	12	மனைவியைப் பார்த்து	}	மனைவியிடம்,
112	24	க் கண்ணீர் சிந்தினாலும்	}	யாரேனும் அழுது
116	27	இரைந்து	...	இரங்கிக்